இதழ் 209

# மண்

ஜேர்மனி / 2021
புரட்டாதி - ஐப்பசி / Sep - Oct



பதவியில் இருந்து ஓய்வுபெறும் ஜேர்மனியின் கான்சிலர்
அங்கலா மேர்க்கல்

Angela Merkel - Chancellor of Germany - (2005 - 2021)

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

015254799233

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

## உலகின் வரலாற்றில் மனித இனம் சந்தித்த கொடிய வைரஸ் ஆபத்துகள்!

இன்றைய அச்சுறுத்தலையும் அவதானமாக செயற்பட்டு முறியடித்தே ஆக வேண்டும்! கொவிட் 19 தொற்று நோய் உலகளாவிய ரீதியில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதுடன் மனித உயிர்களை பலியெடுத்துக் கொண்டும் இருக்ருக்கிறது. இதுவரை உலகில் மரணம் 40 லட்சம் பேரைத் தாண்டியுள்ளது. இலங்கையில் தற்போது டெல்டா பிறழ்வுடன் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது.

புவியில் உயிரினங்களின் மிகையான இனப்பெருக்கம் ஏற்படும் காலத்தில் இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்காக காலத்திற்கு காலம் இவ்வாறுதான் பல்வேறு கொள்ளை நோய்கள் தோன்றி பேரழிவை ஏற்படுத்தி வந்துள்ளதை உலக வரலாற்று ரீதியாக பார்க்க முடியும். புவியின் உயிரின பரிணானக் கோட்பாடும் இயற்கைச் சமநிலை என்ற இந்த நம்பிக்கையையே கொண்டுள்ளது.

”ஜஸ்டினியன் கொள்ளை நோய்” என்ற நோய்த் தொற்று கடந்த 6 ஆம் நூற்றாண்டில் உருவெடுத்து ஏராளமான உயிர்களைப் பலியெடுத்து ஓய்ந்ததாக வரலாறு கூறுகின்றது. கறுப்பு மரணம் என்பது 14 ஆம் நூற்றாண்டில் பலரைப் பலிகொண்ட தொற்றாகும்.”ஸ்பானிஷ் ∴புளு” என்பது 1918-1920 காலப் பகுதியில் உலகின் பெருமளவு நாடுகளில் பல இலட்சம் பேரைப் பலியெடுத்தது.

இவற்றைத் தொடர்ந்து கடந்த 2019 ஆம் ஆண்டில் உருவெடுத்தது கொவிட் 19 தொற்று. உலக வரலாற்றில் கொள்ளை நோய்கள் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களே பெரும்பாலும் மரணத்தைத் தழுவினார்கள். அதாவது உடலில் இயற்கை நோய் எதிர்ப்பாற்றல் உள்ளவர்கள் தப்பிக் கொண்டனர். உடலில் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களை மட்டுமே இயற்கையானது தேர்வு செய்து புதிய சந்ததிகளை தோற்றுவிக்கும் என்றும் கூர்ப்பியலாளர்கள் சிலர் கருதுகின்றனர்.

இந்நிகழ்வானது புவியில் மனிதனின் குடித்தொகையை சமநிலையில் பேண நடைபெறுகின்ற ஒழுங்காக இருக்கலாமென்ற கருதுகோளொன்று உள்ளது. அது உயிரியல் விஞ்ஞானத்தின் ஒரு நம்பிக்கையாகும்.இந்த நோயின் தாக்கம் சனநெருக்கடி உள்ள பிரதேசத்தில் அதிகளவு மரணத்தை ஏற்படுத்தக் காரணங்கள் உள்ளன. மாசடைந்த வளி, நச்சுத் தன்மையான உணவு, துரித உணவுகள், உடற்பயிற்சியின்மை போன்றவை காரணமாக நீரிழிவு, ஆஸ்த்துமா, இதய

நோய்கள், சிறுநீரக நோய், புற்றுநோய், மனஅழுத்தம் போன்றவை உண்டாகி நோய் எதிர்ப்பாற்றல் குறைவடைந்து போகின்றது. முதுமை காரணமாகவும் நோய் எதிர்ப்பாற்றல் குறைகின்றது.

அதேவேளை ,கிராமங்களில் இந்த நோயின் தாக்கம் மிகவும் குறைந்த மரணத்தை ஏற்படுத்தக் காரணங்கள் உள்ளன.நச்சுத்தன்மை இல்லாத ஆரோக்கியமாக உணவு, துரித உணவுப் பழக்கம் குறைவு ,சுத்தமான வளி, போதியளவு உடற்பயிற்சி, மகிழ்ச்சியான வாழ்க்கை போன்றன இதற்குக் காரணங்களாகும்.

நமது தாயக தேசத்திலும் இந்த நோயினால் மரணிப்பவர்கள் நாளந்தம் 200 பேரையும் தாண்டியுள்ளன. அரசு எத்தனையோ தடைகளை விதித்தாலும் மக்கள் கேட்பது மிகக்குறைவு. தடுப்பூசி போட்டுக் கொள்ளவும் பலர் பின்நிற்பதால் மரணம் அதிகரித்து வருகின்றது. நிலைமை மோசமடைந்து வருவது வருத்தத்திற்குரிய விடையமாகும்.

இந்த நோயின் தாக்கத்தில் இருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளும் வழிவகைகள் தொடர்பாக தொடர்ந்தும் அலட்சியமாக இருக்கலாகாது. தற்போதைய நிலையில் நாம் எப்போதும் ஒரு தொற்றாளருக்கு அருகில் இருக்கிறோம் என ஒவ்வொருவரும் எண்ணிக் கொள்ள வேண்டும். நம் பாதுகாப்பை வேறு ஒருவரின் கைகளில் ஒப்படைக்கவும் கூடாது. நாம் கட்டாயமாக இந்த அலை ஓயும் வரை சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

**-ஆசிரியர்-**

## கொரோனா செய்திகள் சில..

-புதியவகை டெல்டா கொரோனா சுமார் 100 நாடுகளில் பரவியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

-கொரோனா உலகில் உணவு விலையேற்றம் காரணமாக 27 கோடி மக்கள் உணவுத்தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர். 113 நாடுகளில் சமார் 4 கோடி மக்கள் கடும் பசி பட்டினியை எதிர்கொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

-கொரோனா காரணமாக விலை உயர்வால் குறைந்த வருமானமுடையவர்கள் சுமார் 300கோடிபேருக்கு ஆரோக்கிய உணவு இல்லை என ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

-ஈராக்கில் கொரோனா வைத்தியசாலை தீ பிடித்துவிபத்தில் 64 கொரோன நோயாளிகள் பலி. 100 பேர்வரை படுகாயம்.

-ஈரானில் கொரோனா மரணங்கள் 1 லட்சம்பேரைக் கடந்துள்ளன.

-அமெரிக்காவில் கொரோனா நெருக்கடியால் 40 லட்சம் சிறுவர்கள் பாதிப்பு.

-கொரோனாவினால் இந்தியா-தமிழ்நாட்டில்மட்டும் 4.829 குழந்தைகள் தாய்-தந்தையரை இழந்துள்ளனர்.

# சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### இயல்வது கரவேல்..

உன்னிடம் ஒரு பொருள் இருக்கின்றது. உன் தேவைக்கு மேலும் அந்தப்பொருள் உன்னிடம் இருக்கின்றது. மற்றவரிடம் அப் பொருள் இல்லை. ஆனால் அவருக்கோ அது அவசியம் தேவையாக இருக்கின்றது அவர் உன்னிடமுள்ள அந்தப் பொருளைத் தனக்குத் தரும்படி கேட்கின்றார். அப்போது நீ என்ன செய்ய வேண்டும். அவருக்கு அதைக் கொடுக்க வேண்டும். அதை ஒளித்து வைத்துக்கொண்டு அது என்னிடம் இல்லை என்று பொய் சொல்லக்கூடாது. வறுமையில் வாடுபவர் உன்னிடம் வந்து கேட்கும்போது நீ இல்லை என்று கூறக்கூடாது. தன்னிடம் இல்லாமையினால் ஒருவர் உன்னிடம் உள்ளதை வந்து கேட்கும்போது, நீ ஒளிக்காமல் கொடுக்க வேண்டும். உன்னால் கொடுக்க முடியும்போது அதைக் கேட்பவர்களுக்கு ஒளிக்காமல் மறுக்காமல் தரவேண்டும்..

### ஈவது விலகேல்..

ஈவது என்றால் கொடுப்பது. பிறருக்கு ஒரு பொருளைக் கொடுப்பது. தருமம் செய்வது. எப்படிப்பட்டவருக்குத் தருமம் - அறம் செய்ய வேண்டும் என்பதை முன்கூறியுள்ளோம். அப்படிப்பட்ட ஏழைக்கு, அவருடைய பரிதாப நிலைகண்டு ஒருபொருளைக் கொடுக்கிறார் ஒருவர். அவர் தருமம் செய்யும்போது ”கொடுக்காதீர்கள்” என்று நாம் குறுக்கே புகுந்து தடுக்கலாமா?..கூடாது. நம்மால் பிறருக்குத் தரமுடியாவிட்டாலும், தருபவர்களைத் தருமம் செய்பவர்களைத் தடுக்கக்கூடாது. தருமம் செய்பவரை அப்படிச் செய்ய விடாமல் தடுப்பது பாவம். பண்பில்லாத செயல். ஆகவே ஒருவர் மற்றவருக் கொடுக்கும் கொடையை, ஈவதை - தருமச் செயலை நீ தடுக்கக்கூடாது. அது கேவலமான செயலாகும். விலக்கேல் என்றால் தடுக்காதே என்று பொருள்.

# மாணவர் கடமை..

இன்றைய மாணவர்களே நாட்டின் நாளைய பிரசைகள். வருங்காலத் தலைவர்களும் அவர்களே. நாட்டுக்கு ஏற்ற நல்ல குடிமக்களாகவும், நாட்டை ஆளும் தகுதி படைத்த நல்ல தலைவர்களாகவும் மாணவர்கள் திகழ வேண்டும்.. பாடசாலைகளில் கல்வி கற்கும் காலத்திலே மாணவர்களிடையே நல்ல குறிக்கோள், சமூக நோக்கு, நாட்டுப்பற்று என்பன முளைகொள்ள வேண்டும். மாணவர்கள் தமக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிறிகும் பயனுள்ளதாக உருவாகுதல் அவசியமாகும். இவை மாணவர் தம் கடமை என்பதை உணரவேண்டும்.

பொதுவாகக் கல்வி கற்போரே மாணவர் எனக்கூறுவர். மாணவரை மாண்பினை ஆக்குவோர், மாண்பினை உடையோர் என்றும் கூறுவர். மாண்பு என்றசொல் கல்வி மாண்பை மட்டும் குறிக்காமல் கற்கவேண்டியவற்றைக் கசடறக் கற்று கற்றபடி வாழவும், அதன்மூலம் மற்றவர்களையும் அறநெறிப்படுத்திச் சமூகத்தில் மாண்பினை உண்டாக்க வேண்டும்.தேன் உள்ள இடத்தை நாடிச் செல்லும் தேனீக்கள் போல மாணவர்கள் அறிவுச் செல்வத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். ”ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது” என்ற முதுமொழிக்கு ஒப்ப ஏட்டுக் கல்வியைப் பயில்வதால் மட்டும் மாணவர்கள் திருப்தி கொள்ளக்கூடாது. மாணவர்கள் பெறும் கல்வி தமக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன்தருவதாக அமையவேண்டும்.

மாணவர்கள் சமூகத்திற்கு தொண்டாற்றும் பண்பினைப் பெறவேண்டும். ”என் கடன் பணி செய்து கிடப்பதே” என்றார் அப்பர் சுவாமிகள். ”பணி புரி பயனை எதிர்பாராதே” என்றார் கிருஷ்ணர். ”உன்னைப்போல உன் அயலவர்களையும் நேசி” என்றார் இயேசுபெருமான். இவர்களது அருளுரைகள் எல்லாம் எதைப் போதிக்கின்றன?.. நாம் உள்ளத்தாலும் உடலாலும் பிறருக்கு உதவவேண்டும் என்ற உன்னத குறிக்கோளையே உணர்த்துகின்றன.

சுருங்கக்கூறின் வருங்காலத்தைச் சிருட்டிக்கும் சிற்பிகள் இன்றைய மாணவர்களே. அவர்களின் ஆக்கமும் அழிவும் சமூகத்தின் ஆக்கமும் அழிவுமாகும்.. இதனை நன்கு உணர்ந்து மாணவர்களை நல்ல நெறியில் இட்டுச் செல்ல ஆசிரியர்களும், அரசும் பெற்றோர்களும் வழிகோல வேண்டும். மாண்புடையோர் மாணவர்கள் என்ற சொல் நிலைக்கும் வண்ணம் மாணவர்கள் செயற்பட வேண்டும்!..

**(யேர்மனி-எசன் நகர தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம் தமிழ்ப்பாடசாலை 2020 ஆண்டுவிழாவில் மாணவர் ஒருவரால் பேச்சுப்போட்டியில் பேசிய விடையம்) இது)**

# தெனாலி ராமன் கதைகள்... (Thenali Raman Stories)



## தெனாலி ராமனும் வழிப்பறித் திருடனும்..

தெனாலி ராமன் ஒரு நாள் மிக நீண்ட தூரம் பயணம் புறப்பட்டார் அவர் போற வழியில் ஒரு பெரிய காடு இருந்தது.அந்தக் காட்டில் நிறைய திருடர்கள் இருக்கிறதும் அந்த வழியாப் போற எல்லாரையும் அடிச்சு, பணத்த கொள்ளையடிக்கிறதாவும் எல்லாரும் சொன்னாங்கள்.எதைப்பத்தியும் கவலப்படாத தெனாலிராமன் அந்த காட்டு வழியில் நடக்க ஆரம்பிச்சாரு.அப்பத்தான் புதுசா ஒரு பயணி அவர் கிட்ட வந்து பயணியே நானும் உங்களோடு கூடவராலாமாஎனக்கு திருடன்கள் என்றால் பயம் அதனால உங்க கூட நடந்து வற்ரேன்னு இதக்கேட்ட தெனாலிராமனுக்கு அந்த பயணியப்பாத்ததும் ஒரு சின்ன சந்தேகம் உண்டாச்சு

இருந்தாலும் தன்னோட நடந்துவர அந்த பயனணிய சம்மதிச்சாருஉண்மையாவே அந்த பயணிதான் திருடன் . காட்டுவழியா நடந்துபோற பயணிகள் கூடவே வந்து அவுங்க தூங்கும் போது அவுங்க வச்சிருக்கிற பொருட்களை திருடுறது தான் அவனோட வேலை.ரெண்டு பேரும் நடந்து போறப்ப ஒரு சத்திரம் வந்துச்சு அங்க தூங்கிட்டு காலையில் நடக்கலாம்னு ரெண்டு பேரும்சொன்னாரு அந்த பயணி நடுராத்திரியில் எழுந்திருச்ச திருடன் தெனாலிராமனோட பைய தேடினான்ஆனா அதுக்குள்ள பணம் ஏதும் இல்லை. இந்த பைல பணம் இருக்கிறத பாத்தோமே எப்படி காணாமப்போச்சுன்னு திருடனுக்கு ஒரே குளப்பம் உடனே மெதுவா வந்து தெனாலிராமன்கிட்ட படுத்துகிட்டான் அமைதியாக.

காலையில் எந்திரிச்சு ரெண்டு பேரும் நடக்க ஆரம்பிச்சாங்கஒரு பெரிய மண்டபத்த ரெண்டு பேரும் அங்க தங்குறதுக்கு முடிவு பண்ணி படுத்து தூங்குனாங்க உடனே திருடன் எந்திரிச்சு மீண்டும் தெனாலிராமன் பையத் தேடுனால் இப்பவும் அதுல பணம்இல்லஎன்னடா இது அதிசயம் இன்னைக்கு தேனீர் குடிக்கும் போது கூட பணம் இருக்குறத பாத்தோமே அப்படி எங்கதான் பணம் போச்சுன்னு கவலப்பட்டான் மறநாள் காலையில் ரெண்டுபேரும் நடக்க ஆரம்பிச்சப்ப இளநீர் கடை வந்துச்சுஉடனே தெனாலிராமன் தன்னோட பையில் இருந்து பணத்த எடுத்துக் கொடுத்தான்இதப்பாத்த அந்த திருடன் தான் தான் திருடன் என்கிறத ஒத்துகிட்டான்

எனக்கு முன்னாடியே தெரியுமேனு சொல்லி சிரிச்ச தெனாலிராமன் அந்த திருடன் அப்படி எங்கதான் பணத்த ஒளிச்சு வச்சீங்கன்னு கேட்டான் அதுக்கு தெனாலிராமன் உன்னோட பைலதான்னு சொன்னாரு என்பைலயானு குளப்பத்தோட கேட்ட திருடன்கிட்ட நீ தூங்குனதுக்கு அப்புறமா பணத்த எடுத்து உன்பைல வச்சிடுவேன் நீ என் பைய தேடி பாத்துட்டு எதுவும் இல்லைனு தூ ங்குனதுக்கு அப்புரமா உன்பைல இருக்குற பணத்த எடுத்து என்பையல வச்சிடுவேன்னு சொன்னாரு இதக்கேட்ட திருடன் தெனாலிராமன் தன்னோட புத்திசாலித்தனத்தால் தன்ன ஏமாத்திட்டத நினைச்சு வருத்தப்பட்டு அங்க இருந்தே ஓடிட்டான்!..

---



## முல்லாவின் தந்திரம்!..

நாள் முல்லா குளத்தில் நீந்திக்கொண்டிருந்த வாத்துக்களில் ஒன்றைப் பிடிக்க முயற்சி செய்தார்.வாத்துக்கள் கரை ஓரமாக வரும்போது முல்லா அதனை எட்டிப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்களோ அவர் கையில் அகப்படுவதுபோல பாவனை செய்து நழுவி கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் முல்லாவின் நண்பர் ஒருவர் அந்தப் பக்கமாக வந்தார்.

வாத்தைப் பிடிக்க முல்லா எடுக்கும் பிரயாசையையும், அதில் அவர் அடிக்கடி தோல்வியடைவதையும் கண்ட நண்பருக்குச் சிரிப்பு வந்தது." என்ன முல்லா அவர்களே வாத்து வேட்டை நடக்கிறது போலிருக்கிறது" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.முல்லா உடனே தமது பையிலிருந்த ரொட்டித் துண்டை எடுத்து குளத்து நீரில் நனைத்துச் சாப்பிடத் தொடங்கினார்." என்ன செய்கிறீர்கள் முல்லா அவர்களே" என நண்பர் கேட்டர்."வாத்து சூப்பில் ரொட்டியை நனைத்துச் சாப்பிடுகிறேன்" என்று தனது ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு கூறிச் சமாளித்தார் முல்லா.

# குட்டிக்கதை..

நிறங்களிடையே யார்? சிறந்தவர், உயர்ந்தவர் என்று சர்ச்சை எழுந்தது. நீலம் சொன்னது. கடல் பரந்து விரிந்து உலகெல்லாம் வியாபித்திருக்கின்றது, அண்டவெளி ஆகாயம் முழுவதும் நீலநிறம்தானே என்றது.

உடனே சிவப்பு நிறம் எழுந்து அனைத்து உயிரினங்களிலுமுள்ள இரத்தம் சிவப்பு. ஏன் உங்களுக்கு அபாய எச்சரிக்கை கொடுத்து உங்களைக் காப்பாற்றுவது சிவப்பு. மற்றது உலகின் விடுதலைக்கு எடுத்துக்காட்டான நிறம் சிவப்பு என்று முழக்கமிட்டது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பச்சை எழுந்து உலகிலுள்ள தாவரங்கள் அனைத்தும் பச்சை. இந்தப் பச்சை நிறத்தாவரங்கள் இல்லாவிட்டால் மழை கிடைக்குமா?..நீங்கள் உயிர்வாழ்வீகளா? நான் இருப்பதால்தான் இந்த உலகம் இயங்குகின்றது என்றது.

இடி, மழை, வானில் மின்னல் நிறங்கள் அனைத்தும் ஒன்றுகூடின அழகான வானவில் தோன்றியது. சண்டைபோடுவதால் என்ன பெருமை எங்களைப் போல ஒருவரோடு ஒருவர் இணைந்திருப்பதால் எவ்வளவு அழகு - பெருமை ”கூடி வாழுங்கள் அதில் கோடி நன்மை ” எங்களுக்குள் நீ பெரியவன் நான் சிறியவன் என்ற சண்டை ஏன்?. ஆகவே பிரிவினை வேண்டாம் எல்லோரும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு வாழ்ந்தால எதையும் சாதிக்கலாம் வாழ்வில் அனைவரும் முன்னேறலாம் என்ற கருத்தே மேலோங்கியது!..

## ஐவகை நிலங்கள்..

குறிஞ்சி:- மலையும் மலைசார்ந்த இடமும்

முல்லை:- காடும் காடுசார்ந்த இடமும்

மருதம்:- வயலும் வயல்சார்ந்த இடமும்

நெய்தல்:- கடலும் கடல்சார்ந்த இடமும்

பாலை:- மணலும் மணல்சார்ந்த இடமும்

# இலக்கணம் அறிவோம்..

**பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்..**

1- பொருட்பெயர் 2- இடப்பெயர்
3- காலப்பெயர் 4- சினைப்பெயர்
5- குணப்பெயர் 6- தொழிற்பெயர்

1-பொருட்பெயர்.- உயிருள்ள உயிர் இல்லாத பொருட்களின் பெயரைக்குறிப்பது பொருட்பெயர். (உதாரணம்:- அமுதன், சிங்கம், கதிரை, கிளி)

2-இடப்பெயர்:- ஒரு இடத்தைக் குறிக்கும் பெயரைக் குறிப்பது இடப்பெயர் (யேர்மனி, இலங்கை, வீடு, கிராமம்)

3-காலப்பெயர்:- ஏதேனும் ஒரு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும். (உதாரணம்:- திங்கட்கிழமை, தை, காலை,, கோடை)

4-சினைப்பெயர்.- பொருட்களின் உறுப்புக்களைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும். (உதாரணம்:- கை, கண், இலை, கிளை)

5-குணப்பெயர்:- ஒரு பொருளின் குணத்தை உணர்த்தும் பெயர் குணப்பெயர் எனப்படும் (உதாரணம்:- நீலம், இனிப்பு, கருமை, செவ்வகம்)

6-தொழிற்பெயர்:- ஏதேனும் தொழிலை உணர்த்துப் பெயர் தொழிற்பெயர் எனப்படும். (உதாரணம்:- படித்தல், பாடுதல், ஆடுதல், விளையாடுதல்)

## தொடர் மொழிக்கு ஒரு மொழி...

1-மற்றவர்களில் அக்கறை கொள்ளாதவர் - சுயநலவாதி
2-தன்னைப்பற்றித் தானே எழுதும் சரிதை - சுயசரிதை
3-பல தெருக்கள் கூடும் இடம் - சந்தி
4-அகரவரிசைப்படி பொருள்கூறும் நூல் - அகராதி
5-முனிவர்கள் வசிக்கும் இடம் - ஆச்சிரமம்
6-வீண் செலவு செய்பவன் - ஊதாரி
7-தேர்தலில் போட்டியிடுபவர் - வேட்பாளர்
8-நம்பமுடியாத கதை - கட்டுக்கதை

## கூட்டத்தைக் குறிக்கும் சில பெயர்கள்...

01-சனம் - திரள்
02-அறிஞர் - அவை
03-நடிகர் - குழு
04-ஆசிரியர் - குழாம்
05-கள்வர் - கூட்டம்
06-மலை - தொடர்
07-ஆடு - மந்தை
08-மான் - கூட்டம்
09-திறப்பு - கோர்வை
10-கல் - குவியல்
11- வைக்கோல் - கற்றை
12- கடை - தொகுதி
13- பல் - வரிசை
14- பூ - கொத்து
15- புகையிலை - சிப்பம்
16- உடு - திரள்
17- நூல் - பந்து
18- புல் - கற்றை
19- நெல் - குவியல்
20- மணி - மாலை

## ஒத்த பொருட் சொற்கள்..

01-அன்பு - நேசம், பாசம், இரக்கம்
02-தாமரை - அம்புயம், பங்கயம், கமலம்
03-பகைவன் - எதிரி, விரோதி, சத்துரு
04-பெண் - மகளிர், காரிகை, மாது
05--உறக்கம் - நித்திரை, சயனம்,துயில்
06-வயல் - கழனி, புலம், பழமை
07-நீர் - தண்ணீர், சலனம், புனல்
08-சோறு - அன்னம், அமுது, சாதம்
09- குளம் - குன்று, பருவதம், பூதரம்
10- மலை - குன்று, பருவதம், பூதரம்
11- யானை - கரி, குஞ்சரம், வேழம்
12- ஒளி - வெளிச்சம், பிரகாசம், சோதி
13- ஒலி - ஓசை, சத்தம், கானம்
14- பாடல் - கானம், கவி, பாட்டு
15- குற்றம் - மாசு, களங்கம், கறை

## நீரின் வகைகள்..

01- மழைநீர்
02- ஆலங்கட்டிநீர்
03- பனிநீர்
04- ஆற்றுநீர்
05- ஊற்றுநீர்
06- அருவிநீர்
07- பாறைநீர்
08- அடவிநீர்
09- வயல்நீர்
10- துரவுநீர்
11- நண்டுக்குழிநீர்
12- குளத்துநீர்
13- ஏரிநீர்
14- சுனைநீர்
15- ஓடைநீர்
16- கிணற்றுநீர்
17- உப்புநீர்
18- சமுத்திரநீர்
19- ஆற்றுநீர்
20- இளநீர்

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 27

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 8 | | | | | 9 | |
| | 7 | | 9 | | 6 | | | |
| | | | | | | 1 | 5 | 7 |
| 1 | | 6 | | | | | | |
| | | | | | | 4 | 3 | 8 |
| | | | 5 | 8 | 9 | | | |
| | | | 1 | | | 5 | 7 | 4 |
| 3 | | 5 | 8 | 9 | | | | 2 |
| | | | 4 | 2 | | | | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 120
### (புரட்டாதி-ஐப்பசி - 2021)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 கல்வி பெறுட் இடங்களில் ஒன்று

06-08 நமது ஊர்களில் பாவனைப்பொருள் இது. இப்போ இது குறைந்துவிட்டது.

வ-இ

11-09 வீட்டில் ஒருவர்-

16-14 நீரிலும் வாழும் நிலத்திலும் வாழும் இது.

கீ-மே

09-01 குழந்தைகளை இப்படியும் அழைப்பார்கள்.

12-04 வாசமுள்ள மலர் ஒன்று.

மே-கீ

06-14 ருசிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் உணவுப்பொருள்.

09-13 ஊட்டச்சத்து நிறைந்தது அனைவரும் அருந்துவது.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

## தமிழில் இத்தனை தமிழா...

அன்னைதமிழ்-01
அன்புத்தமிழ்-02
அழகுதமிழ்-03
அழுத்தத்தமிழ்-04
அருட்தமிழ்-05
அருள்தமிழ்-06
அருமைத்தமிழ்-07
ஆசைத்தமிழ்-08
ஆதித்தமிழ்-09
ஆர்த்தமிழ்-10
ஆழ்தமிழ்-11
ஆறைதமிழ்-12
இசைத்தமிழ்-13
இயல்தமிழ்-14
இதயத்தமிழ்-15
இலக்கியத்தமிழ்-16
இலக்கணத்தமிழ்-17
இளம்தமிழ்-18
இன்தமிழ்-19
இன்பத்தமிழ்-20
இனியதமிழ்-21
இனிக்கும்தமிழ்-22
இணையில்தமிழ்-23
இருந்தமிழ்-24
இறைத்தமிழ்-25
ஈடில்தமிழ்-26
உயர்தமிழ்-27
உன்னதத்தமிழ்-28
எண்தமிழ்-29
எழுத்துத்தமிழ்-30
எழில்தமிழ்-31
எளியதமிழ்-32
ஒண்டதமிழ்-33
ஓங்குதமிழ்-34
கவிதைத்தமிழ்-35
கலைத்தமிழ்-36
கன்னல்தமிழ்-37
கணனித்தமிழ்-38
காக்கும்தமிழ்-39
காதல்தமிழ்-40

## மொழிகள்...

-உலகம் முழுவதும் சுமார் 2.000 மொழிகள் பேசப்படுகின்றனவாம்.
-உலகம் முழுவதும் பிரெஞ்சு மொழி- 26 கோடிபேரும், அரபு மொழி 15 கோடி பேரும் பேசுகின்றனர்.
-உலகில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 37 கோடிபேர்.
-உலகில் சீன மொழியைப் பேசுபவர்கள் 100 கோடிபேர்.
-உலகில் ரஷ்ஷிய மொழியைப் பேசுபவர்கள் 40 கோடிபேர்.
-ஆசியாவில் மட்டும் ரஷ்ஷியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான் மொழிகளை 26 கோடிபேர் பேசுகின்றனர்.
-உலகில் 47 கோடிபேர் ஸ்பானிஸ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறார்கள்.

## சில உயிரினங்களின் ஆயுட்காலம்...

01-மனிதக்குரங்கு - 56 வருடங்கள
02-நீர்யானை - 54 ”
03-கொரில்லாக்குரங்கு-53 ”
04-வாத்து - 50 ”
05-ஐரோப்பாகரடி - 47 ”
06-கடல்நாய் - 46 ”
07-மலைப்பாம்பு - 40 ”
08-தவளை - 40 ”
09-ஒட்டகச்சிவிங்கி- 36 ”
10-ஒட்டகம் - 30 ”
11-காட்டெருமை - 30 ”
12-சிவப்புக்கங்காரு- 30 ”
13-சிங்கம் - 29 ”
14-பேரியன் ஆமை- 152 ”
15-ஆமை - 116 ”
16-திமிங்கிலம் - 90 வருடங்கள்
17-விலாங்குமீன் - 88 ”
18-நன்நீர்ச்சிப்பி - 80 ”
19-ஆசியயானை - 78 ”
20-ஆபிரிக்கயானை- 70 ”
21-கழுகு - 72 ”
22-ஆந்தை - 68 ”
23-அமெரிக்கமுதலை-66 ”
24-குதிரை - 62 ”
25-தீக்கோழி - 62 ”
26-வாலில்லாகுரங்கு- 57 ”

## விலங்குகளின் இளமை மரபுப்பெயர்கள்...

01- ஆடு - குட்டி
02- யானை- போதகம், குட்டி
03- குதிரை -குட்டி
04- பன்றி - குட்டி
05- பூனை - குட்டி
06- குரங்கு - குட்டி
07- சிங்கம் - குட்டி, குருளை
08- அணில் - குஞ்சு, பிள்ளை
09- எலி - குஞ்சு
10- கீரி - பிள்ளை

## பயிர்களுக்கு நன்மை செய்யும் உயிரினங்கள் சில..

01- ஓணான்
02- தேனீ
03- கும்பிடுபூச்சி
04- சிலந்தி
05- செம்பகம்
06- மண்புழு
07- தவளை
08- வண்ணத்துப்பூச்சி
09- உடும்பு
10- காகம்

# பழமொழிகளும் கருத்துக்களும்..

01-அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு.
(ஒற்றுமையே பலம்)
02-அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி.
(உண்மையான நட்பு)
03-அனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
(காலம் மாறி வரும்)
04-உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
(நன்றி மறக்கக்கூடாது)
05-இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
(திருப்திப் படாத மனம்)
06-ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.
(வெறும் புத்தகப் படிப்பு அனுபவமாகாது)
07-ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
(ஒற்றுமையே பலம்)
08-காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
(காலத்தைப் பயன்படுத்து)(காலம் தவறேல்)
09-மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே
(போலியானவற்றி நம்பினால் தோல்விதான் வரும்)
10-அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
(விடாமுயற்சியே அதிக பலனைத் தரும்.

## வாழ்க்கையில் ஐந்து விடயங்கள்..

1-வாழ்க்கையில் கொஞ்சம் சுயநலமாகவும் வாழத்தெரிந்திருக்க வேண்டும்.
2-வாழ்க்கையில் அடிப்படை தெரியவில்லை என்றாலும் கொஞ்சம் அடிப்படை தெரிய வேண்டும்.
3-தனிமையை நண்பனாகத் தெரிந்து இருக்க வேண்டும். இலஇலை என்றால் அது உங்களுக்குத் துரோகமாக மாறிவிடும்.
4-நன்கு நடிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். நடிக்கத் தெரியாதவர்களுக்கு இந்தப் பூமியில் இடமில்லை.
5-வெற்றியைப் போலவே தோல்வியையும் ஏற்றுக்கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும் வெற்றி கண்ணை மறைக்கும்... தோல்வி பாடம் புகட்டும்...

# நல்நெறி பற்றி......

-வி நந்தகுமார்-

## ஒழுங்கம் ஒருக்காலும் வழுக்காது.

ஒழுக்கம் இல்லாத ஒவ்வொன்றும், ஒன்றிற்கும் உதவாமல் போகிறது.
ஒழுக்கம் தவறி வழுக்கி விழாமல், விழிப்பாயிரு வெற்றி காண்பாய்.
ஒழுக்கம் நெறி ஒழுகாத காரணத்தால், ஒடிந்து போய், விழுந்து போகிறோம்.
ஒழுக்கம் தவறுபவர்கள், தீய சக்திக்குள் தள்ளப்பட்டு தவிக்கிறார்கள்.
ஒழுக்கம் கெடும்போது, கூடவே பழியும் வந்து சேர்ந்து பள்ளத்தில்தள்ளிவிடுகிறது.
ஒழுக்கம் கட்டுப்பாடுகளை ஒதுக்கி எறிபவன், ஏற்றம் காணமுடியாமல்ஏங்குகிறான்.
ஒழுக்கம் உடன் இருப்பவன், தீங்கை நினைத்து அஞ்ச வேண்டியதில்லை.
ஒழுக்கக் கேடான வழிகளை விலக்கி, ஒரு ஒழுங்கான வாழ்வுபெறமுயலவேண்டும்.
ஒவ்வொரு நாளும் புத்தம் புதிய நாள், என்பதைப் புரிந்து வாழ் பூரிப்படைவாய்.
ஒவ்வொரு விடிவும், வாழ்வதற்காகவே விடிகிறது, வரலாறு அறிந்து வாழ்.
ஒருகண நேரம் தன்னும் ஒழுங்காகச் சிந்தியுங்கள், ஒப்பற்ற உயர்வு பெறலாம்.
ஒரு நாளைப்போல் அடுத்த நாள் நலமாகக் கிடைப்பது, நம்பிக்கையில்லை.
ஒவ்வொரு இலக்கை வைத்தே, ஒவ்வொன்றையும் அனுபவிக்கிறோம் அடைகிறோம்.
ஒருமைப் பாட்டுடன் உள்ள ஒத்துதவிகள், ஒற்றுமையை வளர்த்துச் செல்கிறது.
ஒத்துதவி செய்யாமல் ஒதுங்கி வாழ முற்படுபவர்கள், ஒதுக்கப் படுவார்கள்.
ஒத்துப்போகும் குணம், ஒவ்வொரு குடும்பத்திலும் குதூகலத்தைக் குவிக்கிறது.
ஒருவரை ஒருவர் தாங்கி, ஒரு ஒப்பற்ற வாழ்வை ஒப்பேற்றும் வலுப்பெற வேண்டும்.
ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் செய்யும்போது,ஒருபுத்தியூகஉலகைப்பார்க்கிறோம்.
ஒரு குறிக்கோளுடன் இருந்தால்தான், வாழும் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உண்டு.
ஒவ்வொரு தியாகமும், புனிதம் கொண்ட பெரும் மகழ்ச்சியின் பொக்கிஷம்.
ஒரு மனிதனுடைய வெற்றி தோல்விகளை அவனது முயற்சியே நிர்ணயிக்கிறது.
ஒவ்வொரு வேலையும், மாறுபட்டவைகள், சலிப்படையாமல் செய்வதே சிறப்பு.
ஒன்றின் தர்க்கமும் அழுத்தமும், மற்றொன்றைப் பாதித்துபள்ளத்தில் தள்ளுகிறது.
ஒப்பிடுவதால் ஏற்படும்பொறாமை, ஒவ்வொருவருடைய மகிழ்ச்சியையும்கலைக்கிறது.
ஒலிக்கு எதிரொலி உண்டு, அதுபோல் நம் செயல்களும் நம்மையே வந்தடையும்.
ஒரு வசனம் தேவையில்லை, ஒரு சொல்லே ஒரு மனிதனை மரணிக்க வைக்கும்.
ஒவ்வொரு அவயவங்களின் தொழிற் பாட்டில், ஒரு அபூர்வ சக்தி இருக்கிறது.
ஒவ்வொரு உடல் உறுப்புக்களும், அதனதன் இடத்தில் நிரந்தரமாக இருக்கிறது.
ஒரு விதை மரமாக காலம் தேவைபோல், மனித வளர்ச்சிக்கும் காலம் தேவை.
ஒவ்வொரு மனிதனும், புது மனிதனாவதற்காகவே, புது வருடம் பிறக்கிறது.

# குறளும் பொருளும்...

## பொச்சாவாமை:-

531. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

532. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

533. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானு லோர்க்குந் தணிவு.

534. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

555. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூா றிரங்கி விடும்.

536. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதுவொப்ப தில்.

537. அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

539. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

540. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

# குறளும் பொருளும்...

**மறவாமை...**

531. பெரிய உவகைக் களிப்பால் வரும் மறதி ஒருவனுக்கு அளவிறந்த வெகுளியினும் தீமையானது.

532. நாள்தோறும் வரும் வறுமை அறிவைக் கெடுப்பது போல, ஒருவனுடைய புகழை அவனது மறதி கொன்றுவிடும்.

533. மறதியால் சோர்ந்து நடப்பவருக்குப் புகழ் இல்லை என்பது உலகில் எவ்வகைப்பட்ட நூல் கற்றார்க்கும் ஒப்ப முடிந்த முடிவாகும்.

534. மனதில் அச்சம் உடையவர்களுக்குப் பாதுகாப்பால் பயன் இல்லை. அதுபோல நல்ல நிலை இருந்தும் மறதி உள்ளவருக்கு எப்பயனும் இல்லை.

535. வரும் துன்பங்களை முன் அறிந்து காப்பாற்ற மறந்தவன் பின் அவை வந்துற்றபொழுது தன்பிழையை நினைத்து வருந்துவான்.

536. யாரிடத்திலும் எக்காலத்திலும் மறவாத்தன்மை பொருந்தியிருக்குமானால் அதற்கு ஒப்பான நன்மை வேறு இல்லை.

537. தன் கடமைகளை மறதி இல்லாமல் செய்தால் அரியவை என்று முடியாத செயல்கள் ஒருவனுக்கு எதுவும் இல்லை.

538. நல்லவர்கள் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்ற வேண்டும். அவற்றை மறந்தவர்களுக்கு ஏழு பிறவியிலும் நன்மை இல்லை.

539. மகிழ்ச்சியால் செருக்குற்றுத் தன் கடமையை மறந்த காரணத்தால் முந்நாளில் அழிந்தவரை நினைத்துப்பார்க்க வேண்டும்.

540. ஒருவன் நினைத்ததை மறவாமல் எண்ணிச் சோர்வில்லாமல் இருந்தால், அவன் கருதியதை அடைதல் எளிதாகும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## சண்டித்தனம்...

"எல்லோரையும் அடித்து நொறுக்குவேன்" இடியோசையுடன் சண்டித்தனத்தில் இறங்கியது மின்னல். ஒரு நொடிதான்.. வளைந்து நொறுங்கி அது முறிந்து விழுந்தது. மண்ணில் இருந்தபடியே மின்னலின் சண்டித்தனத்தையும் வீழ்ச்சியையும் பார்த்த தவளை சொல்லியது..

**"சண்டியாய் எழுவான் நொண்டியாய் விழுவான்"**

## பணிவு...

மண்ணை நோக்கிக் குனிந்திருந்தது தெருவிளக்கு. "இந்தத் தெருவிளக்கு கோழையாய்க் கைகட்டிக் குனிந்து நிற்பதைப் பார்த்தால் வெட்கமா இல்லையா" என்றது காக்கை. நீண்ட காலமாகத் தெருவின் ஓரத்திலே நின்ற தென்னை நெருப்பானது. கூர்ந்து கவனி தெருவில் "ஒளியைப் பாய்ச்சி தொண்டாற்றிக்கொண்டே பெருமையால் தலைவீங்கிப்போகாமல் அடக்கத்தோடு நிற்கிறது தெருவிளக்கு" என்றது தென்னை. மீண்டும் புரிகிறதா என்று காக்கையைப் பார்த்து அது கேட்டது. பிறகு சொன்னது..

**"பணிவு வேறு..குனிவு வேறு.."**

## ஆயுதம்...

ஒவ்வொரு சின்ன ஓசைக்கும் முயல், புதருக்குள் ஓடி ஒளித்தது. இதைக் கவனித்த மான் இன்னொரு மானைப் பார்த்துக் கேட்டது. "முயல் ஏன் அடிக்கடி அஞ்சி நடுங்கி ஓடி ஒளிக்கிறது" இரண்டாவது மான் சொன்னது "உனக்கும் எனக்கும் கொம்பு உண்டு. யானைக்குத் தந்தம் உண்டு. கரடிக்கு நகம் உண்டு. நம்மிடம் நம்மைப் பாதுகாக்கும் ஆயுதம் உண்டு. முயலிடம் எதுவும் இல்லையே" சுருக்கமாக அது சொன்னது.

**"கொம்பில்லா முயலுக்குத் தெம்பில்லா வாழ்க்கை.."**

## சீர்மிகு கல்வி...

**-சத்யா பிரான்சிஸ்-**

அணுகுண்டு ,ஏவுகணை, எறிபடைவல்லமை மிக்க ராணுவம் தேவையில்லை ஒரு நாடு அழிவதற்கு!கல்வித் தரம் குறைந்தால் மாணவர் தேர்வுகளில் மோசடி நிகழ்ந்தால்..தகுதியில்லாத மாணவருக்கு பட்டப்படிப்பு அங்கீகரிக்கப்பட்டால்.. திறனற்ற மருத்துவர்களின் கண்காணிப்பில் நோயாளிகள் இறப்பார்கள்..!

பொறியியல் நிபுணர் கைவேலையில் கட்டிடங்கள் இடிந்து விழும்..!பொருளாதார நிபுணர்களின் திட்டங்களில் நாட்டுச் செல்வத்தைக் கறையான் அழிக்கும்..!மத அறிஞர்களின் பள்ளிகளில் மனிதநேயம் சாகும் பண நெருப்பில் நீதிபதிகளின் தீர்ப்பு வேகும்..!

சிந்தனை மிக்க கல்வி தோல்வியடைந்தால் நாடு சீரழிந்து குட்டிச்சுவர் ஆகும்! (தென் ஆப்பிரிக்க பல்கலைக்கழக நுழைவாசலில் எழுதப்பட்ட வாசகம்)

## தமிழ் மொழியில் இத்தகைய சொல்லாக்கமா!

தொல்காப்பியரின் பேச்சு வகைகள்:-

பேசு ( speak)
பகர் ( speak with data)
செப்பு (speak with answer)
கூறு ( speak categorically)
உரை ( speak meaningfuly)
நவில் ( speak rhymingly)
இயம்பு ( speak musically)
பறை ( speak to reveal)
சாற்று ( speak to declare)
நுவல் (speak with introduction)
ஓது ( speak to recite)
கழறு ( speak with censure)
கரை ( speak with calling)
விளம்பு ( speak with a message)

தொல்காப்பியர் இத்தனை வகையான பேச்சுகளைக் குறிப்பிடுகிறார்.

# குறுக்கெழுத்துப்போட்டி-183
(புரட்டாதி - ஐப்பசி -2021)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-07 உலகில் தற்போது பெரும் மனித அவலம் தோன்றியுள்ள நாடு.
09-11 இளம்பெண்களை இப்படியும் அழைப்பார்கள்.
16-20 ஆண்டவர் யேசுவை இப்படியும் அழைப்பார்கள்.
37-39 இடப்பக்கம் என்பதன் எதிர்ச்சொல்.
43-45 நம்மவர்கள் சிலர் ஒருவர்மீது இது பார்த்து ஒதுக்குவார்கள்.
வ-இ
13-11 வடபகுதியின் இந்த நிலப்பரப்பை இப்படி அழைப்பார்கள்.
26-23 உலோகம் ஒன்று.
28-26 வீடுகட்டுப் பயன்படும் பொருட்களில் இதுவும் ஒன்று.
32-30 நீரிலும் வாழும் நிலத்திலும் வாழும் உயிரினம்.
47-46 சிலருக்கு உடலில் இது வந்தால் விரைவாக மாறிவிடாது.
கீ.மே
26-05 அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நாடு.
28-07 கொடைக்குப் பெயர் போனவன்.
44-30 தேநீர் குடிக்கும் பாத்திரத்தை இப்படியும் அழைக்கலாம்.
48-27 சிலர் இக்குணத்தால் அழிவார்கள்.

மே-கீ
01-36 சிலர் இதில் மூழ்கி பணம் பொருளையும் மரியாதையையும் இழப்பர்.
18-39 சிலருடைய தலையில் இது பிடித்து அலைவார்கள் என்று சிலர்கூறுவர்.
26-47 கூடை தயாரிக்கப் பயன்படும் பொருட்களில் ஒன்று.
28-49 யானக்கும் விருப்பம் மனிதருக்கும் விருப்பமான இனிப்பான உணவுப்பொருள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

## விடுகதைகள்..

01-ஒரு தட்டில் இரண்டு ஓடுநர்கள் யார் அவர்கள்?..
02-பார்ப்பதற்கு 5 கால்கள் எண்ணிக்கையில் 4 கால்கள் எது?..
03-பாளைபோல பூத்திருக்கும் தலையில் சூடமுடியாத பூ எந்தப் பூ?..
04-கிண்ணம் நிறையத் தண்ணீர் குருவி குடிக்க வழியில்லை எந்தக் கிண்ணம்?..
05-ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர் எந்த நீர்?..
06-வருவது தெரியும் போவது தெரியாது அது என்ன?..
07-காடு மேடு எல்லாம் கிடக்கும் கால் வைத்தால் கதறவைக்கும் அது என்ன?..
08-தன்னை நம்பாதவன் கூடவே வருவான் அவன் யார்?..
09-அந்தரத்தில் தொங்கும் அழகான வீடு அது என்ன?..
10-வட்ட..வட்ட தகரக்காரன் நொருக்கிவிட்டால் மா ஆவான் அவன் யார்?..

(**மணிக்கூடு, யானை, வாழைப்பூ, இளநீர், கண்ணீர், புகை, முள், நிழல், குருவிக்கூடு, அப்பளம்)**

## ஒன்று வேண்டினால் ஒன்று இலவசம்..

01-கோபத்தை வாங்கினால் இரத்தக்கொதிப்பு இலவசம்.
02-பொறாமையை வாங்கினால் தலைவலி இலவசம்.
03-வெறுப்பை வாங்கினால் வேண்டாத பகை இலவசம்.
04-கவலையை வாங்கினால் கண்ணீர் இலவசம்.
05-நம்பிக்கையை வாங்கினால் நண்பர்கள் இலவசம்.
06-உடற்பயிற்சியை வாங்கினால் ஆரோக்கியம் இலவசம்.
07-அமைதியை வாங்கினால் ஆனந்தம் இலவசம்.
08-நேர்மையை வாங்கினால் நித்திரை இலவசம்.
09-நீதியை வாங்கினால் நிம்மதி இலவசம்.
10-அன்பை வாங்கினால் அனைத்தும் நன்மைகளே!..

## பொன் மொழிகள்...

(1) சோறு பொங்கும்போது தீயைக் குறைக்க வேண்டும். கோபம் பொங்கும்போது வாயைக் குறைக்க வேண்டும்.
(2) எத்தனை மிதி வேண்டினாலும் விதியை நொந்ததில்லை துவிச்சக்கரவண்டி

# இன்பத் தமிழ்...!

குண்டக்க என்றால் என்ன? மண்டக்க என்றால் என்ன?

1. அந்தி, சந்தி
அந்தி : மாலை நேரத்திற்கும் , இரவுக்கும் இடையில் உள்ள பொழுது.
சந்தி: இரவு நேரத்திற்கும் , காலை நேரத்திற்கும் இடையில் உள்ள விடியல் பொழுது.
2. அக்குவேர், ஆணிவேர்
அக்குவேர் : செடியின் கீழ் உள்ள மெல்லியவேர்.
ஆணி வேர்: செடியின் கீழ் ஆழமாக செல்லும் வேர்.
3. அரை, குறை:
அரை : ஒரு பொருளின் சரி பாதி அளவில் உள்ளது.
குறை : அந்த சரிபாதி அளவில் குறைவாக உள்ளது.
4. அக்கம், பக்கம்:
அக்கம்: தன் வீடும், தான் இருக்கும் இடமும்.
பக்கம்: பக்தத்தில் உள்ளவீடும், பக்கத்தில் உள்ள இடமும்.
5. அலுப்பு, சலிப்பு :
அலுப்பு: உடலில் உண்டாகும் வலி.
சலிப்பு: உள்ளத்தில் ஏற்படும் வெறுப்பும், சோர்வும்.
6. ஆட்டம், பாட்டம்
ஆட்டம் : தாளத்திற்கு தகுந்தவாறு ஆடுவது.
பாட்டம் : ஆட்டத்திற்குப் பொருத்தமில்லாமல் பாடுவது.
7. இசகு , பிசகு
இசகு: தம் இயல்பு தெரிந்து ஏமாற்றுபவர்களிடம் ஏமாறுதல்.
பிசகு: தம்முடைய அறியாமையால் ஏமாறுதல்.
8. இடக்கு , முடக்கு
இடக்கு : கேளியாக நகைத்து, இகழ்ந்து பேசுதல்.
முடக்கு : கடுமையாக எதிர்த்து, தடுத்துப் பேசுதல்.
9. ஏட்டிக்குப் போட்டி
ஏட்டி: விரும்பும் பொருள் அல்லது செய்வது. ( ஏடம் : விருப்பம்)
போட்டி: விரும்பும் பொருள், செயலுக்கு எதிராக வருவது.
10. ஒட்டு , உறவு
ஒட்டு : இரத்த சம்பந்தம் உடையவர்கள்.
உறவு : கொடுக்கல் சம்பந்தமான வகையில், நெருக்கமானவர்கள்.

## "மண்" - 208 அட்டைப்படக் கவிதை..




ஆண்டுகள் நாந்கிற்கொரு அகிலத்தின் கொண்டாட்டம்
அனைத்து மெய்வல்லுநர்கள் அணியணியாய் பெருங்கூட்டம்
தாண்டுகின்ற தடைகளைத் தகர்த்திடும் போராட்டம்
தனியாக அணியாகத் தங்கம் வெல்லும் களியாட்டம்!..

கண்டங்கள் ஐந்தும் புதுக்களிப்படனே நோக்குமே
கற்கண்டு தேனில் கலந்து கண்களிலே வார்க்குமே
துண்டான தேசங்களைத்தும் ”டோக்கி”யோவில் தேக்கமே
துருவ நட்சத்திரங்களாலும் தோழமையைப் பார்க்குமே!..

வெண்கலமோ தங்கமோ வெள்ளியோ கழுத்திலாடுமே
வெற்றிப் பதக்கம் பெறுவதென்ற வேட்கையில் மிதக்குமே
கண்களிலே ஒளிவெள்ளம் கனவினையே வார்க்குமே
கரவொலியில் வான்மகளின் காதின்னைப் பிளக்குமே!..

மேன்மையான உழைப்பினிற்கு உயர்விருதுகள் சேருமே
உடலுழைப்பும் பயிற்சியுமே உரமாய் வளம் சேர்க்குமே
பண்பட்ட மெய்வல்லுநரை பாரே வியந்து நோக்குமே
பாராட்டும் பரிசுகளும் பதக்கங்களாய் குவிக்குமே!..

**-அம்பலவன் புவனேந்திரன்-**

# கருணை இல்லா கண்கள்...

-ப பசுபதிராசா-

கண்ணுக்தெரியாத நுண்ணுயிர் ஒன்று
கண்ணுக்குள் விரலைவிட்டு விரட்டுகின்றது
உலக அதர்மங்கள் கூடிவிட்டதன் அடையாளமாம்
நன்மைகளில் நம்பிக்கை உடையோர்களின் மனச்சாட்சி
காலா காலமாய் நடப்பதுதான் இலக்கற்ற குரல்களின் எதிரொலி
படைத்த இயற்கைக்குப் பூமியை நடத்தத் தெரியணுமே..
கொடுமைகள் பக்கம் தராசு உயர, நன்மை தடுத்தாட்கொள்ளல்வேண்டும்
என்று நியாயம் வடிவெடுக்கும் காலக் கட்டமைப்பு கொரோனா
என்று அதை அடைப்பிட்டுக் கொண்டோம் அவ்வளவுதான்
கொரோனா பற்றி மனிதன் மதிப்பிட்டவை அனைத்தும் பொய்
பொய்களை வைத்தே அதிலும் பிழைக்கப் பிறப்பிட்டவை - அதில்
ஆத்ம திருப்திக்கான ஆறுதல் பரிசுகள்தான் மருந்து கண்டுபிடிப்பு
அறிவின் முற்பாய்ச்சல் என்று யாரும் ஆர்ப்பரிக்க வேண்டாம்
சரியான விதி அறிந்து மருந்து கண்டுபிடிப்பின் மருந்தே
உருவாகும் இருநூற்றுக்கும் மேற்பட்டவையல்ல
காசு நிறுவனங்களின் பணப்பந்தயம் பல்கிப் பெருகிறது
எதையும் காசாகப் படைக்கும் கனவான்களுக்கு
கனவுகள் பிரசவிக்கும் குபேரக் கண்காட்சி
ஒவ்வோர் நாடும் பொய்களுக்கே புகை போடுகின்றன
போகின்ற உயிர்களை பிடித்து வைக்கும் போராட்டத்தில்
கருணைக்குப் பங்கில்லை காசுக்குத்தான் பங்கு
உடனே உயிர் கொல்லும் நோய்க்கிருமிக்கு
ஒரு ஆறுமாத இடைவெளியில் மருந்து கண்டறிதல் மாயவித்தை
நோயாளிகளின் குணம் குறிகளை வைத்தே மருந்தைக்
கண்டறிதல் ஆரம்பமாக வேண்டும். ஆனால் இங்கே சுகதேகிகளின்
உடல்நிலையைக் கவனித்தே மருந்து ஆக்கியிருக்கின்றனர்
அப்போ..நோயாளிக்கு மருந்தை ஏற்றும்போது விளைவு
இயற்கை மனிதனுக்காகத் துன்பம் விளைவிக்க
மனிதன் தன் அறிவால் சரி செய்ய வேண்டும் - இங்கே
மனிதனும் பிழையான வழியில் பயணித்தால்
முடிவு கைக்கெட்டும் தூரத்தில்!...

## 'லோக்டவுன்'......

நுண்தொற்றுக் கதவடைப்பில்
ஏழை சமூகத்தின் பொருளாதார
வளர்ச்சி
பனைமரத்தின் உச்சியில்
தலைகீழாய் தொங்குகிறது..

ரகசிய காதலியைப் போல
அரசியல் சமூகத்தினர்
செல்வத்தைச்
சுவைத்து
விழா கொண்டாட்டம்..!

முக்கனிகளை
உண்டு களிப்பவர்கள்
இருப்புப் பெட்டியில்
அடகு வைத்த இதயத்தை
மீட்க முடியாமல் தவிப்பு..!

ஏழை எளியவர்களின்
பசியைப்பாசத்துடன்
வறுமை உண்ணுகையில்
"லோக்டவுன்" கதவடைப்பு!
தூரத்து நிலாபோல
எட்டாக்கனியாக
எட்டி நிற்கிறது எளியவர்களின்
அன்றாட வருமானம்..!

ஒருவேளை சோற்றுக்காகஊரெங்கும்
ஏங்கித் தவிக்கும் குடும்பங்கள்
திசை தெரியாத வறுமைச்சூழலில்
சிக்கியிருக்கின்றன..!

சுவைமிகுந்த மதுரசத்தைப்
பொரித்தக் கோழியுடன்
கொண்டாடும் உயர் வர்க்கத்தினர்
கொரோனாவுக்கு அஞ்சி
வீடுகளில் லோக்டவுன்..!

**- சத்யா பிரான்சிஸ் -**

## உப்பிட்டவர்கள்..

நெருக்கடிக் காலம் கொரோனாவின்
சர்வாதிகார ஆட்சி தொடர்கிறது..
நாடெங்கும் கதவடைப்பு
எளியவர்களைப் பிழிந்து
வேலியில் காயப்போட்டுள்ளது..

நடமாட்டக் கட்டுப்பாடு
ஆணை பிதுக்கிய
வெங்காயச் சாற்றைக்
கண்களில் ஊற்றி வருகிறது..!
மக்கள்வேலை இழப்பு
வருமானம் இன்றி
வீடுகளில் தவிப்பு!

உதவி எங்கிருந்து வரும்?என
இல்லாதவர் விழிகளில் ஏக்கம்..!
வீடுகளில் நிழலாகப் பரவியத்
துக்கம்!கண்ணீர் வழிந்தோடிய
கன்னங்களில் வீக்கம்! அரசின்
உதவி
கொசுக்களாகக் கைகளைக்
கடிக்கிறது..
நுண்தொற்றுப் பிடியில்
கஞ்சிப் பானைக்கும் வழியின்றி
பசிப் பட்டினியில் தவிப்பு..!
வெள்ளைக் கொடி பறக்கிறது..!
மக்களின் துயர நிலையறிந்து
அன்பு இதயங்கள்
ஆங்காங்கே உப்பிட்டு
வருகிறார்கள்..
உப்பிட்டவர்களே
இல்லாதவர்கள் இன்று
கைக்கூப்பி வணங்கும்
தெய்வங்கள்!

# கொரோனா பேசுகிறேன்!...

ஏன் மனிதா என்னை கண்டு பயப்படுகிறாய்
நான் கிருமி அல்ல..கடவுளின் தூதுவன் .
ஆயிரமாயிரம் பட்டு பூச்சிகளைக்
கொன்று பட்டாடை உடுத்தியவன்தானே நீ
ஆயிரமாயிரம் விலங்குகளை
கொன்று பயணித்தவன் தானே நீ ....
ஆயிரமாயிரம் மரங்களைஅழித்து...
நாற்காலியில் அமர்ந்து தேனீர்
பருகியவன் தானே நீ
ஆயிரமாயிரம் பறவைகளை அழித்து...
தொலைபேசியில் உரையாடியவன்தானே நீ
இப்போது புரிகிறதா வலிஎன்றால்என்னஎன்று
பணத்துக்கு ஒரு நீதி..வீதிக்கு ஒரு ஜாதி. ...
பெயருக்கு ஒரு வாழ்க்கை ....
என வாழ்ந்தவன் தானே நீ ..இப்போது
என்னை கண்டு பயந்து முடங்கி ஒளிகிறாய்
வானத்தை போல் பரந்த மனம் கொண்டாயா
நிலத்தைபோல் சமமாக பிறரைநினைத்தாயா
நீர் போல் தன்னலமின்றி தாகம் தீர்த்தாயா
காற்றைபோல்அனைத்தையும்அரவணைத்தயா
நெருப்பைபோல்தீயதைபொசுக்க துணிந்தாயா
பின் ஏன் வாழ துடிக்கிறாய் ?
காற்றை மாசுபடுத்தவா ?
இயற்கையாய் அழிக்கவா ?
பூமியை கழிப்பிடமாக்கவா ?
ஒன்றை மட்டும் புரிந்துகொள் ..
உலகம்உனக்காகமட்டும்சுழலும்பம்பரம்அல்ல
இந்த உண்மையை உணர்ந்தால்..
கடவுளையே கண்டுபிடித்த உனக்கு ...
எனக்கானமருந்தினைகண்டுபிடிப்பதுசிரமல்ல
அச்சம் கொள்ளாதே. ..நானேவெளியேறுவேன்
பூமியில்உள்ள சில நல்லஉள்ளங்களுக்காக
உலகம் நிறைந்த பிஞ்சு குழந்தைகளுக்காக

# ஊழல் ஜனநாயகம்!..

அரசு அலுவலகங்களில் ஊழல்
பேயாய் தலைவிரித்தாடுகிறது
மாண்பை இழந்த மந்திரிகள்
பாய்விரித்து
ஊழல் தலையணையில் உறக்கம்
கொண்டுள்ளார்கள்..!
உயர்ந்த கோபுரங்கள்
தாழ்ந்த உள்ளங்களைப் பிரதிபலிக்கும்
ஜனநாயக அரசின் மாற்றம் காணாத
ஒரே கொள்கை
ஊழல் எனப் பிரகடனம்..!
தகுதி இல்லாதவர்
ஆட்சிபீடத்தில் அமர்கையில்
ஜனநாயக தாயின் சேலை
பட்டப்பகலில் துகிலுரிக்கப்படுகிறது..
பணநாயகம் ஜனநாயகத்தைக்
கொத்தித் தின்கிறது..!
ஏழைகள் பாரம்பரிய
பிச்சைக்காரர்களாக
லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்களாக
அகில உலக பணக்கார
சாம்ராஜ்யத்தின் அதிபதிகளாக
உருமாற்றம்..
மக்கள் வாழ்க்கை விக்கிட்டு
வீதியில் கிடக்கிறது..!
குற்றச் செயல்களை
அடித்தளமாகக் கொண்ட
ஜனநாயக மாளிகை குடிபோதையில்
கால்வாயில் கவிழ்ந்துள்ளது..!
அரசியல் ஊட்டும் மாயப்போதையில்
சிக்கிச் சீரழிகிறது
சிந்தனைமிகு இளைஞர் கூட்டம்..!
அரசியல் தலைமுடிக்குச்
சிக்கெடுத்து வந்தவர்கள்
தலையை அடமானம் வைத்த கதை
காக்கா நரி கதையாய்...

# எத்தனை வட்டம்!..

வதிரியான் என்றிங்கள்,
நெல்லியடியான் என்றிங்கள்,
அல்வாயான் என்றிங்கள்,
இதுக்க துன்னாலையான்
எண்டு வேற சொல்றிங்கள்,
தென்மராட்சியான் என்றிங்கள்,
வலிகாமத்தான் என்றிங்கள்,
வன்னியான் என்றிங்கள்,
மட்டக்களப்பான் எண்டும்
கிழக்கான் என்றும் வடக்கான்
மலையகத்தான் என்றும்
மெல்லமா வேற சொல்றிங்கள்!..

கொழும்பான் என்றிங்கள்,
தோட்டக்காட்டான் என்றிங்கள்,
தீவான் எண்டு சொல்றிங்கள்,
அவர் கடல் தொழில் என்றிங்கள்,
இவர் சீவல் தொழில் என்றிங்கள்,
புலம்பெயர் தமிழன் எண்டும்
இந்தித் தமிழன் என்றும்
இந்தியாவில் வசிக்கும் இலங்கைத்
தமிழன் என்று சொல்றிங்கள்!..

அதையும் பிரிச்சு
சுவிஸ் தமிழர் பேரவை என்றிங்கள்,
அதுக்குள்ள டீரெயிலா போய்,
புலம்பெயர் பருத்தித்துறை ஒன்றியம்
புங்குடுதீவு ஒன்றியம் என்றிங்கள்,
அதையும் மேவி சிலர், பிரிட்டன்
பழைய மாணவர் ஒன்றியம்
கனடா கரவெட்டி ஒன்றியம்
அந்த ஒன்றியம் இந்தஒன்றியம் என
நூற்று ஒன்றியம் என்றிங்கள்!..

அதையும் ஊர் ஊரா துளைச்சு
லண்டன்வாழ் இளவாலை மக்கள்
நலன்புரி சங்கம் என்றிங்கள்
ஊர்ச்சங்கம் (சாதி) சங்கம் என்றிங்கள்
கோவில் சங்கம் என்றிங்கள்
(இந்த ஊரயும் அந்த ஊரயும் இந்தச்
சாமியையும் ஜொய்ன் பண்ணி)

இதெல்லாத்தையும் விட
"லண்டன் வாழ் பிரெஞ்சு தமிழர்"
ஒன்றியம் என்றிங்கள் மேலாக
விளையாட்டுச்சங்கம் வியாபாரச் சங்கம்
என்றும் சொல்லுறீங்கள்
இதுக்குள்ள இடக்கிட "தமிழீழமே மூச்சு"
எண்டு பொங்கியும் எழுறிங்கள்!..

எண்ணுக்கணக்கான சங்கங்கள அமைச்சு,
அதில வாற தலைவர் பொண்டாட்டி
செயலாளர் பொண்டாட்டி பிரச்சனை
எல்லாம் சரிக்கட்டி கிடைக்கிற
மிச்சஞ்சொச்ச நேரத்தில ஒரு
ஈவென்ரை ஒர்கனைஷ் பண்ணி ஆத்தல
போட்டு ஊர்ல எண்டா ஆடு ஒண்ட
போட்டு, ஆட்டயையும் போட்டு மட்டன்
றோலயும் கொத்துரொட்டி பார்சல
வீட்டுக்க கொண்டாந்து பிறீசர்ல
போட்டுக்கொண்டிருந்தா, நான் "இலங்கை
சோஷலிச குடியரசின்" விசுவாச
குடியாளனா செத்துப்போறத தவிர வேற
வழியில்லை.
"ஸ்ரீ லங்கா மாதா..அப ஸ்ரீஸ்ரீ,.....
லங்கா.. நமோ நமோ நமோநமோ மாதா...

**சுந்தர சிறி பரினி..**
**சுரேந்தி..**

# அன்னை திரேசா!..

-கவிவாணன் இரா சம்பந்தன்-

அன்னை திரேசா
உலகமே கைதொழும்
உன்னதத் தாயாவார் ,
உலக மக்களெல்லாம்
அன்னையின் சேய்களாவார் !

அல்பேனியாவின் வெண்புறா
அகிம்சை மொட்டவிழ்ந்த
தேசமது நோக்கியே
சிறகுகள் விரித்ததன்று !

அன்னையைப் பெற்றெடுத்தது
ஒரு தேசமென்றாலும்
அவரைத் தத்தெடுத்தது
இன்னொரு தேசமாகும் .

அகிலம் போற்றிடும்
அந்த மாதரசியின் மகிமையை
என் பேனாவுக்குள்
எப்படித்தான் நிரப்புவேன் ?

இளவயதில் துறவறம்
இயேசுவிடம் அடைக்கலம்
உளநலம் பாதித்தவர்கள்
அன்னையிடம் அடைக்கலம் !

இனம் , மதம் , மொழிகளெனும்
எல்லைகள் கடந்து சென்று
அன்புக் கரங்களினால்
அனைவரையும் அரவணைத்தவர் . .
. .
சிறகிழந்த பறவைகளுக்கும்
சின்னச் சின்னக் குருவிகளுக்கும்
கூடுகள் அமைப்பதற்காய்

கல்கத்தா வீதிகளில்
கனல் கக்கும் வெயிலில்
யாசகம் பெற்றவர் !

சிறுவர் பராமரிப்பு இல்லங்கள்
முதியோர் காப்பகங்கள்
மரிப்போர் இல்லமென
எண்ணிலா நிறுவனங்கள்
ஆதரவற்றோரின் புகலிடங்களாய். . .

குப்பைத் தொட்டிகளிலே
வீசியெறியப்பட்ட மழலைகளை
வாரியெடுத்து வளர்த்த
கருணையுளங் கொண்ட
கன்னித் தாயவர் !

வறுமை , நோய் , யுத்தம்
சாதீயத்தின் சன்னதம்
மதங்களின் கைகலப்புகளினால்
களைத்து இளைத்த மக்களின்
கண்ணீரைத் துடைத்து
காயங்களுக்குக் கட்டுப் போட்டவர் !

சீழ்வடியும் தொழுநோயாளர்களைத்
தன்கையால் தொட்டளைந்து
துயர் களைந்தவர் !
உயர் விருதுகளையும்
உலகெங்கும் பெற்றவர் .

இப்புவியின் இருள் விரட்டிய
அந்தத் தேவாலய மெழுகுவர்த்தி
அணைந்த பின்னும் ஒளிர்கின்றது !
இல்லங்களிலும் உள்ளங்களிலும்! . .

## சுகம் பலவிதம்!..

இளவேனிற் காலமதில்
இயற்கையின் சுகம்
இளந் தளிர்தனை
நெருடுதல் ஒரு சுகம்
பூரண நிலவைப்
பார்ப்பதில் நல் சுகம்
பூக்களின் வண்ணங்களை
ரசிப்பதில் சுகம்!..

காலைக் கதிர் கண்
கூசிடச் சுகம்
சோலைத்தென்றல்
உடல் தழுவிடசுகம்
வேலைக் களைப்பில்
ஓய்வெடுக்கச் சுகம்.
ஓலைப் பாயில்
படுத்துறங்க எவ்வளவுசுகம்!...

அன்னையின் மடியே
பிள்ளைக்குச் சுகம்
அவளுக்கோ பிள்ளையின்
முகம்பார்க்கச் சுகம்
கூடிப்பேசிச் சிரித்துக்
களிப்பதில் ஒரு சுகம்
கூடியே உறவுகளுடன்
கும்மாளமடிப்பதில் சுகம்!..

பள்ளிப் பாடங்களை
நினைப்பதில் சுகம்
பழைய தோழர்களைப்
காண்பதில் சுகம்
கவிக்காக கற்பனை
வளர்ப்பதில் சுகம்
கவிதைகள் எழுதி
மகிழ்வதில் நல் சுகம்!...

**-இராஜேஸ்வரி சிவராசா-**

## உள்ளங்களிலும்! . .

சூரியன் தன்கதிர்களை ஒளி பரப்பிலே
பூமித்தாய் முழுவதும் வெளிச்சமாகிறதே
குடிசையில் குப்பிவிளக்கு ஒளிர்கையிலே
எழை மக்களின் மனதினிலே
வெளிச்சமாகின்றது!..

கோலதீபம் மெழுகுகுதிரி ஒளிர்கையிலே
கோயிலும் உள்ளமும் வெளிச்சமாகின்றது
குடும்பம் நோய்நொடியின்றி வாழ்கையிலே
வீடெ வெளிச்சமாக ஒளிர்கின்றது
மனிதர்களின் மனச்சாட்சி பேசுகையிலே
மனமது வெளிச்சமாகி விடிகின்றது!..

**-ஜெயா நடேசன்-**

## பெரியார்!...

அடிமைச் சாசனங்களையும்
மடமைக் கருத்துகளையும்
அறிவுக் கத்தியால் வெட்டிச்
சாய்த்தவர்தான் அந்தத்தாடிக்கிழவன்!..

## முதிர்கன்னிகள்!..

வரதட்சணைக் கொடுமை
கல்யாணச் சந்தையில்
விலைபோகாத சரக்கு
அழகான முதிர் கன்னிகள்!..

## அவமானம்!..

நல்லது செய்ததை மறந்த
நன்றிகெட்ட மனிதரை
நாய் என்று திட்டாதீர்
நாய்களுக்கு அவமானம்!.

**-சிவா-**

## ஊர்க் காற்று!..

உள்ளத்தில் உவகை தரும் உதயத்துச் சூரியன்
கள்ளமற்று கண்சிமிட்டி கருமைதனைப் போக்கிடுவான்
நாற்றிசையும் பண்ணிசை நாயனமும் ஒலித்திடும்
நல்லைக்கந்தன் மணியோசை நாதமாய் இனித்திடும்
முற்றத்து மல்லிகையும் மொட்டவிழ்ந்து மணம் பரப்பும்
சுற்றமெலாம் குயியோசை சுபராகம் இசைத்திடும்
தென்னோலைக் கீற்றும் தென்றலில் அசைந்தாடும்
தெம்மாங்கு கீதம் தேனிசையாய் தவழ்ந்துவரும்
வயல்களில் நெற்கதிர்கள் வசந்தத்தை வரவேற்கும்
கடற்பரப்பில் வாடைக்காற்று கடலலையை முத்தமிடும்
சுழன்றுவரும் சோழகக்காற்று சோகத்தை விலக்கிவிடும்
பக்குவமாய் பருவக்காற்று பசுமை நினைவுகளைத் தரும்
நிலாமகள் தூதுவிட நித்திரையும் நாம் மறப்போம்
நீண்ட மணல்பரப்பில் நின்மதியும் கண்டிருப்போம்
காற்றாடக் கண்ட சுகம் கனவாகிப் போனதுவோ
நேற்றாகிப் போனாலும் நினைவுகளே ஊர்க்காற்று!..

**-கலைவாணி ஏகானந்தராசா-**

## அமைதி தனிமை!..

அதிகம் விரும்பு
ஆர்ப்பாட்டம் இல்லாமல் இரு!
இயன்றவரை தொடாமல் இரு
ஈன்றவளாயினும்
முக கவசமுடன் பேசு!
உல்லாசம் உற்சாகபானம்
எல்லாம் மற
ஊர்சுற்றுவதை நிறுத்து!
எறும்புகள்போல் மொய்க்காதே
ஏற்றம் இனிமை தரும்
சட்டத்தை மதி!

ஐவருக்கு கீழ் மேல்
இருந்தாலும் கூடாதே
ஒத்துழைப்பு அரசுக்கு கொடு!
ஓங்கி நிற்கும் உன் வாழ்வு
ஔவைமொழியாக கருது
அதே கொரோனா அழிவதற்கு வழி!..

# சிரிப்போ!...சிரிப்பு!...



கணவன்:- ஏன் மரக்கறிக் கடையில் அம்புலன்ஸ் நிற்கிறது?..
மனைவி:- அது வேறொன்றும் இல்லை மரக்கறி விலை அதிகரித்துவிட்டதனால் நிறையப் பேர் மயங்கிவிட்டினமாம்!..

மனைவி:- நான் இறந்தபின் எனக்காக என்ன கட்டுவீங்கள்..
கணவன்:- உனக்காக உன் தங்கைக்குத் தாலி கட்டுவன்..

மருத்துவர்:- உங்களுக்கு வந்திருப்பது என்ன வியாதி என்று தெரியவில்லையே?..
நோயாளி:- அப்படி என்றால் நீங்களே ஒரு பெயர் வைத்துவிடுங்கோ டாக்டர்..

ஒருவர்:- புத்தகத்துக்கும் கடிதத்துக்கும் என்ன வித்தியாசம்?..
மற்றவு:- புத்தகத்தைப் படிச்சுக் கிழிக்கிறம்..கடிதத்தைக் கிழித்துப் படிக்கிறம்!..

குமார்:- பொலிசாயிருக்கிற எங்க சித்தப்பா இதுவரை 40 திருடர்களைப் பிடித்திருக்கிறார்.
கண்ணன்:- அப்படி என்றால் உங்க சித்தப்பா பெயர் ”அலிபாபா”

திலீபன்:- உங்க தலைவர் முற்போக்கையா?..பிற்போக்கையா விரும்புகிறார்?..
குணாளன்:- இரண்டையும்விட அதிகமாகப் புறம்போக்கைத்தான் விரும்புகிறார்..

மணி:- அந்தச் சோதிடர் அவ்வளவு மோசமானவரா?..
குணா:- பிறகென்ன அவரிடம் ரைம் கேட்டால் அதுக்கும் காசு கேட்கிறார்!..

நீதிபதி:- போலிக் கையெழுத்து வழக்கில் நீ குற்றவாளி. தினமும் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும்...
குற்றவாளி:- யாருடைய கையெழுத்து ஐயா!..

மங்களம்:- தலைமுடி கொட்டுது தங்கம் ஏனடி..உனக்குத் தெரியுமா?..
தங்கம்:- புவி ஈர்ப்பு விசைதானடி மேலே போகாமல் கீழே விழுகுது!..

**- ஜெயா நடேசன்-**

# Fast food - துரிதஉணவு

## அறுபது சதவீதத்துக்கு அதிகமான வியாதிகளுக்குக்காரணம்.








மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளில் ஒன்றே உணவாகும். ஏனென்றால் ஆரோக்கியத்தைப் பேண முக்கிய பங்களிப்பு வழங்குவது உணவாகும். மிகவும் பரபரப்பான வாழ்க்கையை வாழும் தற்போதைய மனிதன் உணவு குறித்த அவதானத்தை மேற்கொள்வதில்லை.

அதன் காரணமாக தனது பசியைத் தீர்க்க துரித உணவு எனப்படும் குயளவ குழழன வகைகளை உணவாக உட்கொள்கின்றான். அதில் முக்கியமான விடயம் என்னவென்றால் உடம்புக்கு தீங்கு விளைவிக்கும் எனத் தெரிந்தும் அதனை அதிகமாக உண்ணுகின்றார்கள். அநேகமான துரித உணவுகளில் காணப்படும் மாப்பொருள், கொழுப்பு மற்றும் அதிகளவு கலோரிகள் காரணமாக உடம்புக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

"துரித உணவு" என்னும் பெயரில் மிகவும் குறைந்த நேரத்தில் தயாரிக்கப்படும் உணவையே குறிப்பிடுகின்றோம். ஆனால் இவ்வுணவுகள் ஏற்கனவே சமைக்கப்பட்ட உணவுகளாகும். மேற்குலக நாடுகளின் சனத்தொகையில் நூற்றுக்கு 60 வீதத்துக்கும் அதிகமானோர் நோயாளிகளாவதற்கும் உடல் பருமனாவதற்கும் துரித உணவுகள் காரணமாக அமைகின்றன. அமெரிக்காவிலும் உடற்பருமன் காரணமாக மக்கள் சிரமப்படுவதுடன், அந்நாட்டில் சுகாதார சேவைகளுக்கான செலவில் 21ூ பருமனைக் குறைக்கும் சிகிச்சைக்கும் மற்றும் பிரசாரத்துக்குமே பயன்படுத்தப்படுகின்றது.

தற்போது துரித உணவுகள் சிறுவர்களிடையே பெரும் பிரபல்யம் பெற்று வருகின்றன. அவர்கள் பலவிதமான துரித உணவுகளை வெகுவிருப்பத்துடன் உண்ணுகின்றார்கள். அவற்றில் நூடில்ஸ் வகைகள், குளிர்பானங்கள் போன்றவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. சிறு வயதிலேயே துரித உணவுகளுக்கு அடிமையாவதன் மூலம் அவர்கள் உடல் பலத்தை இழப்பதோடு அவர்களின் மன ஒருமைப்பாடு குறையும் தன்மையும் காணப்படுகின்றது. அதனால் அவர்களின் கல்விக்கான நாட்டமும் குறைகின்றது. உடம்புக்குத் தேவையான போசணையை அவ்வுணவுகளால் பெற்றுக் கொள்ள முடியாது. அதனால் சமூகத்தில் ஒரு ஒட்டுண்ணியாக துரித உணவு மாறிவருகின்றது.

துரித உணவுகளால் உடம்புக்குத் தேவையான போசணை கிடைக்காமையால் வருங்கால சிறுவர் சமுதாயம் மந்த போசணையால் அவதியுறுகின்றது. எதிர்காலத்தில் நாட்டை ஆளப் போகும் இவர்களின் இந்நிலைமை மிகவும் கவலைக்குரியது. இலங்கையர்களும் தேசிய உணவு முறையிலிருந்து மேற்குலக கலாசாரத்துக்கு ஆட்பட்டு வருவதால் அவர்களும் தங்களது போசணையைக் கருத்திற் கொள்ளாது துரித உணவுகளுக்கு அடிமையாகி பலப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

உடம்புக்கு மாத்திரமல்ல வருமானத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் துரித உணவுகளை தவிர்த்து நச்சுகளற்ற தேசிய உணவை உண்பதன் மூலம் நிகழ்காலத்தில் மாத்திரமல்ல எதிர்காலத்திலும் வளம் பெறலாம்.

துரித உணவுகளால் உடலில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்தால் வெளித்தோற்றம் விகாரமடைதல், குணப்படுத்த முடியாத நோய்கள் உண்டாதல் மூளையின் இரசாயன கலவையில் பாதிப்பு ஏற்படல், இரத்த நாளங்கள் சுருங்குதல் போன்றவை ஏற்படலாம். சிறிது நேரத்துக்கு கண்ணையும் நாவையும் மகிழ்ச்சிப்படுத்தும் துரித உணவுகளிலிருந்து விடுபட்டு போசணைமிக்க உணவுகளை நாம் உண்ணுவதன் மூலம் சுகமான வாழ்வை வாழலாம்.

**வீ.ஆர். வயலட்**



# நிலக்கண்ணி வெடிகள்

இலங்கையில் முப்பது ஆண்டுகால ஆயுத போராட்டம் 2009ம் ஆண்டு முடிவுக்கு வந்த பின்னர் மீண்டும் சொந்த பகுதிகளில் மீளக்குடியமர்ந்த வடக்கு கிழக்கு மக்களுக்கு மிகப்பெரும் ஆபாத்தாக விளங்கியது நிலக்கிழ் புதைக்கப்படிருந்த ஆபத்தை தரக்கூடிய வெடிபொருட்கள் ஆகும்.இந்த வெடி பொருட்களை அகற்றி அழித்து மக்களை சொந்த நிலங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு பல சர்வதேச மனித நேய கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்களும். பல உள்ளூர் மனித நேயக்கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்களும் தங்களுடைய மனிநேயப்பணிகளை வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொண்டு மக்கள் மீளக்குடியமர்வதற்கு ஏதுவாக பல மக்கள் வாழ்விடங்களை மக்களிடம் கையளித்தனர். அவ்வாறு மனிதநேயப்பணியை மேற்கொண்டு வரும் உள்ளூர் மனித நேயக்கண்ணி வெடி அகற்றும் நிறுவனமான ”சார்ப்” நிறுவனம் வடபகுதியில் தமது கண்ணிவெடி அகற்றும் செய்பாடுகள் மூலமாக 2016ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 969670 சதுர கிலோ மீற்றர் நிலப்பகுதியில் ஆபத்தை தரக்கூடிய இருபத்தொராயிரத்து நூற்று எழுபத்து மூன்று (21173) வெடி பொருட்களை அகற்றி அழித்துள்ளதாக அதன் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பவை தெரவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் முகமாலை மற்றும் கிளாலி போன்ற பகுதிகளில் தங்களுடைய ஜப்பான் நாட்டு அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் மனிதநேயக்கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். குறிப்பாக குறித்த பகுதிகளை அண்மித்த கிராமங்களில் உள்ள இளைஞர் யுவதிகளை கொண்டு குறித்த மனித நேயப்பணிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று தெரிவித்தார்அத்துடன் தங்களை மனித கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகள் இந்த ஆண்டும் தொடர்ச்சியாக துரித கதியில் முகாமாலை மற்றும் கிளாலி போன்ற பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

# அன்னை திரேசாவின் பொன்மொழிகள்...



-உன் வெற்றி அல்ல, முயற்சியே கடவுளுக்குத் தேவை.

-நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.

-உண்மையான அன்பு வலிக்கும், வதைக்கும், வெறுமையாக்கும்.

-அவமானங்களின் வழியேதான் தாழ்ச்சியைக் கற்றுக் கொள்கின்றோம்.

-ஒரு சிறு புன்முறுவலின் ஆற்றலை யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

-வாழ்க்கை என்பது நீ சாகும்வரை அல்ல் பிறர் மனதில் வாழும் வரை.

-உனக்கு உதவியோரை மறக்காதே உன்னை நேசிப்பவரை வெறுக்காதே உன்னை நம்பியவரை ஏமாற்றாதே.

-சிறியவற்றில் நம்பிகைக்கு உரியவராய் இருப்பதே உன் பேராற்றல்.

-நோய்களிலே மிகக் கொடிய நோய் அடுத்தவர்மீது அக்கறையற்று இருப்பதே.

-இறக்கத்தான் பிறந்தோம் அது வரை இரக்கத்தோடு இருப்போம்□!

-இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் அன்பை செலுத்த முடியாது.

-உங்களுடைய கனவுகளோ வாழ்க்கை லட்சியங்களோ மிகவும் விரிவானவையாக சிக்கலானவையாக இருந்தால் அவற்றை எட்டிப்பிடிப்பது மிகவும் சிரமமாகிவிடும்.

-பிறருடைய துன்பத்தை நீக்கும் வல்லமை உங்களுக்கு வரவேண்டுமானால் அத் துன்பத்தை நீங்களும் அனுபவித்து உணர வேண்டும்.

-எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டங்கள் நிரந்தரம் இல்லை .

-அமைதியின் பலன் பிரார்த்தனை, பிரார்த்தனையின் பலன் நம்பிக்கை, நம்பிக்கையின் பலன் அன்பு, அன்பின் பலன் சேவை, சேவையின் பலன் அமைதி.

-தலைவன் ஒருவனுக்காக காத்திருக்காதீர்கள்.உங்களுக்குரிய பாதையை அமைத்து உங்களை நீங்களே வழிநடத்திச்செல்லுங்கள்.

-கொடுப்பது சிறிது என்று தயங்காதீர்கள் பெறுபவருக்கு அது பெரிது. எடுப்பது சிறிது என்று திருடாதீர்கள் இழந்தவருக்கு அது பெரிது.

-சேவை செய்யுங்கள் கடவுள் உங்கள் அருகே வருவார்.

-இரு கை கூப்பி கடவுளை வணங்குவதை விட ஒரு கை நீட்டி உதவி செய்யுங்கள்

-அன்பு தான் உங்கள் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலி நீங்கள் தான்.

-தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய்யுங்கள் ஆனால், மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதீர்கள்.

# அகதிகளை அரவணைத்த தேவதை அஞ்சலா மேர்க்கல்-யேர்மனிய கான்ஸிலர்(அதிபர்) அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்!..

2005, 2009, 2013, 2017 என நான்கு தடவைகள் யேர்மனியின் கான்சிலர்!.. யேர்மனிய அரசியல் வரலாற்றில் கான்சிலர் என்று அழைக்கப்படும் பதவிதான் மிக உன்னதமான பதவியாகும். வேறு பல நாடுகளில் ஜனாதிபதி, பிரதமர் போல யேர்மனியில் இப்பதவிதான் நாட்டின் ஆளுமை, அதிகாரம் மிக்கவரைக் குறிக்கும் பதவியாகும். அந்த வகையில் யேர்மனியின் கான்சிலராக 4 தடவைகள் 16 வருடங்கள் பதவி வகித்த பெண்மணியான இவர் இந்த மாதம் 26.9.2021ல் நடைபெறவிருக்கும் யேர்மனிய பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்காமல் ஓய்வுபெறுகின்றார்.

யேர்மனி அரசியல் வரலாற்றில் பெண் ஒருவர் இப்பதவியை அலங்கரித்தவர் என்றால் சரித்திரத்தில் இவர் ஒருவர்தான் இடம்பிடித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். 26.9.2021ல் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இவர் போட்டியிடாமல் ஓய்வெடுத்துள்ளார். இவர் அங்கத்துவம் வகித்த கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் ஊ.னு.ரு (ஊாசளைவயைெ னுநஅழஉசயவைஉ ருழைெ) தலைவர் பதவியிலிருந்தும் ஏற்கனவே 2018ம்ஆண்டில் விலகி இன்னொருவருக்கு விட்டுக் கொடுத்திருந்தார். இருந்தும் இவர் கட்சியின் தலைவராக 2000 - 2018 வரை 18 வருடங்கள் தலைவராகவும் இருந்திருக்கிறார்.





இவர் தனது 16 வருட பதவிக்காலத்தில் பாராளுமன்றத்திலோ பொதுமக்களிடத்திலோ பெரிதளவில் எதிர்ப்புகளைச் சந்தித்தவரல்ல. மென்போக்கைக் கொண்டிருந்த இவர் மக்கள் மத்தியிலும் உலகத் தலைவர்கள், ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய யூனியன், ஐக்கியநாடுகள் சபை, வல்லரசு நாடுகள், நேட்டோ நாடுகள்அணி என அனைத்துத் தரப்பிலும் பாராட்டப்பட்ட ஒருவராகவே வலம்வந்திருக்கிறார். அந்த அளவுக்கு அவரின் நிர்வாகச் செயற்பாடு, உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் உலக மக்களைக் கவர்த்தன என்றே கூறலாம்.

உலக நாடுகளில் மிகவும் பலம்பொருந்திய, பொருளாதார வலுவுடைய நாடாக யேர்மனி இன்றும் விளங்குகின்றது. இந்த நாட்டின் ஆட்சியைக் கொண்டுநடாத்துவது இலேசான விடையமல்ல. ஆனால் இவர் பெண்ணாக இருந்தும் ஆளுமை, தோழமை, நிர்வாகச் சிறப்பு, ஜனநாயகப் பண்புகளைக் கொண்டு இந்தநாட்டு மக்களை மட்டுமல்ல வெளிநாட்டு அகதிகளையும் உள்வாங்கி மனிதநேயம் மிக்கவர் என்பதையும் நிரூபித்திருக்கிறார். உலகத் தலைவர்களால் பாராட்டப்பட்டிருக்கிறார்.

இவர்தனது பதவிக்காலத்தில் பல நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்திருக்கிறார். வெளிநாட்டு அகதிகளின் வரவே மிகப்பெரும் நெருக்கடியாக அமைந்தது. யேர்மனியில் முஸ்லீம்கள், இஸ்லாம் பயங்கரவாதம், வலதுசாரிகளின் போராட்டம், அரசியல் எதிரிகளின் தாக்கம், ரஷ்ஷியா தனது அண்டைநாடுகளை ஆக்கிரமித்த விடையம், வெளிநாட்டக்கொள்கை, குடும்பநல விவகாரம், அணுசக்தி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, உலகநாடுகளின் போர்ச்சூழல் என்றும் மேலாக கோவிட்-19 கொரோனா நெருக்கடிகளையும் எதிர்கொண்டாலும் மக்கள் செல்வாக்கை இழக்காத நாட்டின் தலைவராகவே தனது பதவிக்காலத்தை நிறைவு செய்திருக்கிறார்.

ஏன் நமது இலங்கைவாழ் அகதிகள் 1980ம் ஆண்டுக் காலப்பகுதியிலிருந்து இற்றைவரை சுமார் 40 வருடங்கள் கடந்தும் அகதிகளாக வருவோருக்கு தஞ்சம் அளித்து, பாதுகாப்பு, உணவு, இருப்பிட வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு செய்துதந்து, இந்த நாட்டுக் குடியுரிமையும் வழங்கி சிறப்பாக வாழவைத்த இந்த அம்மையாரை நாம் எப்பொழுதும் நினைவுகூரவேண்டும். நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். நமது மக்கள் மட்டுமல்ல உலக நாடுகள் எங்கிருந்தும் பல ஆயிரம் அகதிகளாக இந்த நாட்டுக்குள் வந்தாலும் அத்தனைபேரையும் வரவேற்று வாழ்வளித்த தேவதையை நாம் மறக்கலாமா?.. ஐரோப்பாவிலேயே மிகக்கூடுதலான அகதிகளை வரவேற்று வாழ்வளித்த நாடு என்றால் அது யேர்மனி மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். அஞ்சலா மேக்கல் அம்மையாரைப்பற்றிய சிறுகுறிப்பையும் இச்சந்தர்ப்பத்தில் பார்ப்பது சிறப்பாகும்...

-.-பிறப்பு..17.7.1954 (67 வயது) கம்பேர்க் - யேர்மனி-திருமணம்.. 1- Ulrich 1977 - 1982 (விவாகரத்து) 2- Joachim 1998ல் திருமணம். இவர் இரசாயனவியலாளர். பிள்ளைகள் இல்லை.-கல்வி..பௌதீகவியல் பட்டதாரி, முதுமாணிப்பட்டதாரி-

-ஆரம்பத்தொழில்...1978 - 1989 பௌதீகவியல் - இரசாயனவியல் மத்திய நிலையத்தில் விஞ்ஞான, ஆராய்ச்சி நிறுவனங்களில் பல உயர் பதவிகள்..

-1989ல் அரசியலில் CDU கட்சியில் இணைந்தார்.-1989 -1990 காலப்பகுதியில் மேற்கு - கிழக்கு யேர்மனிகள் ஒரு நாடாக மாறப்பாடுபட்ட அன்றைய கான்சிலர் கெல்மட் கோலுடன் அயராது பாடுபட்டு உழைத்தார்.-1990-Mecklenburg-Vorpommem மாநிலத்தின் CDU கட்சியின் தலைவரானார்.-1991 - 1994 யேர்மனி மத்திய அரசில் பெண்கள் இளையோர் விவகார அமைச்சரானார்.-1994 - 1998 மத்திய அரசின் சுற்றாடல் சூழல், இயற்கைவள பாதுகாப்பு அமைச்சர் பதவி வகித்தார்.-1998 - 2000 (CDU) யேர்மனியின் பிரதான கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தலைவரானார். 2018 வரையும் சுமார் 20 வருடங்கள் கட்சித்தலைவராக இருந்துள்ளார். -2002 - 2005 வரை பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்

-2005 ஆண்டில் யேர்மனியின் அரசியல் வரலாற்றில் முதல் பெண் கான்சிலராகத் தெரிவு .தொடர்ந்து 2009, 2013, 2017 என நான்கு தடவைகள் கான்சிலர் பதவியில் மொத்தம் 16 வருடங்கள் அரசியல் தலைவராக பயணத்தை நிறைவுசெய்து கொண்டு 2021 செப்டம்பரில் நடைபெறும் தேர்தலில் போட்டியிடாமல் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார். இவர் சுமார் 30 வருடங்கள் கடந்து அரசியல் ஈடுபாடுகொண்டவர். தனது பதவிக்காலத்தில் 5 கண்டங்களிலும் நடைபெற்ற மகாநாடுகள், தலைவர்கள் மகாநாடுகள், ஜி-7 நாடுகள் தலைவர்கள் மகாநாடுகள், ஜி-20 நாடுகள் தலைவர்கள் மகாநாடுகள், நேட்டோ நாடுகள் மகாநாடுகள், ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டங்கள் என அனைத்திலும் பேருரையாற்றி அனைத்துத் தரப்பினரின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார். உலகின் மதிப்பு மிக்க தலைவர்களில் இவர் விளங்கியிருக்கிறார். இவரது விருதுகள் பரிசுகள், பட்டங்கள், கௌரவங்கள் ஏராளம். உலகின் தலைசிறந்த நாடுகளும், தலைசிறந்த பல்கலைக்கழகங்கின் விருதுகள், பட்டங்கள் , கௌரவங்கள் 50 க்கும் மேல் கிடைத்துள்ளன. கௌரவ டாக்டர் பட்டங்களையும் பல பல்கலைக் கழகங்களும் நிறுவனங்களும் கொடுத்துச் சிறப்பித்திருக்கின்றன.. குறிப்பாக இஸ்ரேல், இந்தியா, பிரித்தானியா, தென்கொரியா, சீனா, சுவீஸ்லாந்து, ரஷ்ஷியா, அமெரிக்கா, இத்தாலி போன்ற நாட்டுத் தலைவர்களால் கௌரவம் பெற்றிருக்கிறார்.

உலகின் தலைசிறந்த பெண்மணிகள் பட்டியலில் 10 இடத்துக்குள் அடையாளப் படுத்தப்பட்டிருக்கிறார். ஐரோப்பாவின் சிறந்த பெண்மணி, யேர்மனிய ஊடகவிருது, இந்திராகாந்தி சமாதானவிருது போன்ற அதி உயர் பட்டங்களையும் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

பட்டங்கள் மட்டுமல்லாது தனது நிர்வாகத் தொழிற்பாடு, ஏனைய உலகத்தலைவர்கள், மற்றும் உயர் நிறுவனங்களின் நன்மதிப்பைப் பெற்ற உலகின் சிறந்த பெண்மணி என்பதை நிரூபித்து, மரியாதையுடன் புகழுடன் தனது பதவிவியிலிருந்து ஓய்வு பெறும் அகதிகளை அரவணைத்த அம்மையாரை நாமும் பாராட்டி மகிழ்வோம். நீண்ட ஆயுள்பெற்று சிறப்புடன் வாழவேண்டும் என வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்!...

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| பா | ட | சா | லை |
| ப் | உ | ர | ல் |
| பா | ப் | அ | மு |
| ல் | பு | ம் | பா |


# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ப் | கா | னி | ஸ் | தா | ன் |
| ட | க | ன் | னி | ன் | வ | ண |
| ம் | யே | சு | பி | ரா | ன் | ர் |
| ப | ளை | த | த் | பி | ம் | க |
| ர | ளை | வ | த | ர | வ | ரு |
| ம் | வ | ல | ம் | ம் | ண | ம் |
| த | கு | தி | ண் | பு | ஆ | பு |

# சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 8 | 7 | 4 | 1 | 2 | 9 | 6 |
| 2 | 7 | 1 | 9 | 5 | 6 | 8 | 4 | 3 |
| 9 | 6 | 4 | 2 | 3 | 8 | 1 | 5 | 7 |
| 1 | 8 | 6 | 3 | 7 | 4 | 9 | 2 | 5 |
| 7 | 5 | 9 | 6 | 1 | 2 | 4 | 3 | 8 |
| 4 | 2 | 3 | 5 | 8 | 9 | 7 | 6 | 1 |
| 8 | 9 | 2 | 1 | 6 | 3 | 5 | 7 | 4 |
| 3 | 4 | 5 | 8 | 9 | 7 | 6 | 1 | 2 |
| 6 | 1 | 7 | 4 | 2 | 5 | 3 | 8 | 9 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. மாதம்மாதம் அஞ்சலி செய்யவேண்டிக்கிடக்குது பாருங்கோஅதுசரி சினிமா படம் போல 1, 2, 3,4 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1, 2, 3,4எனத்தொடருது. இதைக் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?..கொண்டாட்டங்கள் வைப்போம்?..கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?.. கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ.. தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!.. ராசாத்திகள்!..

இப்ப வெய்யிலும் அடிக்கடி வந்து சுட்டெரித்து தன்ர விளையாட்டைக்காட்டுது பாருங்கோ..இந்த குட்டிக் கிருமிகளின் திருவிளையாடலால். கிழமையில ஒரு நாள் எல்லாப் பொருட்களையும் கடைகளில் வேண்டிக்கொண்டுவந்து குளிர்ப்பெட்டிகள் எல்லாத்தையும் நிறைத்துப்போட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக இழுத்தெடுத்து பொரித்து, அவித்துத் தின்று உடம்பும் பத்துக்கிலோவுக்கு மேல கூடி இருக்க, நிமிர, நடக்கமுடியாத நிலைதான். இது கனபேருக்குக் கண்டியளோ. ஆனால் ஒருவரும் வெளியில சொல்ல மாட்டினம் பாருங்கோ..

இனி இந்தக் கோடை விடுமுறைக்கு ஊருக்குப்போகப் பலர் திட்டம்போட்டிருக்க.. இந்த நாசமாய்போன கொரோனா ஒழியிதில்லை என்று பல ஆயிரம்பேருக்குக் கவலை பெருகிவிட்டுது பாருங்கோ.. ஊருக்குப்போய் கண்டதெல்லாத்தையும் ஆசையோடு வேண்டி உண்ணலாம்,

ஊரெல்லாம் சுற்றித்திரியலாம், கோயில் குளம் எல்லாம் பார்க்கலாம், கடற்கரையில தண்ணியடித்து, விளையாடிப் படுத்துறங்கிப் பொழுதைப் போக்கலாம், பலவிதமாகப் போட்டோ எடுத்துப் பேஸ்புக்கில் போட்டு லைக் வாங்கலாம் என்றெல்லாம் ஆசை.. எல்லா ஆசையும் நாசமாகிப்போச்சுது என்று கவலை.. இனி என்ன செய்ய.. பழையபடி செற்றியில கிடந்து ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து நாடகம் பார்க்க வேண்டியதுதான் பாருங்கோ!..

இது பாருங்கோ தொடர் நாடகம்போல இந்த நோயும் தொடரப்போகுது போலத்தான் கிடக்குது. இனி இந்த நோயுடன் பழக்கப்பட்டு ஒன்றித்துப் பாதுகாப்பாக வாழவேண்டிய கட்டாயம்தான் ஒன்றும் செய்யமுடியாது. ஊரோடு உலகத்தோட ஒத்து ஓடவேண்டும். இல்லையேல் மண்டையைப் போடவேண்டியதுதான் பாருங்கோ..

சரி...சரி.. இனி ஒரு விசயத்தை அலசலாம் என்று இந்த மயிலன் எண்ணுகிறான். இந்தக் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வதில்கூட நம்மவர்கள் சாதி, சமயம் பார்ப்பதுபோல அந்த ஊசி நல்லதா இந்த ஊசி கூடாது, இது சரியில்லை, இது போட்டாலும் உயிராபத்து என்றெல்லாம் புரளிகளைக் கிழப்பிவிடுபவர்கள் பலர். விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் சிபார்சு செய்து எல்லோரும் ஊசியைப் போடுங்கோ என்று கூற, எங்கட விளப்பம்கெட்டதுகள் விஞ்ஞானிகளைவிட அதிமேதாவிகள் போல கதை அளந்து தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பும் சங்கதிகள்தான் நடைபெறுகின்றது பாருங்கோ.

அறியாமை ஒருபுறம் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு ஊசிபோடாமல் ஏதோ சாமிக்குற்றம்மாதிரி எண்ணி இன்றும் எந்தவித தடுப்பூசியும் போடாமல் ஒளித்துத்திரிபவர்களும் நம் சமூத்தில் இலட்சக்கணக்கானவர்கள் பாருங்கோ. இதனால் அறியாயமாக உயிரிழப்பவர்கள் ஆயிரக்கணக்கானோர். அண்மையில் சிறீலங்காவில் வெளிவந்த சுகாதார அறிக்கையின்படி எந்த ஊசியும் போடாதவர்கள் 90 வீதமானோர்தான் இறந்திருப்பதாகத் தெரிவந்துள்ளது. இதையாவது கவனிக்கிறார்களா?.. இல்லவே இல்லை. இன்றும் ஒளித்து விளையாடிக்கொண்டு திரியும் தமிழர்கள்தான் ஏராளம்.

நீங்கள் ஒளித்துவிளையாடுவதால் கொரோனா தொற்று பல மடங்காகப்பெருகி பல்லாயிரம் உயிர்கள் போய்க்கொண்டே இருக்கின்றன. நமது தாய் நாட்டில் ஒவ்வொருநாளும் 200 அதிகமானோர் இறப்பதாகவும். ஒவ்வொருநாளும் 4.000 - 5.000 பேர்வரை தொற்றுவதாகவும் அதிர்ச்சித்தகவல் வந்துகொண்டே இருக்கின்றது. மரணம் மலிந்த பூமியாக நமது தேசம் இன்று கொரோனா பாதிப்பில் உலகில் முக்கிய இடத்தையும் எட்டிப்பிடித்துள்ளது வருத்தமளிக்கின்றது.

இன்று கொரோனா அவலம் தாயகதேசத்தில் பேராபத்தை எட்டியுள்ளது. அரசும் நாட்டை முடக்கி, எத்தனையோ கட்டுப்பாடுகளை விதித்து, எத்தனைகோடி செலவழித்து இந்த நோயை விரட்டி மக்களைக் காக்கப் பாடுபட்டுவருவது நல்ல விடையம் ஆனால் நம்மவர்கள் சொல்வழி கேட்க மாட்டோம் என்று விடாப்பிடியாக நின்று மண்டையைப் போடும் சம்பவங்கள் பெருகிக்கொண்ட இருக்கின்றன.

கொஞ்சம் இடைவழி விட்டவுடன் ஆலய திருவிழாக்கள், பேர்த்தே, கலியாணம், அது இது என்று பந்தாகாட்டி பேஸ்புக்கில் போட்டுப் படம்காட்டுவதுடன் நின்றுவிடாமல் கொரோனாக் கிருமிகளையும் தாங்கள் அறியாமல் பரப்பிவருகிறார்கள். இதனால் தாமும் மண்டையைப் போட்டு மற்றவர்களையும் மண்டையைப்போட வைக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதை கொஞ்சமாவது யோசிக்கிறதாகத் தெரியவில்லை பாருங்கோ..

இது வெளிநாடுகளிலும் நடக்குதுதான். ஆனால் வெளிநாடுகளில் ஊசிபோட்டவர்கள் அதிகம் பேர் என்றபடியால் இறப்பு குறைவு. இருந்தும் இன்றும் எத்தனையோ வயதானவர்கள் ஊசிபோடாமல் ஒளித்துத் தப்பித்துக்கொள்ளலாம் என்றும் எண்ணி ஊசிபோடாமல் இருப்பது எவ்வளவு அறியாமை என்று பாருங்கோ. இவர்கள் இப்படி ஊசிபோடாமல் இருப்பதற்கு உறவுகள் நண்பர்களும் ஒருவகையில் காரணம். அதாவது இந்த ஊசி சரியில்லை.இது கூடாது, இதுபோட்டால் வேற வருத்தம் வரும், இந்த ஊசியைத்தான் போடுங்கோ என்ற கூற, சிலர் நல்ல ஊசிபோடும்வரை காத்திருந்து கொரோனா பிடித்து உயிரைவிட்டவர்களும் பலபேர் பாருங்கோ..

இப்ப புலம்பெயர் நாடுகளில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தமிழர்கள் மத்தியில் சிறிது சிறிதாக ஆரம்பித்து இப்போ 200, 300, 500 பேர் எனக் கூடத்தொடங்கிவிட்டார்கள். இதுவும் ஆபத்தான விடையமாகும். சில நாடுகளில் கொரோனா, டெல்டா இது இது என பல வைரஸ்களும் புறப்பட்டபடியால் எங்கிருந்து? எப்படி? யாருக்கு? கிருமிவந்து பிடித்துக் கொல்லும் என்று எவருக்கும் தெரியாது. ஆகவே கூடிக் கும்மாளமடித்து, படம் எடுத்து பேஸ்புக்கில் போடுவதை நிறுத்துக்கோ இல்லையேல் உங்கள் உயிரும் சடுதியாக நிறுத்தப்படும்.

அறியாமை, பயம், மற்றவர் சொல்கேட்டலை நிறுத்தி உயிர் காக்கும் ஊசியைப் போடுவதே இன்று சிறந்தவழி. தாயகத்தின் பேரழிவைத் தடுத்து நிறுத்த அங்குள்ள உறவுகளை தடுப்பூசியைப் போடும்படி எடுத்துக்கூறுங்கள். வைத்தியத்துறையினர் மற்றும் அரச அறிவுறுத்தல்களை ஒழுங்காகக் கடைப்பிடிக்குமாறு கோருங்கள். இதுவே சிறந்த வழி..சரி..சரி..சுகநலத்துடன் எல்லோரும் இருந்தால்.. இந்த மயிலன் மீண்டும் வருவான். அப்ப வரட்டே!.. மீண்டும் இன்னொரு விசயத்தோடு மயிலன் வருவான்..நன்றி!..

# வெறும் வயிற்றில் வெந்தயம் சாப்பிடுவதால் இவ்வளவு நன்மைகளா?...



எல்லோர் வீட்டிலும் இருக்கும் மிக மிக வெந்தயம் சமையலில் மட்டுமல்ல, ஆயுர்வேத மருத்துவத்திலும் மிகவும் சிறப்பு தன்மைகள் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. நம் உடலுக்குத் தேவையான பல ஊட்டச்சத்துக்கள் இந்த வெந்தயத்தில் உள்ளது. அது மட்டுமல்லாமல் அவ்வப்போது ஏற்படும் வயிறு சம்பந்தமான பிரச்சினைகளையும் குணப்படுத்த வல்லது. இதனால் நம் உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கும்.

காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில், கொஞ்சம் வெந்தயத்தை வாயில் போட்டுக்கொண்டு தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படி நீங்கள் செய்வதால் உடல் உஷ்ணம் குறைந்து நாள் முழுவதும் குளு குளு வென இருக்கலாம்.

வெந்தயம் உடலில் கெட்ட கொழுப்பைக் நீக்கும் தன்மைக்கொண்டது. எனவே உணவில் வெந்தயம் சேர்த்துக்கொள்வதால் உடல் கெட்ட கொழுப்புகள் சேராமல் இருக்கும்.

உடல் எடையைக் குறைக்க விரும்புவோர் வெந்தயத்தைப் பொடி செய்து வைத்துக்கொண்டு தினமும் காலையில் வெறும் வயிற்றில் நீரில் இந்த பொடியைக் கலந்து குடித்தால், நல்ல பலன் கிடைக்கும்.

வெந்தயத்தில் பொட்டாசியம் சத்து அதிகமாக உள்ளதால் இதய நோய்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது. மேலும் வெந்தயம் கொழுப்பைக் குறைப்பதால், இதய பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பும் குறைவு.

வெந்தயத்தில் உள்ள அமினோ அமிலம் இன்சுலின் உற்பத்தியைத் தூண்டச் செய்கிறது. எனவே நீரிழிவு நோயாளிகள் தினமும் காலையில் வெறும் வயிற்றில் வெந்தயம் சாப்பிட்டால் விரைவில் குணமடையலாம்.

கரையக்கூடிய நார்ச்சத்து வெந்தயத்தில் இருப்பதால், மலச்சிக்கலில் இருந்து விடுபட காலையில் வெறும் வயிற்றில் வெந்தயம் சாப்பிடுவது நல்லது.

ஃபைபர், கால்சியம், இரும்பு, கார்போஹைட்ரேட், புரதம் மற்றும் தாதுக்கள் இருப்பதால் செரிமான பிரச்சினைகள் மற்றும் வயிறு சம்பந்தமான பிரச்சினைகளில் இருந்து நிவாரணம் பெற வெந்தயம் சாப்பிடுவது நல்லது.

அத்துடன் உடலின் இரத்த ஓட்டத்தை வெந்தயம் மேம்படுத்தும். இது கல்லீரலைச் சுத்தப்படுத்துவதுடன் உடல் முழுவதும் இரத்தம் சீராகவும் ஓட வெந்தயம் உதவுகிறது.

# வாழைப் பூ!..



-வாழைப்பூவில் எண்ணற்ற பயன்கள் அடங்கியுள்ளது. வாழைப்பூ சாற்றில் தயிரைக் கலந்து உட்கொண்டால் ரத்தக் கிராணி, பெரும்பாடு முதலியவை நீங்கும்.

-வாழைப்பூவை வாரத்திற்கொரு முறையேனும் சமைத்துச் சாப்பிடுவது மிகவும் நல்லது.உடல் சூடு குறையும். குடல் புண் ஆறும். பெண்கள் வாழைப்பூவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் கோளாறுகள், வெள்ளைப்படுதல், வயிற்று வலி ஆகியவற்றை போக்கும்.

-வாழைப்பூவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புகளை கரைத்து இரத்தத்தை சுத்திகரிக்கும்.இரத்த அழுத்தம், இரத்த சோகை போன்றவை வராமல் தடுக்கும்.

-வாழைப்பூ சாப்பிட்டால் இரத்தத்தில் காணப்படும் அதிக அளவு சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தும். கணையம் வலிமை பெற்று உடலுக்கு தேவையான இன்சுலினை சுரக்கும்.

-வாழைப் பூவை நறுக்கி சாறு எடுத்து அத்துடன் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் மேற்கண்ட பிணிகள் எல்லாம் உடனே குணமாகும்.

-வாழைப்பூ பித்தம், வாதம் உடலில் ரத்தக் குறைவு, கிராணி, வயிற்றில் பூச்சி முதலிய வியாதிகளுக்கு சஞ்சீவி போன்றது.

-மூலக்கடுப்பு, சீதபேதி, மலச்சிக்கல், வாய்ப்புண், செரியாமை, இரத்த மூலம் போன்ற நோய்களை கட்டுப்படுத்தும்.
-வாழைப்பூவில் உப்பு போட்டு வேக வைத்து அதன் சாறை குடித்தால் வயிற்றுவலி நீங்கும்

# சர்க்கரை நோயாளிகளுக்கு!..

சர்க்கரை நோயாளிகளே! தினமும் இந்த தண்ணீர் போதும் மாத்திரைக்கு குட்பை சொல்லலாம்..

வெந்தயம் நமது வீட்டில் அஞ்சலறைப்பெட்டியில் இருக்கும் முக்கிய பொருளில் ஒன்று. அதிக இரும்புச் சத்து கொண்டது. குளிர்ச்சித் தன்மை கொண்டவை. அதில் புரதமும் இருக்கின்றது. பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற மினரல்கள் செல் வளர்ச்சிக்கு மிகவும் உதவுபவை. இவை வெந்தயத்தில் உள்ளது. அப்படி அரிய நன்மைகளைக் கொண்டுள்ள வெந்தயத்தை பச்சையாக சாப்பிடக் கூடாது. ஊற வைத்து அல்லது வறுத்து பொடித்து உணவாக எடுத்துக் கொள்ளலாம். தினமும் இரவில் கால் ஸ்பூன் அளவு வெந்தயத்தை ஊற வைத்துவிட வேண்டும். மறுநாள் காலையில் இதனை நீருடன் மென்று சாப்பிட வேண்டும். இப்படி ஊற வைத்த வெந்தயம் பலமடங்கு நன்மைகளை உடலுக்கு தருகிறது.

**சர்க்கரை வியாதி...**

தினமும் 8 கிராம் அளவு வெந்தயம் உங்கள் சர்க்கரையை கட்டுக்குள் வைத்திருக்கும் தெரியுமா?. ஊற வைத்த வெந்தயத்தை வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் சர்க்கரை நோயாளிகள் மாத்திரைகளை முழுங்கத் தேவையில்லை.

**உடல் எடை....**

உடலிலுள்ள ஊளைச் சதையை வெந்தயம் கரைக்கிறது. கெட்ட கொலஸ்ட்ராலை வேகமாக எரிப்பதால் உடல் எடையை குறைக்கும். தொடர்ந்து ஊற வைத்து காலையில் நீருடன் வெந்தயத்தையும் மென்று சாப்பிட வேண்டும்.

**இதய நோய்கள்...**

வெந்தயத்தில் பொட்டாசியம் அதிகம் இருப்பதால் சோடியல் அளவை கட்டுப்படுத்தி, இதய நோய் வருவதற்கான வாய்ப்பு குறைக்கிறது.

**மலச்சிக்கல்...**

வெந்தயத்தில் கரையும் நார்ச்சத்து இருப்பதால், இதனை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர, மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்.

**வயிற்றுப் புண்...**

இரைப்பையில் சுரக்கும் அதிக அமிலத்தைக் கட்டுப்படுத்துகிறது. மேலும் வயிறு மற்றும் இரைப்பை புண்களை ஆற்றும்.

**ரத்த சோகை...**

ரத்த சோகை இருப்பவர்களுக்கு இந்த ஊற வைத்த வெந்தயம் அருமருந்து. தொடர்ந்து ஊற வைத்த வெந்தயத்தை சாப்பிட்டு வரும்போது, மாத்திரையின்றி, ரத்த சோகையை குணப்படுத்தலாம்.

# முதுமை பாதத்திலிருந்து மேல் நோக்கித் தொடங்குகிறது!...

உங்கள் கால்களை செயல்பாட்டிலும் வலுவாக வைத்திருங்கள் !!
Keep your Legs Active and Strong !!!

தினசரி வயதாகிக்கொண்டே இருக்கும்போது, நம் கால்கள் எப்போதும் சுறுசுறுப்பாகவும் வலுவாகவும் இருக்க வேண்டும். நாம் தொடர்ந்து வயதாகும்போது, நம் தலைமுடி நரைத்து (அல்லது) சருமம் தளர்ந்து (அல்லது) முகத்தில் சுருக்கங்கள் வருவதற்கு நாம் பயப்படக்கூடாது.நீண்ட ஆயுளின் அறிகுறிகளில், பிரபலமான அமெரிக்க பத்திரிகை ”வருமுன் தடுப்பு” (prevention) மூலம் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு, வலுவான கால் தசைகள் அனைத்திற்கும் மேலே மிக முக்கியமான மற்றும் இன்றியமையாத ஒன்றாக பட்டியலிடப்பட்டுள்ளன. தயவுசெய்து தினமும் நடந்து செல்லுங்கள்...

உங்கள் கால்களை இரண்டு வாரங்களுக்கு அசைக்கவில்லை என்றால், உங்கள் உண்மையான கால் வலிமை 10 வருடங்கள் குறையும்.
நடந்து செல்லுங்கள்..

டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் பல்கலைக்கழகத்தின் ஒரு ஆய்வு, முதியவர்கள் மற்றும் இளைஞர்கள், இரண்டு வாரங்கள் ழூசெயலற்ற நிலையில் இருந்தால் கால் தசை வலிமை மூன்றில் ஒரு பங்கு பலவீனமடையலாம் என்கிறது. இது 20-30 வருடங்கள் முதுமையடைவதற்கு சமம் !! எனவே நடந்து செல்லுங்கள்...

கால் தசைகள் பலவீனமடைவதால், நாம் மறுவாழ்வு மற்றும் உடற்பயிற்சிகள் செய்தாலும், மீட்க நீண்டகாலம் பிடிக்கும். நடவுங்கள். அதனால், நடைபயிற்சி போன்ற வழக்கமான உடற்பயிற்சி மிகவும் முக்கியமானது. நமது முழு உடல் எடை / சுமையை கால்களே தாங்குகிறது. கால்கள் ஒரு வகையான தூண்கள் மனித உடலின் முழு எடையையும் தாங்கும். தினமும் நடைபயிற்சி...
சுவாரஸ்யமாக, ஒரு நபரின் எலும்புகளில் 50% தசைகளில் 50%, இரண்டு கால்களிலும் உள்ளன.
நடந்து செல்லுங்கள்...
மனித உடலின் மிகப்பெரிய மற்றும் வலுவான மூட்டுகள் மற்றும் எலும்புகளும் கால்களில் உள்ளன.
10,000 அடிகள் / நாள்

வலுவான எலும்புகள், வலுவான தசைகள் மற்றும் நெகிழ்வான மூட்டுகள் உடலின் இரும்பு முக்கோணத்தை உருவாக்கி மனித உடலைச் சுமக்கிறது.

ஒருவரின் வாழ்க்கையில் 70% மனித செயல்பாடு மற்றும் ஆற்றல் எரித்தல்(burning the calories) இரண்டு கால்களால் செய்யப்படுகிறது. இது உங்களுக்கு தெரியுமா?

ஒரு நபர் இளமையாக இருக்கும்போது, அவருடைய தொடைகள் 800 கிலோ எடையுள்ள ஒரு சிறிய காரைத் தூக்கும் வலிமை கொண்டவை! கால் உடல் நடமாட்டத்தின்(locomotion) மையம் இரண்டு கால்களும் சேர்ந்து மனித உடலின் 50% நரம்புகளையும், 50% இரத்தக் குழாய்களையும், 50% இரத்தத்தையும் அவற்றின் வழியே பாய்கிறது. இது உடலை இணைக்கும் மிகப்பெரிய சுழற்சி நெட்வொர்க். எனவே தினமும் நடந்து செல்லுங்கள்.

கால்கள் மட்டும் ஆரோக்கியமாக இருக்கும்போது, இரத்த ஓட்டத்தின் வழமையான மின்னோட்டம் சீராக செல்லும். எனவே வலுவான கால் தசைகள் உள்ளவர்கள் கண்டிப்பாக வலுவான இதயத்தைக் கொண்டிருப்பார்கள். ஒருவரது வயது, பாதத்தில் இருந்து மேல் நோக்கித் தொடங்குகிறது. ஒரு நபர் இளமையில் இருப்பது போலல்லாமல் வயதாகும்போது, மூளை மற்றும் கால்களுக்கு இடையே நடைபெறும் ஆணைகள் பரிமாற்றத்தின் துல்லியம் மற்றும் வேகம் குறைகிறது.

தயவுசெய்து நடந்து செல்லுங்கள்...

கூடுதலாக, எலும்பின் உரமான கால்சியம் என்று அழைக்கப்படுவது விரைவில் அல்லது பின்னர் காலப்போக்கில் இழக்கப்படும், இதனால் வயதானவர்கள் எலும்பு முறிவுகளுக்கு ஆளாகிறார்கள்.

நடவுங்கள்.

வயதானவர்களில் எலும்பு முறிவுகள் தொடர்ச்சியான சிக்கல்களைத் தூண்டும், குறிப்பாக மூளை த்ரோம்போசிஸ் போன்ற ஆபத்தான நோய்கள். பொதுவாக வயதான நோயாளிகளில் 15% தொடை எலும்பு முறிவு ஏற்பட்ட ஒரு வருடத்திற்குள் இறந்துவிடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

தவறாமல் தினமும் நடந்து செல்லுங்கள்...

கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது, 60 வயதிற்கு பிறகும் கூட தாமதமல்ல. நம் கால்கள் படிப்படியாக வயதாகிவிட்டாலும், நம் கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது வாழ்நாள் முழுவதும் வேலை.

10,000 அடிகள் நடக்க..

எப்பொழுதும் கால்களை அடிக்கடி வலுப்படுத்துவதன் மூலம், ஒருவர் மேலும் வயதானதை தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்.

365 நாட்கள் நடைபயிற்சி..

உங்கள் கால்களுக்கு போதுமான உடற்பயிற்சி கிடைப்பதற்கும், உங்கள் கால் தசைகள் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்கும் தயவுசெய்து தினமும் குறைந்தது 30-40 நிமிடங்கள் நடக்க வேண்டும்....

இந்த முக்கியமான தகவலை உங்கள் 40 வயது கடந்த நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர வேண்டும், ஏனெனில் ஒவ்வொருவரும் தினமும் வயதாகி வருகிறார்கள்..

# அன்னைபூபதியை மறக்கமுடியவில்லை....

-ஜெயா நடேசன்-

வெள்ளைநிற உள்ளம் கொண்டு அன்னை பூமிக்காக அமைதிவாழ்வு வேண்டி இந்திய வல்லரசிடம் அடிபணியாது மாமாங்கப் பிள்ளையார் முற்றலிலே அறப்போர் தொடுத்து எம் மண்ணுக்காக மரணித்தவர் அகிம்சைத்தாய் அன்னைபூபதி அம்மையார். 1938ம் ஆண்டு மட்டுநகர் ஈன்றெடுத்த அன்னை சிரோன்மணி பூபதி அம்மையாரின் மகத்தான வீர நெஞ்சமதில் 1987ல் இந்திய இராணுவம் தமிழீழத்தில் காலடி எடுத்து வைத்தபோது எரிமலையாய் வெடிக்கத் தொடங்கியது.

இந்திய இராணுவத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்ட காடைத்தனங்களினாலே எதுவும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள், குழந் தைகள், இளம் வயதினர் எல்லோரும் சீரழிக்கப்பட்டனர். இந்தத்தீய செயல்களை எதிர்த்து முதன் முதலில் உண்ணாவிரதம் இருந்த அன்னம்மா டேவிட் என்பவராவர். இந்த அம்மையாரின் உண்ணாவிரதப் போராட்டத்தை அடக்குவதற்காக இந்திய இராணுவம் அவரைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்றது. பொய்ப்பிரசாரம் செய்து உண்ணாவிரதத்தைப் பழித்து, உரைத்துக் கேவலப்படுத்தியது.

அன்னையின் போராட்ட இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டுமென உறுதிபூண்டு அன்னைபூபதி அவர்கள் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்தார். என் சுயவிருப்பத்தின் பேரியேலேயே எனது கோரிக்கைகள் நிறைவேறும்வரை சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். நினைவிழந்தால் என்னை ஒருவரும் தூக்கிச் செல்ல இயலாது என்று எழுதிய அவரது கடிதம் இந்தியப் படைக்குச் சவாலாக அமைந்தது. அன்னையின் அகிம்சைப்போர் அதி வேகமாகப் பரவியது. அதே வேளை இந்தியப்படைகள் தம்மாலான இராணுவ வன்முறைகளைச் செய்து மக்களைக் கதிகலங்க வைத்தது.

அன்னைபூபதி எதற்கும் அசையவில்லை உதடுகள் காய்ந்து நா வறண்டுபோனபோதும் அவரது பேச்சு உலக நாடுகள் எங்கும் கேட்டது. இந்திய அதிகாரிகள் முயற்சிகள் எல்லாவற்றிற்கும் ஆட்டம்காணாத அன்னைபூபதி ”தமிழீழத்தாயகம்” என்ற சிந்தனையோடு மெல்ல..மெல்ல இறந்து 1988 ஏப்ரல் மாதம் 19ம் திகதி தம் உயிரைத் தமிழ் மண்ணுக்கு முழுமையாக அர்ப்பணித்துவிட்டு உயிர்துறந்தார். இவர் பிறந்த மண்ணைவிட்டுப் பிரிந்தார் ஆனால் உலகத் தமிழ் மக்களின் மனங்களில் விட்டுப்போகவில்லை அகிம்சைத்தாய் அன்னை பூபதியின் தியாகத்தைப் போற்றுவோம்!..வணங்குவோம்!..

# அன்பின் மறு உருவமாய் அன்னை தெரேசா... (பிறப்பு 26.8.1910)



## கடவுள் உள்ளமே.. கருணை இல்லமே.. அன்னை தெரசா மறைந்த நாள் 5.9.1997

"அன்னை" என்ற வார்த்தை சிலரின் வாழ்க்கைக்கு அடைமொழியாய் நிற்கும்போது அதற்கு அழகு கூடுகிறது. மெசடோனியா நாட்டில் எங்கோ ஒரு மூலையில் அல்பேனிய இனத்தில் பிறந்த ஆக்னஸ், பின்னாளில் தெரேசாவாக உருவெடுத்தபோது. இன்று அத்தகைய அன்னை பூமியில் அவதரித்த நாள். அவருக்கு இந்த "அன்னை" என்ற அடைமொழி அழகாய் பொருந்தி நின்றது. "அன்னை தெரேசா" என்று உச்சரிக்கும்போதே சாந்தமே உருவான ஒரு கருணை பொங்கிய முகம் நம் மனக்கண் முன்னால் ஒரு நொடி நிழலாடிச் செல்வது தான் உண்மை..

கருணையின் உருவமாக, சேவையின் உறைவிடமாக இன்றளவும் புகழப் படுபவர் அன்னை தெரசா. இன்று அவரது 106வது பிறந்தநாள். அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாக கொண்ட அன்னை தெரசாவின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ. இவர் கடந்த 1910-ம் ஆண்டு அகஸ்டு மாதம் 26-ந்தேதி பிறந்தார். இவர் இந்திய குடியுரிமை பெற்ற ஒரு ரோமன் கத்தோலிக்க அருட்சகோதரி ஆவார். 12 வயதில் முதன்முதலாக ஆன்மிக அழைப்பை உணர்ந்த அன்னை தெரசா, தனது 18 வயதில் கன்னிகா ஸ்திரீயாக மாறுவது என முடிவு செய்தார். இதற்காக வீட்டைவிட்டு வெளியேறி, "சகோதரி தெரசா" என தன் பெயரை மாற்றிக்கொண்டார். 1923-ல் "சோடாலிட்டி ஆ∴ப் சில்ரன் ஆ∴ப் மேரி" என்ற சமூக சேவை அமைப்பில் இணைந்தார்.

பின்பு 1929-ல் கொல்கத்தா வந்த அன்னை தெரசா, அங்கு ஒரு பள்ளியில் சுமார் 17 ஆண்டுகள் பணிபுரிந்தார். 1946-ல் ஏழைகளுக்கு உதவுவதற்காக

கற்பித்தல் பணியிலிருந்து விலகிய அன்னை தெரசா, சேவை செய்வதற்காக செவிலியர் பணிக்கான மருத்துவப் பயிற்சி பெற்றார். 1950-ம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார்.நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழைஎளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக்கும், இறக்கும் தறுவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றினார்.

1952-ல் ”நிர்மல் ஹ்ருதய்” என்ற இல்லத்தைத் தொடங்கினார். கொல்கத்தா தெருக்களில் ஆதரவற்றுக் கிடந்த ஏராளமான தொழுநோயாளிகளை இங்கு கொண்டு வந்து பராமரித்தார்.அவர்களின் காயங்களுக்கு மருந்திட்டார். முதலில் இந்தியா முழுவதும் நிறுவப்பட்ட அன்பின் பணியாளர் சபை, பின்னர் வெளிநாடுகளுக்கும் சென்றது. சமூகசேவை, சகிப்புத்தன்மை மூலம் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது. அதன் தொடர்ச்சியாக 1979-ல் அமைதிக்கான நோபல் பரிசும், 1980-ல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதும் அன்னை தெரசாவிற்குக் கிடைத்தது.

இது மட்டுமின்றி ஜவஹர்லால் நேரு விருது, பாரத ரத்னா விருது, அமெரிக்க ஜனாதிபதி பதக்கம், பிலிப்பைன்சின் ரமன் மகசேசே விருது, ஆர்டர் ஆ.்.ப் ஆஸ்திரேலியா, மற்றும் இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளின் ஆர்டர் ஆ.்.ப் மெரிட் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட விருதுகளையும் கவுரவங்களையும் அவர் பெற்றுள்ளார். அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை எய்ட்ஸ், தொழுநோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற சேவைகளில் பங்காற்றி வருகிறது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக மானுட சேவையில் ஈடுபட்டு வந்த அன்னை தெரசா 1997-ம் ஆண்டு 87-வது வயதில் மறைந்தார்.இறப்புக்குப் பின் அவருக்கு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திபேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரசா என்று பட்டம் சூட்டப்பட்டார்.

## அன்னை தெரசாவின் பொன்மொழிகள்...

-பெரிய சாதனைகளை செய்யாமல் துன்பப்படுவதை விட, சிறிய சாதனைகளை முழு அன்புடன் செய்து முடியுங்கள்.

-நம்மை சூழ்ந்துள்ள இடங்கள் சுத்தமாக இல்லை என்றால், மேடை அமைத்து பேசும் நேரத்தில் சிறிது நேரத்தை கொண்டு நீங்களே சுத்தம் செய்யுங்கள்.

-நீ வாழ, பிறரை அழிப்பதே மிகப் பெரிய வறுமை.

-வாழ்க்கையால் நற்செய்தியை அறிவி வார்த்தையால் அல்ல.

# யேர்மனியில் பெண் எழுத்தளர்கள்!...

(தொகுப்பு-சாந்தினி துரையரங்கன்)

**யேர்மன் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சியில்.. 3வது எழுத்தாளர்...**



## திருமதி சந்திரவதனா செல்வகுமாரன்.

இவர் 12.12.1959 இலங்கையின் வடபுலத்தில் அமைந்துள்ள மேலைப்புலோலியூர், பருத்தித்துறை, ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றவர். கணிதத் துறையில் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர். அந்தக் கணிதத் திறமையாலும் தூயகணிதம் (அட்சரகணிதம் + கேத்திரகணிதம்), பிரயோககணிதம் போன்றவற்றில் சமன்பாடுகளைப் போட்டு, சிக்கல்களைத் தீர்த்து, விடைகளைக் கண்டு பிடிப்பதில் இருந்த வேகத்தாலும் உயர்தரவகுப்பு ஆசிரியர்களாலும் வீதிகளில் இளைஞர் கூட்டங்களாலும் 1970களில் Computer எனப் பட்டப்பெயர் சொல்லி அழைக்கப்பட்டவர். Geometry (கேத்திரகணிதம்)யில் கூட 100/100 புள்ளிகள் எடுத்து தலைமை ஆசிரியரினதும் மற்றைய ஆசிரியர்களினதும் பிரத்தியேகமான பாராட்டுக்களைப் பெற்றவர்.

இவர் மே, 1986 இலிருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் Schwäbisch Hall என்ற நகரில் வாழ்ந்து வருகிறார். இவர் பேனா பிடித்து எழுதத் தொடங்கிய பொழுதில் இவரது அப்பா இவருக்கொரு டயறி வாங்கிக் கொடுத்து, தினமும் இவர் சந்திப்பவைகளையும் இவரது எண்ணங்களையும்

எழுதச் சொன்னார். அன்றிலிருந்து இவர் தனது அன்றாட உணர்வுகளை எழுதத் தொடங்கினார். தினமும் இவர் எதையாவது எழுதிக் இவரது முதற்கவிதையை 1975இல் இவரது 15வது வயதில் எழுதினார். அதை 1981இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைத்தார். உடனேயே அதை ஒலிபரப்பினார்கள். அது இவருக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்க அதன் பின்னர் அடிக்கடி கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்று எழுதி இலங்கை வானொலிக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்.

குறிப்பாக 1981, 1982, 1983 காலப் பகுதிகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இவரது ஆக்ககங்கள் ஒலிபரப்பாகாத நாளே இல்லையென்பது போல தினமும் ஏதாவது ஒரு ஆக்கமாவது ஒலிபரப்பாகிக் கொண்டேயிருந்தது. கவிதைகளின் எண்ணிக்கையை விட அதிகமான கட்டுரைகளும் விமர்சனங்களும் ஒலிபரப்பாயின. ”இறைவன் உலகத்தைப் படைத்தானாஏழ்மையை அவன்தான் படைத்தானா”என்ற பாடலுக்கான இவரது விமர்சனம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ”விமர்சகர் விருப்பம்” நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகி இவருக்கு பலத்த பாராட்டுக்களைப் பெற்றுக் கொடுத்தது.

இவரது மற்றைய ஆக்கங்களும் நிறைந்த பாராட்டுக்களைப் பெறுபவையாகவே அமைந்தன. வீடு தேடியே பாராட்டுக்கடிதங்கள் வந்து குவிந்தன. இந்தியாவிலிருந்து கூட இவருக்கு நிறைய விசிறிகள் இருந்தார்கள். நிறையக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். சிலர் இவரது பெயர் எப்போதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிப்பதால் கோபப்பட்டு, எரிச்சல்பட்டு இவரைத் திட்டித் தீர்த்துக் கூடக் கடிதங்கள் எழுதினார்கள்.

இவர் புலம்பெயர்ந்த பின்பும் எழுதிக் கொண்டேயிருந்தார். வானொலி, சஞ்சிகை, செய்தித்தாள்கள்... என்று பல தளங்களிலும் இவரது கதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், நினைவுகள்... என்று பலவும் வெளிவந்து கொண்டேயிருந்தன. குறிப்பாகப் பெண்கள் சம்பந்தமான, பெண்விடுதலை சம்பந்தமான பல கட்டுரைகளை பல தளங்களிலும் எழுதியுள்ளார். வானொலி என்று கூறும் போது ஈழத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியும் புலம் பெயர்ந்தபின் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாகிய ஐபிசி வானொலியும் (IBC Tamil Radio) இவரது எழுத்துக்களுக்கான முக்கிய தளங்களாக அமைந்தன.

இவரது முதல் நூலான மனஓசை தொகுப்பில் இவர் தேர்ந்தெடுத்த 30 கதைகளும் கூட களத்தில், ஈழமுரசு (அனைத்து நாடுகளின் பதிப்புகள்), கனடா முழக்கம், குமுதம், தீராநதி, அக்னி போன்ற பத்திரிகைளிலும்

ஐபிசி வானொலியின் புலம்(சஞ்சிகை), பூவரசு(சஞ்சிகை), பெண்களின் பிரத்தியேகத் தொகுப்புகளான ஊடறு, புதுஉலகம் எமை நோக்கி, சக்தி, பெண்கள் சந்திப்பு மலர்.. போன்ற நூல்கள், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியவையே. அதை விட எரிமலை, லண்டன் நலன்புரிச் சங்கத்தின் வெளியீடான யுகம்மாறும், ஈழநாடு, இளங்காற்று, வெற்றிமணி, தங்கதீபம், வடலி, குருத்து மாதஇதழ், செம்பருத்தி (மலேசியச்சஞ்சிகை), யுகமாயினி போன்றவைகளிலும் இவரது படைப்புக்கள் பிரசுரமாகியுள்ளன.

இவைகளில் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் மட்டுமல்லாது சூரியன் (இணைய இதழ்), பதிவுகள் (இணைய இதழ்), திண்ணை (இணைய இதழ்), அக்கினி (இணைய இதழ்), யாழ் (இணையஇதழ்) திசைகள் (இணைய இதழ்), சங்கமம்(இணைய இதழ்), நடு (இணைய இதழ்) போன்ற பல இணைய சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியிருக்கின்றன.

போர், புலம் பெயர்வு, அதனாலான பிரிவுகளின் பாதிப்புகள், பெண்களின் பிரச்சனைகள், பெண்விடுதலை.. போன்ற விடயங்களைத்தான் இவரது கதைகள் பெரும்பாலும் சொல்கின்றன. இவர் சொந்தமாக ”மனஓசை” என்றொரு இணையத் தளத்தை வைத்திருக்கிறார். 2002 இல் இவர் ஆரம்பித்த அந்த இணையத்தளம் சமூக, அரசியல், இலக்கிய மற்றும் சுய உணர்வுகளின் வெளிப்பாடாக விரிந்து கிடக்குமொரு தளம். அதில் மற்றைய பலரின் ஆக்கங்களோடு இவரதும் நூற்றுக்கணக்கான ஆக்கங்கள் பதியப் பட்டுள்ளன.

அதை விட புளொக்ஸ் என்று சொல்லப்படும் 30க்கு மேற்பட்ட வலைப்பூக்களை வைத்திருக்கிறார். அவைகளில் 2003 இல் இவர் ஆரம்பித்த ”மனஓசை” வலைப்பூவும், ”பெண்கள்” வலைப்பூவும் மருத்துவம், குழந்தைகள், மகளிர் போன்ற வலைப்பூக்களும் அப்போது மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தன. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அவைகளில் தினமும் தனது மன உணர்வுகளிலிருந்து மற்றவர்களுக்குத் தேவையான விடயங்கள் வரை எதையாவது தினமும் பதிந்தும் தகவல்களை எல்லாம் சேகரித்தும் வந்தார்.

இவைகளோடு ஈழத்து நூல்களை மின்நூல்களாக்கி சேர்த்து வைக்கும் நூலகம், ஆவணகம் போன்ற தளங்களிலும் தன்னால் முடிந்த சில பங்களிப்புகளைச் செய்து வருகிறார்.5.04.2006 இலிருந்து 222 கட்டுரைகளை விக்கிபீடியாவில் எழுதியுள்ளார். 127 படிமங்களை தரவேற்றியுள்ளார். 871 கட்டுரைகளை உரைதிருத்தி, மேம்படுத்தியுள்ளார். மற்றைய தளங்களிலும் தனது பல்வேறு பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

இவரது “வழக்கம் போல் அடுப்படிக்குள்“ என்ற கவிதை, சமூகக் கட்டமைப்பைத் தோலுரிக்கும் பெண்மொழிக் கவிதைகள் என்ற தலைப்பில், தமிழ்த்துறை அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 2000 இல் இந்தியாவில் வெளிவந்த சாகித்திய அக்கதாமி தொகுப்பு நூலில் இவரது ”கல்லட்டியல்” என்ற சிறுகதையும் இடம் பெற்றது.

தற்சமயம் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். Youtube இலும் ஜெர்மனிய மொழியைக் கற்பித்துக் கொண்டிருக்கிறார்

1- இரண்டாவது பரிசு - பூவரசு 10வது ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் பூவரசு கலை இலக்கியப் பேரவை (Bremen) வழங்கியது (2001)

2- முதலாவது பரிசு - பூவரசு 11வது ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் ”பூவரசு கலை இலக்கியப் பேரவை” (Bremen) வழங்கியது (2002)

3- மூன்றாவது பரிசு - பூவரசு 12வது ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் பூவரசு கலை இலக்கியப் பேரவை (Bremen) வழங்கியது. (08.02.2003)

4- இரண்டாவது பரிசு - தமிழ் பிரவாகம் மடலாடற் குழுமம் நடாத்திய இலக்கியப் போட்டியில் ”பூத்த கொடி பூக்களின்றி” என்ற சிறுகதைக்காக தமிழ் பிரவாகம் மடலாடற் குழுமம் வழங்கியது (2008)

5- அரிமா சக்தி விருது - மனஓசை சிறுகதை நூலுக்காக (திருப்பூர் மத்திய அரிமா சங்கம் வழங்கியது) (17.05.2009)

6 அரிமா சக்தி விருது - நாளைய பெண்கள் சுயமாக வாழ... நூலுக்காக (திருப்பூர் மத்திய அரிமா சங்கம் வழங்கியது) (07.03.2021)

எழுதிய நூல்கள்:

1. மனஓசை (சிறுகதைத் தொகுப்பு - ஆவணி 2007)
2. அலையும் மனமும் வதியும் புலமும் (பத்திகள், 2019)
3. நாளைய பெண்கள் சுயமாக வாழ... (கட்டுரைகள், 2019)
4. யார் மனதில் யார் இருப்பார் (மின்னூல், 2020)

13 நான் மனஓசை என்ற பெயரில் ஒரு பதிப்பகத்தையும் இயக்கி வருகிறார், அதன் மூலம் இதுவரை ஒன்பது நூல்களைப் பதிப்பித்திருக்கிகிறார். பதிப்பித்த நூல்கள்:

1. தீட்சண்யம் - (கவிதைத்தொகுப்பு 2009 - தீட்சண்யன்)
2. தொப்புள் கொடி - (நாவல், 2009 - தெ. நித்தியகீர்த்தி, அவஸ்திரேலியா)
3. மூனாவின் நெஞ்சில் நின்றவை - (சிறுகதை, 2019, - மூனா)
4. அலையும் மனமும் வதியும் புலமும் (பத்திகள், 2019)
5. நாளைய பெண்கள் சுயமாக வாழ... (2019)
6. மறந்து போக மறுக்கும் மனசு - (சிறுகதை, 2019 - மூனா)
7. மூனாவின் கிறுக்கல்கள் - (CARTOON 2019 - மூனா)
8. The Bloodmoon´s are back – (Story 2020 - Nila , London)
9. பெருநினைவின் சிறு துளிகள் (நினைவுகள், 2020 - சிவா. தியாகராஜா)

# யேர்மன் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 4



## திருமதி கெங்கா தேவி ஸ்ரான்லி - யேர்மனி

இவர் முன்பு தமிழினி,லிங்கா என்ற புனைபெயரில் எழுதினார். ஆனால் இப்பொழுது திருமதி கெங்கா ஸ்ரான்லி என்ற பெயரில் எழுதிக்கொண்டிருக்கிறார்.

இவர் பிறந்த இடம் யாழ்ப்பாணம். சங்கிலியரசின் சங்கிலியன் தோப்புக்கு அருகாமையில் உள்ள இடம். ஆரம்பக் கல்வி காசிப்பிள்ளைப் பள்ளிக்கூடத்தில் பயின்று பின் கா.பொ.த உயர்தரம் வரை செங்குந்தா இந்துக் கல்லூரியிலும்,வித்தியானந்தாக் கல்லூரியிலும் பயின்றார்.

இவரது தந்தை தமிழ் ஆர்வலர். அதனால் இவரை பண்டிதர் இராமச்சந்திரன் (வெள்ளைதம்பி,வெள்ளை அண்ணர் என்று சொல்வார்கள்) அவரிடம் பண்டிதருக்கு படிக்க பணிக்கப்பட்டார். முடிக்கவில்லை. அவருடைய ஊக்கத்தால் எழுத்துதுறை ஆரம்பித்ததாக நன்றியுடன் பகிர்ந்தார். இலங்கை வானொலியிலும், வேறு சில சஞ்சிகைகளிலும் எழுதியும், எழுதிக்கொண்டும்வருகின்றார். .கவியரங்கம், பட்டிமன்றம், போன்ற மேடை நிகழ்விலும் பங்கு பற்றிக்கொண்டிருக்கின்றார்.

ஈழத்தில் தாதியராகப் (நர்ஸ்) பயின்று அமெரிக்கன் மிஷன் வைத்தியசாலையில் பணி புரிந்தார் .திருமணமாகியது, நாட்டு நிலைமை காரணமாக புலம் பெயர்ந்து ஜேர்மனிக்கு வந்தார்.

இங்கு ஜேர்மன் மொழி படித்துவிட்டு. முதியோர்கள் பராமரிக்கும் இல்லத்தில் தாதியராக பணி புரிகிறார். இங்கு தமிழாலயத்திலும் தமிழ் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக கடந்த பத்தாண்டுகளாக கடமை புரிகிறார்.

இங்கு பாரிஸ் ரி.ஆர்.ரி.றேடியோவில் தனது எழுத்துப்பணி மீண்டும் ஆரம்பமாகியது எனகினறார். கவிதை,கட்டுரை,சிந்தனைகள் என்று எழுதினார். அடுத்து லண்டன் தமிழ் வானொலியிலும் கவிதைகள் எழுதிக்கொண்டிருக்கினறார்.இப்பொழுது லண்டன் தமிழ் றேடியோ பாமுகத் தொலைகாட்சியாக இயங்குகிறது. இன்னும் எழுத்துப்பணி தொடர்கிறது. லண்டன் தமிழ் வானொலியாக இருக்கும் போது சிறுவர்களுக்கான போட்டி நிகழ்ச்சி நடத்தியதுள்ளார்.

இங்கு வெளிவந்த பூவரசு,சஞ்சிகையில் (தற்பொழுது இந்த சஞ்சிகை வெளிவருவதில்லை) எழுதிவந்தவர். 32 ஆண்டுகளாக யோ்மனியில் வெளிவரும் ”மண்”சஞ்சிகையில் பலதுறைபட்ட விடயங்களை எழுதிக்கொண்டிருக்கின்றார். மண் சஞ்சிகை நடாத்திய ஆண்டுவிழாப் போட்டிகளில் பரிசும் பெற்றுள்ளார்.

இன்னும் யோ்மனி ”தமிழ் டைம்ஸ்” பத்திரிகை, ”அகரம்”சஞ்சிகைகளுக்கும் எழுதும் பணி தொடர்கிறது.மேடை நிகழ்சிகள் மட்டுமல்ல,வில்லுப்பாட்டு, நாடகம்,(கிராமிய)பழக்கி மேடையேற்றி இருக்கிறார் .இப்படி நிகழ்ச்சிகள் தாயகத்திலும் செய்திருக்கிறார் .கடந்த மே மாதம் 2021 இரு கவிமாலை நிகழ்வுகள் லண்டன் தமிழ்றேடியோ பாமுகத்தில் நடத்தியதும் அதில் முதல் நிகழ்ச்சியில் 27 கவிஞர்கள் கலந்து சிறப்பித்தனர். இரண்டாவது நிகழ்வில் 50 கவிஞர்கள்,சிறியோர் ,இளைஞர்,பெரியோர் கலந்து சிறப்பித்தனர்.

யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உபசெயலாளராக, நிர்வாக உறுப்பினராக இருந்து இயங்கி வருகின்றார். சமூக்சேவை ஜெர்மனிய மக்களுக்கு டா.ஃபில்(Tafel) சேவையில் உதவி செய்வது, மொழிபெயர்ப்பு செய்வது போன்ற உதவிகளும் செய்து வருகின்றார். இவர் வெகு விரைவில் தனது கவிதைத் தொகுதி ஒன்றை தாயகத்தில் வெளியிடயுள்ளார். எழுத்துலகில் இன்னும் சாதிக்க வேண்டும் என்பது இவரது பெருவிருப்பாக உள்ளது. உங்கள் விருப்பஙகள் நிறைவேற வாழ்த்துகின்றோம். (அடுத்த இதழின் வேறு எழுத்தாளர்களின் விபரம் தொடரும்)

**யோ்மனிவாழ் பெண் படைப்பாளிகளே!..**

உங்கள் படைப்புகள் பற்றியும் உங்களைப் பற்றியும் அறியத்தாருங்கள். பலரும் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். ஆகவே தகவல்களை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இது ஒரு சந்தர்ப்பம்!..தவறவிடாதீர்கள்!..

# தனிநாயகம் அடிகளார்...

-கொங்கா ஸ்ரான்லி-



இலங்கையின் யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள தீவகத்துள் .கரம்பொன் எனும் சிற்றூரிலே தனிநாயகம் அடிகளார் பிறந்தார். அவருக்கு பெற்றார் இட்டபெயர் சேவியர்.தமிழ் மீது கொண்ட பற்றால் தனது பெயரைத் தனிநாயகம் என்று மாற்றிகொண்டார். இவர் ஊர்காவற்றுறை தூய அந்தோனியார் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார்.பின் உயர்கல்வியை யாழ்ப்பாணம் தூய பத்திரிசியார் கல்லூ ரியில் கற்றார்.

இறையியல் பல்கலைக் கழகத்தில் இறையியல் பட்டம் பெற்ற தனிநாயகம்.உரோமப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுத் தனிநாயகம் அடிகளானார்.இவர் இன்னும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி,தமிழ் இலக்கியத் துறைகளிலும் முதுகலைப் பட்டம் பெற்றார். அடிகளார் தமிழ் எபிரேய மொழிகளோடு ஐரோப்பிய மொழிகள் பதினெட்டிலும் புலமை பெற்று விளங்கினார்.இப் பன்மொழிப் புலமையோடு தொல் பொருளியல்,வரலாறு முதலிய இயல்களையும் கற்றுத் தேறினார்.

தனிநாயகம் அடிகள் பன்மொழிப் புலமையினால் தமிழின் தன்னிகரில்லாத சிறப்பினை உணர்ந்து.செம்மொழியாகிய தமிழின் மேன்மைகளை உலகெங்கும் பரப்பவேண்டும் என உறுதி பூண்டார்.அதன் பொருட்டு ஆயிரத்துதொள்ளாயிரத்து ஐம்பத்திரண்டாம் ஆண்டில்(1952)"தமிழர் பண்பாட்டுக் கழகம்" என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். கழகத்தை வளர்க்கவும் தமிழின் உயர்வை உலகிற்கு எடுத்துக் கூறவும் பன்னாட்டு செல்வுகளை மேற்கொண்டார்.

உலகெங்கும் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழி பற்றி பேருரைகள் ஆற்றினார். அறிஞர் குழாங்களிலும் ஆய்வுக் கருத்தரங்குகளிலும் அவர் நிகழ்த்திய உரைகளால் தமிழின் பெருமை உயர்ந்தது. அமெரிக்காவில் உள்ள பல்கலைக் கழகங்களில் மட்டும் ஓராண்டில் இருநூறு விரிவுரைகளை ஆற்றினார்.இதன் விளைவாகப் பிறநாட்டு அறிஞர் தமிழாய்வில் ஈடுபட்டனர். பன்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறைகள் அமைக்கப்பட்டன. தமிழாய்வுகள் தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் வெளிவந்தாலே உலக அரங்கை சென்றடையும் என உணர்ந்து அதன் பொருட்டு "தமிழ்ப்பண்பாடு,தமிழியல் இதழ்" என்றிரு ஆங்கில சிற்றிதழ்கள் வெளியிட்டார்.இதன்மூலம் பன்னாட்டு அறிஞரிடையே தமிழைப் பற்றி தெளிவான எண்ணங்களை உருவாக்கினார்.

உலகின் பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் தமிழ்ப் பேராசிரியர்கள் ஆண்டு தோறும் கூடித் தமிழாய்வு செய்யத் தமிழக அரசு உதவவேண்டும். என்ற கருத்தை முன்வைத்து தமிழாராய்ச்சி மன்றம் என்ற நிறுவகத்தை அமைத்தார்.1964 ம் ஆண்டில் கீழைத்தேய ஆய்வு மகாநாடு புதுடில்லியிலே நடைபெற்றது.இம்மாநாட்டிலே பங்கு பற்றிய பேராசிரியர் ஷான் பிரியோசா,கலாநிதி றொன் ஆஷர்,பேராசிரியர் தோமஸ் பறோ,பேராசிரியர் க.கணபதிபிள்ளை.பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம். பண்டிதர் க.பொ இரத்தினம்,ஆகியோர் ஒன்று கூட்டிய இம்மகாநாடு முடிந்தவுடன் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் அமைப்பதற்குரிய ஆலோசனைகளை அடிகளார் நடத்தினார்.மன்றம் அமைக்கப்பட்டது.மலேசியாப் பல்கலைக்கழக இந்தியவியல் துறையில் பேராசிரியாகவும் துறைத்தலைவராகவும் பணியாற்றிய அடிகளார்.

முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டினை மலேசிய அரசின் துணையுடன் கோலாலம்பூரில் 1966 ஆண்டு நடத்தினார்.தொடரந்து தமிழ்நாடு,பாரிஸ்,யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அடிகளாரால் நடத்தப்பட்டன.1974 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாநாட்டின் போது தமிழரின் சிறப்பை பொறுக்க முடியாத சிங்கள அரசின் காவற்துறை கூடி இருந்த தமிழர்களை கொன்று குவித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றிய அடிகளார் சமகாலத்தில் தமிழாய்விலும் ஈடுபட்டார்.சீன,மலாய் மொழிகளில் திருக்குறளை மொழிமாற்றுவித்தார். தமிழர் பண்பாடு,பழந்தமிழ்க் கல்வி பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார்.தாய்லாந்தில் இன்றும் திருவாசகம்,திருப்பாவை ஓதப்படுவதையும்.கம்போடியா,தாய்லாந்து மொழிகளில் பல தமிழ்ச் சொற்கள் இருப்பதையும் எடுத்துக்காட்டினார்.சுமாத்திராப் பழங்குடியினர் சேரர்,சோழர்,பாண்டியர் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுவதையும் கண்டறிந்தார்.இலத்தின்,பிரஞ்சு, ஆங்கில மொழி இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டிருந்த அடிகளார். அவற்றுடன் தமிழ் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்தார். அதன் மூலம் தமிழ் இலக்கிய ஒப்பியல் ஆய்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார்.

இன்று உலகின் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. தமிழில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்று வருகின்றன.பிறமொழியாளர் பலர் தமிழாய்வில் ஆர்வம் காட்டுகின்றனர் என்றால் அதற்கு தனிநாயகம் அடிகளார் என்பது மிகையல்ல."தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்கியவர்.தமிழின் அருமைபெருமை,இனிமையை,தொன்மையை உலகெங்கும் எடுத்துரைத்தார்.

தமிழர் தலைசிறந்த பண்பாட்டாளர் என்பதை பறைசாற்றினார்.20 ம் நூற்றாண்டில் பெருந் தமிழ்ப் பணிபுரிந்த பேரறிஞர் வரிசையில் தனிநாயகம் அடிகளுக்கு தனியிடம் உண்டு. அடிகளார் வாழ்ந்த காலத்து அரசியலிலும் கருத்தூன்றினார்.இலங்கை அரசினது சிங்களம் மட்டும் என்ற அரச மொழிச் சட்டத்தை எதிர்த்து அமைதிப்போராட்டங்களில் ஈடுபட்டார்.

தனது இறுதிப் பணியாக தமிழ்மறைவிருந்து என்னும் நூலை வெளியிட்டார். இந்த விழாவே அவர் கலந்து கொண்ட இறுதி நிகழ்வாகும்.1913 ம் ஆண்டு2 ம் திகதி எட்டாம் மாதம் பிறந்த அடிகளார் தமிழையே மூச்சாகக்கொண்டு தமிழுக்காகப் பணி செய்து தமிழுக்காக வாழ்ந்தவர்.தனது அறுபத்தேழாவது வயதில் இயற்கை எய்தினார்.அவர் மண்ணுலகில் மறைந்தாலும் தமிழர் உள்ளங்களில் என்றும் நீங்காது நிலைத்து வாழ்கிறார். ஏனெனில் அடியகளார் தமிழுக்கு செய்த தோண்டுகள் அளப்பரியது. அவரை நாமும் இந்நாளில் நினைத்துப் பார்க்கின்றோம்,தமிழோடு இணைந்தே தமிழர்களாக.

-----------------------------------------------------------------------------------------------------

**63ம் பக்கத் தொடர்ச்சி...**

பலஆண்டுகளுக்குமுன் வெளிவந்த மற்றும் சமகாலப் படைப்புக்களைத் தேடித்தேடி ஓடி ஓடிச் சேகரிக்கின்றார். சரித்திரம், அரசியல், சமயம், இசை, நாடகம், கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம் எனப்பல்வகைப் படைப்புகளோடு, வாழ்த்துமலர்கள், நினைவு மலர்கள், ஆண்டுவிழா மலர்கள், ஆலயமலர்கள், விளையாட்டு மலர்கள், கல்வி, கலாச்சார மலர்கள், சிறுவர்மலர்கள் எனப் பல்வகை அடங்கும். நானும் யேர்மனியில் பல படைப்பாளிகளிடம் சேகரித்து 2018ம் ஆண்டில் இரண்டுபெட்டி புத்தகளை நேரடியாக ஒப்படைத்திருக்கிறேன்.

இவரால் சேகரிக்கப்படும் நூல்களில் ஒரு பகுதி கனடா-ரொரன்டோ பல்கலைக்கழகத்திலுள்ள தமிழ்ப் பிரிவிலும் ஆவணப்படுத்தப்படுகின்றன. தமிழ் படைப்புகள் பல இடங்களில் ஆவணப்படுத்துதல் எதிர்காலத்தில் பயனளிக்கும். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் படைப்பாளிகளில் வெளியீடுகள் இங்கேயும் வைத்திருக்கமுடியாது, இலங்கைக்கும் அனுப்பமுடியாத நிலையில் பலர் காணப்படுகிறார்கள். இறுதியில் பலருடைய வெளியீடுகள் குப்பைத் தொட்டிக்குள் சென்றடைந்துவிடுவதும் சிலருக்கு நடந்துள்ளன.

நாம் இன்னும் எத்தனை ஆண்டுகள் இப்பூமியில் வாழப்போகின்றோம். ஆகவே நமது படைப்புகளை யாழ்-கொக்குவிலிலுள்ள நூலக நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். முடியாதவர்கள் ஐயர் அவர்களுக்கு அனுப்பி வைத்தால் அவர் உரிய இடத்தில் சேர்ப்பார். பலர் தமது கணனிகளில் தமது வெளியீடுகளை கணனிமயப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அந்தப் பதிவுகளையும் நீங்கள் அனுப்பலாம். எனவே இவ்விடையத்தில் புலம்பெயர்வாழ் படைப்பாளிகள் அதிக கவனம் எடுப்பது அவசியமாகும். அவரின் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரி.. 0044 203 8429417 WhatsApp 0044 7864037374 Email pathmanabhan@gmail.com

பத்மநாப ஐயர் எமது தமிழ் சமூகத்திற்காக செய்த அளப்பரிய சேவைகளை நாம் புறந்தள்ளிவிட முடியாது.தமிழுக்காக அர்ப்பணிப்புடன் பெருந்தொண்டாற்றிவரும் பத்மநாப ஐயரை நூறாண்டுகள் கடந்து ஆரோக்கியமாக வாழ இந்த அமுதவிழாவில் பாராட்டி வாழ்த்துவோம்!..

ஆசிரியர் ”மண்” கலை இலக்கிய, சமூக சஞ்சிகை


# *COVID-19 - முக்கியமான தகவல்!..

சுகாதார சீர்கேடு காரணமாக, சுகாதார நிபுணர்களான நாங்கள் இந்த செய்தியை மக்களுக்காக தயார் செய்துள்ளோம். இந்த பரிந்துரைகளை வைத்திருப்பது நல்லது, தடுப்பு முறைகள் ஒன்றும் அதிகம் இல்லை! 15-20 நிமிடங்கள் வெயிலில் இருங்கள் குறைந்தது 7-8 மணி நேரம் ஓய்வெடுத்துத் தூங்குங்கள். ஒரு நாளைக்கு ஒன்றரை லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும் அனைத்து உணவுகளும் சூடாக இருக்க வேண்டும் (குளிர்ச்சியாக அல்ல). கொரோனா வைரஸின் pH 5.5 முதல் 8.5 வரை இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே வைரஸை அகற்ற நாம் செய்ய வேண்டியதெல்லாம், வைரஸின் அமில அளவை விட அதிகமான கார உணவுகளை சாப்பிடுவதுதான். வாழைப்பழங்கள், எலுமிச்சை → 9.9 pH மஞ்சள் எலுமிச்சை → 8.2 pH Avocada fruit - pH 15.6 (அவகோடா) பூண்டு - pH 13.2 மாம்பழம் - pH 8.7 ஆரஞ்சு பழம் - pH 8.5 அன்னாசிப்பழம் - 12.7 pH வல்லாரைக் கீரை - 22.7 pH

இந்த தகவலை உங்களுக்காக மட்டும் வைத்திருக்காமல் அதை உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள் அனைவருக்கும் முக்கியமான செய்தி நீங்கள் குடிக்கும் சூடான நீர் உங்கள் தொண்டைக்கு நல்லது. ஆனால் இந்தக் கொரோனா வைரஸ் உங்கள் மூக்கின் பரணசால் சைனஸின் பின்னால் 3 முதல் 4 நாட்கள் வரை மறைக்கப்படுகிறது. நாம் குடிக்கும் சுடு நீர் அங்கு செல்வதில்லை. 4 முதல் 5 நாட்களுக்குப் பிறகு, பரணசால் சைனஸின் பின்னால் மறைந்திருந்த இந்த வைரஸ் உங்கள் நுரையீரலை அடைகிறது. நீங்கள் சுவாசிப்பதில் சிக்கல் இருக்கும்.அதனால்தான் நீராவி பிடிப்பது மிகவும் முக்கியம், இது உங்கள் பரணசால் சைனஸின் பின்புறத்தை அடைகிறது. இந்த வைரஸை மூக்கில் இருக்கும்போதே நீராவியால் கொல்லப்பட வேண்டும். 50 °C ,ல், இந்த வைரஸ் முடக்கப்பட்டுள்ளது, அதாவது முடங்கிப்போகிறது. 60 °C வெப்பநிலையில் இந்த வைரஸ் மிகவும் பலவீனமாகி எந்த மனித நோய் எதிர்ப்பு சக்தியும் அதற்கு எதிராக போராட முடியும். 70 °C க்கு இந்த வைரஸ் முற்றிலும் இறந்துவிடுகிறது.

நீராவி இதைத்தான் செய்கிறது.

வீட்டில் தங்கியிருப்பவர் ஒரு நாளைக்கு ஒரு முறை நீராவி பிடிக்க வேண்டும்.காய்கறிகளை வாங்க சந்தைக்குச் சென்றால், ஒரு நாளைக்கு இரண்டு முறை எடுத்துக் கொள்ளுங்கள். சிலரைச் சந்திக்கும் போதோ அல்லது அலுவலகத்திற்குச் செல்பவர்களோ ஒரு நாளைக்கு 3 முறை நீராவி எடுக்க வேண்டும்.மருத்துவர்கள் கருத்துப்படி, கோவிட் -19 மூக்கு மற்றும் வாயிலிருந்து நீராவியை உள்ளிழுத்து கொரோனா வைரஸை நீக்குகிறது. மக்கள் அனைவரும் ஒரு வாரம் நீராவி இயக்கி பிரச்சாரத்தைத் தொடங்கினால், தொற்றுநோய் விரைவில் முடிவுக்கு வரும்




# ஜேர்மனியில் பிறந்து வளர்ந்த இளையோரின் புதியசாதனை!..

## ஜேர்மனியில் அடுத்த தலைமுறையினரின் அரங்கேற்ற நிகழ்வு...

## புலம்பெயர் நாடுகளில் தமிழும் பாரம்பரிய கலைகளும் வளரும்..


**-கெங்கா ஸ்ரான்லி-**


அடுத்த தலை முறையினரால் கூட்டமைத்து தமிழ் கலைக்கு பெருமை சேர்த்த சிறப்பு அரங்கேற்றம் யோர்மனியில் புதியதொரு அத்தியாயத்தைப் படைத்துள்ளது.ஜேர்மனியில் கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக இயங்கிவரும் கிறீபீல்ட் நகர "ஆடற்கலாலயம்" நடனப்பள்ளி ஆசிரியை ரெஜினி சத்தியகுமாரின் மாணவன் நடன ஆசிரியர் செல்வன் நிமலன் சத்தியகுமார் அவர்களின் நட்டுவாங்கத்தில் அரங்கேற்றிய அரங்கேற்ற நிகழ்வு கடந்த 04.09.2021 சனிக்கிழமை மாலை ஜேர்மனி-டியூஸ்பேர்க் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நடனஆசிரியரும் தாயாருமான திருமதி ரெஜினி சத்தியகுமாரின் வழிகாட்டலில் அன்னையிடம் நடனம் பயின்று அரங்கேற்றம் கண்டவர்தான் இங்கு பிறந்து வளர்ந்த செல்வன் நிமலன். இன்று நடன ஆசிரியராக உயர்ந்து வளர்ந்து பயின்ற தனயன் அன்னையின் முன் இரு மாணவிகளையும் ஒரே மேடையில் அரங்கேற்றத்திற்கு நட்டுவாங்கம் செய்து சிறப்பாக நடத்தி முடித்திருப்பது வரலாற்றில் ஒரு திருப்பு முகமாக அமைந்திருக்கிறது.

அதாவது புலம் பெயர் நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழுடன் நடனக்கலையையும் கற்று இன்று நடன ஆசிரியராக பரிணமித்திருப்பது, அடுத்த தலைமுறையினர் நமது பாரம்பரியக் கலைகளில் ஒன்றான பரத நாட்டியத்தை எடுத்துச் சென்றிருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும். புலம் பெயர்ந்து வாழும் அடுத்த தலைமுறைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்தது. இது ஒரு புதிய சாதனையாகப் பதிவுபெறுகின்றது. தொடர்ச்சி 71ம்பக்கம்...

## உலக சாதனையாளர் "அமுதவிழா" நாயகருக்கு 24.08.2021 பிறந்தநாள்!..






## 80 அகவை காணும் மாபெரும் படைப்பாளி திரு பத்மநாப ஐயர் - படைப்பிலக்கியவாதி - லண்டன்

தமிழ் எழுத்தாளர், படைப்பாளர், ஆவணச் சேகரிப்பாளர், சமூகச்செயற்பாட்டாளர் எனப்பன்முக ஆளுமைபடைத்த பத்மநாப ஐயர் அவர்கள் (24.08.2021) இன்று தனது (80)எண்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். தமிழ்ப்புத்தக உலகில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்ட ஐயர் அவர்கள் தமிழுக்குச் செய்த பணிகளோ ஏராளம். யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து கல்விகற்றவர். இலங்கையின் பல பாகங்களிலும் அரச உத்தியோகம் செய்தவர். 1990 ஆண்டு புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்து வருகின்றார்.

இவரின் எண்பதாவது அகவையைப் பாராட்டிப் ”அமுதவிழா” ணுழழஅ வழியிலான நிகழ்வு ஒன்று கடந்த 15.08.2021 அன்று நடைபெற்றது. உலகத்திலுள்ள தமிழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள, நூலகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள், சஞ்சிகையாளர்கள், தமிழார்வலர்கள் எனச் சுமார் 200 பேர்வரை கலந்துகொண்டு வாழ்த்தையும் அவர் பணிகளையும் பாராட்டி மகிழ்ந்தனர். சுமார் 5 மணி நேரம் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்தப் பாராட்டுவிழாவில் அவரின் பன்முகப் பணிகளை எடுத்துரைத்து மகிழ்ந்தனர். அமுதவிழா நாயகனுக்குப் பலரால் பல பட்டங்கள் வழங்கப்பட்டதைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்..

-ஈழத்தமிழ்ப் புத்தகக் காவலர். -தமிழ் இலக்கியத்துறையில் இயங்குதிசை.
-இலக்கிய உலகின் அமுத சுரபி. -எண்ணிம நூலகத்தின் சிரஞ்சீவி.
-புத்தகங்களைக் காதலிப்பவர். -வாழும்போதே வாழ்த்தப்படும் புனிதன்.
-அனைத்து உலக இலக்கியப் பாலம் அமைத்தவர். -நூல்களை ஆராதிப்பவர்.

திரு பத்மநாபஐயர் அவர்களை எனக்குக் கடந்த ஐந்து வருடங்களாகத்தான் அறிமுகமானார். அவரின் பணிகளால் கவரப்பட்ட நானும் பல நூல் சேகரிப்புக்களை செய்து அவரிடம் கொடுத்துள்ளேன். உண்மையில் இப்படி ஒரு மனிதரை என் வாழ்நாளில் கண்டது கிடையாது. அவரின் பணிகள் தொடர வேண்டும். இன்னும் பல ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்னும் நோக்கில் அவர் வாழும்பொழுதே கௌரவிக்கப்பட வேண்டும் என்னும் நல் நோக்கில் முப்பது ஆண்டுகள் கடந்து புலம்பெயர் தேசத்தில் வெளிவந்துகொண்டிருக்கும் ”மண்” கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் (195 வது இதழ்) 2019 வைகாசி-ஆனி இதழின் இவரை அட்டைப்படத்தில் பிரசுரித்து மகிழ்தோம்.

மனைவியை இழந்து பல வருடங்கள், பிள்ளைகள் மூவர் வேறுநாடுகளில் இவர் தனியாகவே வாழ்ந்துகொண்டு வயதுபோன காலத்தில் மாபெரும் சேவையைச் செய்துகொண்டிருக்கிறார்.உலகம்வாழ் தமிழ்ப் படைப்பாளிகளின் வெளியீடுகளை ஆவணப்படுத்துவதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார். அதற்காக இங்கிலாந்தில் வசித்துக்கொண்டு ஐரோப்பா நாடுகளில் வாழ்ந்துவரும் படைப்பாளிகளின் வெளியீடுகளைச் சேகரித்து தாயகத்துக்கு அனுப்பி வருகிறார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள ”நூலக நிறுவனம்” என்னும் ஆவணப்படுத்தல் நிறுவனம் நீண்டகாலமாக இயங்கி வருகின்றது. இந்த நிறுவனத்தில் பதினைந்து இருபதுபேர் உலகில் வெளியாகும் தமிழ்ப்படைப்பாளிகளின் வெளியீடுகளை கணனி மயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு வரலாற்றுப் பதிவுக்கூடமாக இயங்குகின்றது. இதை நான் 2018ம் ஆண்டு தாயகம் சென்றபோது நேரில் பார்வையிட்டதுடன் ஒரு தொகுதி நூல்களையும் கையளித்தேன்.

இந்த நிறுவனத்தில் பலநூறு வருடங்களாக வெளிவந்த தமிழர்களின் பலவகையான படைப்புகள் அங்கே கணனி மயப்படுத்தப்படுகின்றன. இந்த நிறுவனத்திற்குத்தான் ஐயர் அவர்கள் மாதாமாதம் பெட்டி பெட்டியாகப் பல வெளியீடுகளைச் சேகரித்து தனது செலவில் கடல், வான் மார்க்கமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார். இதுவரை பல ஆயிரம் நூல்களை அனுப்பியதுடன் தொடர் பணியாகச் செய்து வருகின்றார். லண்டனிலுள்ள அவரின் வீட்டுக்குப் போய் பார்த்த பல படைப்பாளிகள் ஆச்சரியப்பட்டு அவரின் பணிகளை மெச்சி வாழ்துவார்கள். அவரது வீட்டில் மலைபோல சகல அறைகளிலும் அடுக்கி வைத்திருக்கிறார். அவற்றைத் தரம்பிரித்து பகுதி பகுதியாக அனுப்பிக்கொண்ட இருக்கின்றார். இந்தக்காட்சி அவரின் 80வது பிறந்தநாள் காணொளி வீடியோப் பதிவில் ஒளிபரப்பப்பட்டது குறிப் பிடத்தக்கதாகும். தொடர்ச்சி 59ம்பக்கம்...

# ஜேர்மனிய பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2021
Bundestag Wahl (German Federal Election)



Armin Laschet
அர்மின் லஸ்செற்
CDU



Olaf Scholz
ஒல்வ் சொல்ஸ்
SPD

யேர்மனிய பாராளுமன்றத்தை Bundestag என்று அழைப்பார்கள். நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது இந்த நாட்டின் அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 26.09.2021ம் திகதி யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களிலும் நடைபெறுகின்றது.

இத்தேர்தலானது 20 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலாகும். யேர்மனிய நாட்டுத் தேர்தல் முறையில் அரசியல் கட்சிக்கும் கான்சிலராகத் தெரிவுசெய்யப்படுபவருக்கும் மக்கள் வாக்களிப்பார்கள். இறுதியில் எந்தக் கட்சி கூடுதலான வாக்குகள் பெற்றுக்கொள்கிறதோ, அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் நாட்டின் Bundeskanzler கான்சிலராகத் (Chancellor) தெரிவு செய்யப்படுவார்.

இவர்தான் நாட்டின் அதிகாரம் மிக்க பதவியில் இருப்பார். யேர்மனியைப் பொறுத்தளவில் கடந்த 15 ஆண்டுகளாக அங்கலா மேக்கல் (Angela Merkel) என்ற பெண்மணியே ஆட்சியைத் திறப்படநடாத்திவந்தார். இவர் CDU கட்சியின் தலைவராகவும் கான்சிலராகவும் (Bundeskanzler) இருந்து ஓய்வு பெறுவதால் இத்தேர்தலில் போட்டியிடாமல் இன்னொருவர் போட்டியிட விட்டுக் கொடுத்துள்ளார்.

யேர்மனிய அரசியல் வரலாற்றில் CDU கட்சி அல்லது SPD கட்சி தான் கூடுதலாக ஆட்சியில் இருந்துள்ளன. பின்னர் இரண்டு மூன்று கட்சிகளும் கூட்டணி அமைத்து ஆட்சியை பிடித்தன. ஆனால் கடந்த இரண்டு தேர்தல்களிலும் பிரதான கட்சிகளான CDU ஆளும்கட்சியும் எதிர்கட்சியும் SPD ஒன்று சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தன.

நாட்டில் அண்மையில் நடைபெற்ற சில மாநிலங்களின் தேர்தல்களின் முடிவுகள், மற்றும் வெளிநாட்டு அகதிகள் வரவு, கொரோனா நெருக்கடி, வேலைவாய்ப்பு,பொருளாதார நெருக்கடிகள், சுற்றுச்சூழல், நாட்டின் பாதுகாப்பு,

வெளிநாட்டுக் கொள்கை, அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு போன்ற பல நெருக்கடிகளால் மக்கள் விரக்தியில் இருப்பதாகத் தெரியவருகின்றது. இதனால் எந்தக் கட்சியும் அறுதிப்பெரும்பான்மை பெறமுடியாத நிலைதான் காணப்படுகின்றது. ஆதலால் மீண்டும் கூட்டரசாங்கம் அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆகவே எந்தக்கட்சி வெற்றி பெற்று யார்?.. நாட்டின் கான்சிலராகவருவார் என்பதைப் 26.9.2021வரை பொறுத்திருந்து பார்ப்போம்...

மேலேயுள்ள படங்களிலுள்ளவர்களில் கட்சிகளின் தலைவர்களான அர்மின் லஸ்செற் அல்லது ஒல்வ் சொல்ஸ் (Armin Laschet , Olaf Scholz ) இவர்களில் ஒருவர்தான் கான்சிலராக வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் தற்போதய அரசியல் சூழலில் யார்? வெற்றிபெறுவார் என்று கூறமுடியாத நிலையே காணப்படுகின்றது. போட்டியிடும் கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும் கான்சிலர் பதவிக்கான முதன்மை வேட்பாளர்களின் விபரங்களைப் பார்ப்போம்.. (ஆங்கிலத்திலும் டொச்சிலும்

| | | |
|---|---|---|
| Armin Laschet | - CDU | - Christian Democratic Union of Germany<br>(Christlich Demokratische Union Deutschlands) |
| Markus Söder | - CSU | - Christian Social Union in Bavaria (CSU).<br>(Christlich-Soziale Union in Bayern) |
| Olaf Scholz | - SPD | - Social Democratic Party of Germany<br>(Sozialdemokratische Partei Deutschlands) |
| Alice Weidel &<br>Tino Chrupalla | - AfD | - Alternative for Germany<br>(Alternative für Deutschland) |
| Christian Lindner | - FDP | - Free Democratic Party<br>(Freie Demokratische Partei) |
| Janine Wissler &<br>Dietmar Bartsch | - Left | - The Left<br>(Die Linke) |
| Annalena Baerbock | - Green | - Alliance 90/The Greens<br>(Bündnis 90/Die Grünen) |

| | |
|---|---|
| 1- CDU | - கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி |
| 2- CSU | - கிறிஸ்தவ சமூக முன்னணி பவேரியா (பயான்) |
| 3- SPD | - சோஷலிச ஜனநாயகக் கட்சி |
| 4- A&D | - மாற்றத்திற்கான ஜேர்மனிய கட்சி |
| 5- FDP | - சுதந்திர ஜனநாயகக் கட்சி |
| 6- Die Linke | - இடதுசாரிக்கட்சி |
| 7- Grünen | - பசுமைக்கட்சி |

தேர்தலில் அரசியல் முப்பதுக்கும் மேற்பட்ட சிறிய-பெரிய அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. இவற்றில் முக்கியமான இந்த ஏழு கட்சிகளுமே அதிகப்படியான வாக்குகளைப் பெறுவது வழக்கமாகும். இதில் ஒரு கட்சி அல்லது கூட்டாகப் பல கட்சிகள் சேர்ந்து அரசை அமைக்கும்.26.9.2021 வரை பொறுத்திருந்து பார்ப்போம்..

# 32வது ஒலிம்பிக் போட்டிகள் - 2021

## டோக்கியோ - யப்பான்




யப்பான்-டோக்கியோவில் 23.07.2021 - 08.08.2021 வரை இடம்பெற்ற சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் பல சுவார்சியமான சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன. இச்சம்பவங்கள் உலகம் வாழ் விளயாட்டு ரசிகர்களை மெய்சிலிர்க்க வைத்தன என்றே கூறலாம். வெறும் வியைாட்டு என்றிராமல் நிறம், இனம், நாடு, மொழி என்னும் வேறுபாடுகளைக் கடந்து நட்பு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, மனித நேயத்தை இந்த ஒலிம்பிக் போட்டிகள் வியைாட்டு வீரர்கள் மூலம் உலக மக்களுக்கு எடுத்துக்கூறியருப்பது சிறப்பான விடையமாகும்.

கொரோனா நெருக்கடியின் மத்தியில் வெற்றகரமாக நடைபெற்று முடிந்த இந்தப் போட்டியில் இடம்பெற்ற பல சுவையான சம்பவங்களால் உலகம்வாழ் கோடான கோடி மக்கள் சந்தோசக்கடலில் மூழ்கியதுடன் பல சம்பவங்கள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன என்றே கூறலாம். ஒலிம்பிக் வரலாற்றில் இடம்பெற்ற சில விடையங்களைப் பார்ப்போம்!...

-1936ம் ஆண்டு யோ்மனி ஒலிம்பிக்கில்தான் முதன்முறையாக நேரடியாகத் தொலைக்காட்சி உளிபரப்பு இடம்பெற்றது.

-1936 ம் ஆண்டு மெக்ஸிக்கோ ஒலிம்பிக்கில்தான் முதன் முதல் பெண் ஒருவர் ஒலிம்பிக் தீபம் ஏற்றியிருக்கிறார்.

-1972ம் ஆண்டு யோ்மனி முனிச்நகர ஒலிம்பிக்கில் பலஸ்தீனியா்களால் இஸ்ரேல் நாட்டு வீரா்கள் சிலா் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆளாகினாா்கள். இந்த ஒலிம்பிக்கில் விளையாடிய யோ்மனிய வீராங்கனையை சுவீடன் நாட்டு இளவரசா் காதலித்துத் திருமணம் செய்து இன்றுவரை சுவீடன் நாட்டு அரசியாக இருக்கிறாா்.

-1980 ம் ஆண்டு ஒலிம்பிக் ரஷ்ஷியாவில் நடைபெற்றது. ரஷ்ஷியா - ஆப்கானிஸ்தான் மோதல்கள் காரணமாகப் பல நாடுகள் பங்குகொள்ளவில்லை 80 நாடுகள் கலந்துகொள்ள 66 நாடுகள் புறக்கணித்தன.

-இனவெறி அரசு என 32 ஆண்டுகள் ஒலிம்பிக் போட்டியில் தடைவிதிக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்கா 1992 ஸ்பெயின் ஒலிம்பிக்கில்தான் மீண்டும் கலந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது.
-2016ம் ஆண்டு றியோ-பிறேசில் ஒலிம்பிக்தான் தென்னமெரிக்காக் கண்டத்தில் இடம்பெற்ற முதலாவது ஒலிம்பிக் போட்டியாகும்.
-இதுவரை அதிக தடவைகள் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடு அமெரிக்கா..1904, 1932, 1984, 1996.
-இதுவரை அதிக தடவைகள் (3) ஒலிம்பிக் நடைபெற்ற நகரம் லண்டன் மாநகரம்தான் 1908, 1948, 2012.
-இங்கிலாந்து, பிரான்ஸ், கிறீஸ்லாந்து, அவுஸ்திரேலியா, சுவீஸ்லாந்து என 5 நாடுகளும்தான் அனைத்து ஒலிம்பிக் போட்டிகளிலும் கலந்து கொண்டிருப்பதுடன் குறைந்தது ஒரு தங்கப்பதக்கத்தையாவது பெற்றிருக்கின்றன.

## 32வது டோக்கியோ - யப்பான் ஒலிம்பிக் போட்டிகள்...

-206 நாடுகளைச் சேர்ந்த 11.326 வீரர்கள் பங்குகொண்டனர். 33 பிரிவுகளில் 339 போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் 340 தங்கம், 338 வெள்ளி, 402 வெங்கலம் என மொத்தமாக 1080 பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன.
-அமெரிக்கா தொடர்ந்து 7 முறை 1 வது இடத்தைப் பிடித்துச் சாதனை நிலைநாட்டியுள்ளது.
-கொரோனா அச்சுறுத்தல் பங்குகொண்ட வீரர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி. பல போட்டியாளர்கள் போட்டிகளிலிருந்து விலகினர். பலர் கலந்துகொள்ளவில்லை என அறிவித்தனர்.
-மிக வயதில் குறைந்தவர் 12 வயதில் சிரியா நாட்டுப் பெண் மேசைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டார்.
-முதலாவது தங்கப் பதக்கம் எடுத்தநாடு சீனா. 10 மீட்டர் பெண்கள் துப்பாக்கி சுடும் போட்டியில் யாங்கிங் என்ற பெண்மணி பெற்றார்.
-முதலாவது உலக சாதனைப் பதிவாகியது பெண்கள் 4 ஓ 100 மீட்டர் பிறஸ்டைல் நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலியப் பெண்கள் 3.29.69 நிமிட சாதனை நிகழ்த்தினர்.
-ஒலிம்பிக் வரலாற்றில் 13 வயது வீராங்களை புதிய சாதனை. அதாவது வயதில் குறைத்தவர் நீச்சல் போட்டியில் யப்பான் தடகள வீராங்கனை வீரா நிஷியா மோமிஜி தங்கம் வென்றார்.
-சர்வதேச எதிலிகள் ஒலிம்பிக் அணி (Refugee Olympic Team) 2016 பிறேசில் ஒலிம்பிக்கில் முதன்முறையாக 10 வீரர்கள் கலந்து கொண்டனர். 2021 டோக்கியோ ஒலிம்பிக்கில் 29 வீரர்கள் கலந்துகொண்டனர்.
-ஜூடோ போட்டியில் சகோதரனும் சகோதரியும் 30 நிமிட இடைவெளியில் இருவரும் ஆண் - பெண் போட்டிகளில் தங்கம் வென்றனர். 23 வயது ஆண் ஹ∴புமி, 21வயது பெண் யுட்டா அபே.

-1924ம் ஆண்டு தொடக்கம் போட்டிகளில் பங்குகொண்டுவந்த பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு இதுவே முதலாவது தங்கப்பதக்கம். 97 ஆண்டுகளுக்குப்பின், 2021 டொக்கியோ ஒலிம்பிக்கில் 55 கிலோ பளுத்தூக்கும் போட்டியில் ஹிடிலின் டயஸ் என்ற பெண் தங்கப்பதக்கம் வென்றார்.

-4 X 200 மீட்டர் நீச்சல் போட்டியில் சீனப் பெண்கள் புதிய உலக சாதனை 7நிமி 40 செக் 33 மில்.செக்கனில் நீந்திச் சாதனை நிகழ்த்தினர்.

- வெறும் 62.034 பேர் சனத்தொகை கொண்ட முதன் முதலாகத் தங்கம் வென்ற Bermuda என்ற சிறிய மத்திய அமெரிக்காவின் குட்டித்தீவுப் பெண் (Triathlon) நீச்சலும் ஓட்டமும் கலந்த வியைாட்டில் தங்கம் வென்றார். இவரது பெயர் Flora Duffy.

-13 வயதுச் சிறுமியும் 58 வயதுத் தாத்தாவும் இந்த ஒலிம்பிக்கில் பதக்கங்கள் பெற்று போட்டிக்கு வயது இல்லை என்றதை நிரூபித்திருக்கிறார்கள். 13 வயது யப்பான் சிறுமி மோமிஜி நிஷியா, ஸ்கேட் போட்டிங் என்ற போட்டியில் தங்கம் வென்றார். குவைத் நாட்டுத் தாத்தா 58 வயது அப்துல்லா அலி ஆண்கள் துப்பாக்கி சுடும் போட்டியில் வெங்கலப் பதக்கத்தை வென்றார்.

-100 மீட்டர் ஓட்டப் போட்டியில் 33 வருட சாதனையை முறியடித்த பெண்கள். அதாவது 1ம் 2ம், 3ம் இடங்களைப் பெற்று ஜமேக்கா நாட்டு வீரப்பெண்கள்10.61 செக்கனில் ஓடிமுடித்து புதிய சாதனை படைத்தனர். 1988ம் ஆண்டுச்சாதனையை 33 வருடங்களின் பின் இந்த வீராங்கனைகள் முறியடித்திருக்கிறார்கள்.

-100 மீட்டர் ஓட்டம் ஆண்கள் பிரிவில் மிக நீண்ட காலத்தின் பின்பு இத்தாலிய நாட்டு வீரர் எல். எம் யாக்கோப் முதன்முறையாகத் தங்கப்பதக்கத்தை வென்று அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜமேக்கா நாடுகளின் வீரர்களுக்குப் பதிலடிகொடுத்து வரலாற்றுச் சாதனை படைத்தார்.

-50 மீட்டர் ஸ்ரைல் நீச்சலில் ஆண்கள் பிரிவில் அமெரிக்க நாட்டவரான டிரெசல் என்பவர் 21.7 செக்கனில் நீந்திப் புதிய உலக சாதனையை நிலைநாட்டினார். இவர் இந்த ஒலிம்பிக்கில் மொத்தமாக 6 தங்கப்பதக்கங்களைப் பெற்றார்.

-ஒரே ஒலிம்பிக்கில் பெண்கள் பிரிவில் நீச்சல் போட்டியில் 7 பதக்கங்களைப் பெற்ற (4 தங்கம் 3 வெங்கலம்) அவுஸ்திரேலிய வீராங்கனை எம்மா மெக்கியான் புதிய சாதனை படைத்தார். இதற்கு முன்னர் 1952ம் ஆண்டு கிழக்கு யேர்மனியப் பெண்மணி பெற்ற ( 6 பதக்கங்கள்) சாதனை முறியடிக்கப்பட்டது.

-ஒலிம்பிக் வரலாற்றில் இந்தியா ஆண்கள் ஹெக்கிப்போட்டியில் முன்னர் 8 தடவைகள் தங்கம் வென்றிருந்தது.1980ல் கடைசியாகப் பெற்றது. அதன்பின் எந்தப் பதக்கமும் பெறமுடியவில்லை. 41 வருடங்களின் பின் இந்தியா இந்த ஒலிம்பிக்கில் 3வது இடத்தைப் பிடித்து வெங்கலப் பதக்கத்தைப் பெற்றது.

-தத்திமிதித்துப் பாய்தல் என்றும் முப்பாய்ச்சல் என்றும் கூறப்படும் பெண்கள் பிரிவுப் போட்டியில் வெனிசூலா நாட்டு வீராங்கனை யுலிமார் றோஜஸ் என்பவர் 15.67 மீட்டர்

தூரம் பாய்ந்து புதிய உலக சாதனை. பழைய சாதனை உக்ரைன் நாட்டுப்பெண்மணி இனெஸ்ஸாவின் சாதனை 15.50 மீட்டராகும்.

-ஊக்கமாத்திரைப் பாவனையால் ரஷ்ஷிய நாட்டு போட்டியாளர்கள் பலர் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் ஏனைய விளையாட்டு வீரர்களைக் கருத்திற்கொண்டு (சு.மு.ஊ) ரஷ்ஷிய ஒலிம்பிக் கமிட்டி என்ற பெயரில் 335 வீரர்கள் கலந்து கொண்டனர்.

-தனது முன்னைய சாதனையைத் தானே முறியடித்தார். நோர்வே நாட்டவரான ஆண்கள் 400 மீட்டர் தடைதாண்டி ஓட்டத்தில் 45.94 செக்கனில் ஓடிப் புதிய சாதனையைப் பதிவு செய்தார். இவரின் பழைய சாதனை 46.70 செக்கன்களாகும்.

-பெண்கள் கூடைப்பந்துப் போட்டியில் அமெரிக்காப் பெண்கள் அணி தங்கத்தைப் பெற்றது. தொடர்ச்சியா நடைபெற்ற 7 ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க அணியானது தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டமை வரலாற்றுச் சாதனையாகும்.

-மல்யுத்தப் போட்டி பெண்கள் பிரிவில் ஒலிம்பிக் வரலாற்றில் முதற்தடவையாகத் தங்கம் வென்றார் அமெரிக்க நாட்டவரான கறுப்பினப் பெண்.இவரின் பெயர் தமிரா மென்ஸாஸ்டாக்.

-உயரம் பாய்தல் ஆண்கள் பிரிவில் இரட்டைத் தங்கம் இது ஒலிம்பிக் வரலாற்றில் புதிய முடிவு. கட்டார் நாட்டைச் சேர்ந்த முடாஸ் பர்ஷிம் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கியன் மார்க்கோ. இருவரும் ஒரே சமமான 2.37 மீட்டர் உயரத்தைப் பாய்ந்து இருவரும் தங்கப் பதக்கம் பெற்றபோது உலகமே அதிசயத்துப் பார்த்தது.

-400 மீட்டர் பெண்கள் தடைதாண்டி ஓடுதல் போட்டியில் அமெரிக்க நாட்டுப் பெண்ணான சிட்னி மைக்லாக்ரின் 51.46 செக்கனில் ஓடிப் புதிய சாதனையை நிலைநாட்டினார். பழைய சாதனை 51.90 செக்கன்.

-சுமார் 100 ஆண்டுகளின் பின் இந்தியர் ஒருவர் ஆண்கள் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்றார். இவரது பெயர் நிராஜ் சொப்ரா. எறிந்த தூரம் 87.58 மீட்டர்.

-2016 றியோ-பிரேசில் ஒலிம்பிக்கில் குண்டெறிதல் போட்டியில் 1, 2, 3 இடங்களைப் பெற்ற மூவரும் 2021 டோக்கியோ ஒலிம்பிக்கிலும் அதே இடங்களைப் பிடித்து முதன்முறையாக அரிய சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

| | 2016 ஒலிம்பிக் | - | 2021ஒலிம்பிக் |
|---|---|---|---|
| ரியாஸ் -அமெரிக்கா | 1வது இடம் | - | 1வது இடம் |
| ஜோகோவக்ஸ் -அமெரிக்கா | 2 ” | - | 2 ” |
| டோமாஸ் வோல்ஸ்-நியூசிலாந்து | 3 ” | - | 3 ” |

கடந்த 15 நாட்களாக இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகள் 8.8.2021ல் நிறைவுபெற்றன. பல கோடி ரசிகர்களைக் கொள்ளைகொண்ட இப்போட்டியானது 32வது போட்டியாகும். அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் 2024 கோடை காலத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளன. டோக்கியோ ஒலிம்பிக்கைக் கண்டுகளித்த மகிழ்வோடு, அடுத்த பாரிஸ் ஒலிம்பிக்கை வரவேற்று விடைபெறுவோம்!..

2021 டோக்கியோ ஒலிம்பிக்கில் பதக்கங்கள் பெற்ற 10 முன்னணி நாடுகள்...

2020 Summer Olympics medal table

| Rank | Team | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | United States | 39 | 41 | 33 | 113 |
| 2 | China | 38 | 32 | 18 | 88 |
| 3 | Japan* | 27 | 14 | 17 | 58 |
| 4 | Great Britain | 22 | 21 | 22 | 65 |
| 5 | ROC | 20 | 28 | 23 | 71 |
| 6 | Australia | 17 | 7 | 22 | 46 |
| 7 | Netherlands | 10 | 12 | 14 | 36 |
| 8 | France | 10 | 12 | 11 | 33 |
| 9 | Germany | 10 | 11 | 16 | 37 |
| 10 | Italy | 10 | 10 | 20 | 40 |
| 11–93 | Remaining teams | 137 | 150 | 206 | 493 |
| Totals (93 teams) | | 340 | 338 | 402 | 1080 |

## பரா ஒலிம்பிக் போட்டிகள்

2021 ஒலிம்பிக்கின் இன்னொரு பகுதி விளையாட்டுதான் ”பரா” ஒலிம்பிக் என்று அழைக்கப்படும் மாற்றுத்திறனாளிகளின் போட்டிகளாகும். இந்த ஒலிம்பிக் போட்டிகள் 24.08.2021 தொடக்கம் 05.09.2021 வரை யப்பான் -டோக்கியோவில் நடைபெற்றன. வெற்றிக் கிண்ணங்களைப் பெற்ற முதல் பதின்மூன்று நாடுகளின் விபரங்களைப் பார்ப்போம்...

| நாடு | தங்கம்- | வெள்ளி- | வெங்கலம் |
|---|---|---|---|
| 01- Volksrepublik China | 80 | 46 | 44 |
| 02- Großbritannien | 37 | 29 | 38 |
| 03- Russisches - Paralympisches Komitee | 32 | 27 | 42 |
| 04- USA | 28 | 31 | 23 |
| 05-Ukraine | 21 | 43 | 25 |
| 06-Brasilien | 19 | 14 | 23 |
| 07-Niederlande | 19 | 11 | 14 |
| 08-Australien | 18 | 25 | 27 |
| 09-Italien | 13 | 26 | 22 |
| 10-Aserbaidschan | 11 | 1 | 4 |
| 11-Deutschland | 10 | 10 | 15 |
| 12-Iran | 10 | 8 | 1 |
| 13-Spanien | 9 | 13 | 11 |

## 61ம் பக்கத் தொடர்ச்சி.. பரதநாட்டிய அரங்கேற்றம்..

இந்தக் கொவிட் -19 காலத்திலும் சிரமம் பார்க்காது தனது மாணவிகளைப் பயிற்றுவித்து மேடையேற்றியது. பாராட்டப்படவேண்டிய விடையமாகும். சகோதரிகளான செல்விகள் ரோசிகா, ராசிகா ரவிக்குமார் இருவரின் அரங்கேற்றம் ஒரே மேடையில் நடைபெற்றது. அரங்கேற்றத்திற்கு அதிக சிரத்தையுடன், சிரமம் பாராத உழைப்பாகும். அரங்கேற்ற நாயகிகளின் உருப்படிகளில் நன்கு மிளிர்ந்தது.அவையும் அதிர்ந்தது. அலங்கார மேடை, பல வர்ணமின்னொளி, நாட்டியத்தாரகைகளின் பல வர்ண ஆடைகள் அணிகலன்கள் அனைத்துமே இந்த அரங்கேற்ற நிகழ்வுக்கு மெருகூட்டின.

ஆரம்பத்தில் நாதஸ்வரத்துடன் மங்கலமாக மாணவிகள்,குரு விருந்தினர் சகிதம் உள்ளே வந்து, மேடையில் ஏறினார்கள். இறையருள் வேண்டி பூஜை செய்தார்கள். அரங்கேற்ற நாயகிகள் ரோசிகா,ராசிகா,ரவிக்குமார் சகோதரிகளுக்கு ஆசானின் ஆசீர்வாதத்துடன் சலங்கை அணிவித்தார். புஸ்பாஞ்சலியுடன் விநாயகர் துதியுடன் இறை ஆசியுடன் ஆரம்பமானது.அடுத்து அலாரிப்பு,நவரசம் பொங்கிவர, பாரதியார் பாடல்,ஒன்பது பாடல் எடுத்து நவரசமாக பிழிந்து சாறாக பருகத்தந்தனர்.

தொடர்ந்து கௌத்துவம், வர்ணம், தில்லானா, கீர்த்தனம், பதம், ஜதி, மங்களம் என ஒவ்வொன்றாக அரங்கேறின. பாரதியார் பாடல், கண்ணன் பாடல்களால் அபிநயம் புரிந்த ஆடலரசிகளின் நடனங்கள் சபையேரைக் கட்டிப்போட்டன என்றே கூறலாம். நட்டுவாங்கம்:-நிமலன் சத்தியகுமார்(குரு) பாட்டு:- திரு நிரூஜன் ஜெகஜோதி. மிருதங்கம்:-திரு லகீபன் தர்மபாலன். வயலின்:-பிரசாத் பரமேஸ்வரலிங்கம். வீணை:-சிவானுஜன் சிவகுமாரன். நிகழ்ச்சி தொகுப்பாளர்கள்:-ஐ.பி.சி தொகுப்பாளர் முகுந்தன். திருமதி. அனினா அஸ்வின்.செல்வி. ஷாமிலி அசோகன்.செல்வி. தகாலினி அசோகன். இவர்கள் அனைவரும் இங்கு பிறந்து தமிழுடன் கலைகளையும் பயின்று வளர்ந்த தவர்களாவர். இளையோராலே இளையோரின் அரங்கேற்ற நிகழ்வு சிறப்புக்கண்டது என்பது பெருமையான விடையமாகும்

ஆடற்கலாலத்தால் கடந்த முப்பது வருடங்களாக யோர்மனியில் இருபது அரங்கேற்றங்கள் நடாத்தி முடிக்கப்பட்டன. ஆனால் இந்த அரங்கெற்றம் ஒட்டுமொத்தமாக இளைய நடன ஆசிரியரான செல்வன் நிமலன், உட்பட அனைவரும் இளை தலைமுறையினரால் நடாத்திமுடிக்கப்பட்ட முதலாவது அரங்கேற்றம் என்றே கூறவேண்டும். இது ஒரு சாதனை நிகழ்வாகவே கருதலாம். இந்நிகழ்வைக் கண்டுகளித்த சுமார் நாநூறு பேர்வரையான பார்வையாளர்கள் பலர் பெரும் ஆனந்தக் களிப்பில் காணப்பட்டதுடன் அரங்கேற்றம் கண்ட செல்விகளையும் நடன ஆசிரியரையும் பக்கவாத்திய இசைக் கலைஞர்களையும் வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தனர். அரங்கேற்ற நிகழ்வு மனமகிழ்வுடன், சிற்றுண்டிகள், இராப்போசனம் மேலும் மகிழ்வுதர இரவு பத்துமணியளவில் விழா இனிதே நிகழ்வு கண்டது. நல்லதொரு விழாவைப் பார்த்த மகிழ்வோடு அனைவரும் விடைபெற்றுச் சென்றனர். வாழ்க!!.. வளர்க!!...உலகெல்லாம் தமிழும் பாரம்பரிய கலைகளும் பரவட்டும்!..

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை - 480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் - 480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00

07. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

08. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

09. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00

10. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

11. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-07-2021 (மேலதிகச் செலவு) + 14-19

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)------------------------------

480-00 + 480-00

--------------

+ 494-19

அனுப்பியது..

(1) ”அருளகம்” அகிலாண்டேஸ்வரி சிறுவர் இல்லம் -480-00
வவுனியா
(2) ”செபமாலை” இரக்கத்தின் இல்லம் சிறுவர்காப்பகம் -480-00
பேசாலை - தலைமன்னார் -----------
-960-00

”மண்” சஞ்சிகை கணக்கு வங்கிவரி:--

01.07.2021 - 31.07.2021 - 13.13
01.08.2021 - 31.08.2021 - 16.03 - 29-16

-----------------------------------------

- 989-16 - 989-16

---------------

மிகுதி கையிருப்பு 31-08-2021 (மேலதிகச் செலவு) - 494-97

---------------

UNITED MIND
Association for Sustainable Community Development
(Non-profit organisation)

Date: 23/07/2021

வை.சிவராசா
பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும்,
இதழின் வாசகர் பெருமக்களுக்கும்.

**நன்றிநவிழ்தல்**

**“பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது”**

**பொருள்:** பயன்கருதாதவர் செய்த உதவியின் நன்மையினை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலையும் விட அளவினால் மிகப் பெரியதாகும். என்பது வள்ளுவன் வாக்கு

வாக்கிற்கமைய ஐரோப்பா தாண்டி மலையகம் நோக்கிய **நிவாரணம்!** இணைத்தது **மொழி,** வாழ்க **தமிழ்!**

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் எமது மலையக தமிழ் மக்கள் 58 தோட்டங்களில் 232 பிரிவுகளில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய இம்மக்களுக்கு, நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் **யேர்மனி "மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை** வழங்கிய கொடையளிப்பானது ஏறத்தாள **220** ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பசியாற்றிஇருப்பதை குறித்து பெருமைக் கொள்கின்றோம். நீங்கள் செய்திருக்கும் இக்கைங்கரியமானது காலத்தின் தேவைக்கேற்ற பெரும்புண்ணியமாகும்.

எவ்விதமான பிரதி உபகரணமும் எதிர்பாராமல் இவர்கள் செய்த உதவி கடலினும் பெரிதாகும். **2,26,030.10** ரூபா பெறுமதியான இந்த நிவாரணப் பணியானது உண்மையில் பசியோடு வழிப்பார்த்திருந்த பலர் பசியாற்றிருக்கின்றது என்பதில் எச்சந்தேகமுமில்லை. உதவிக்கரம் நீட்டிய எம் உறவுகளை ஒரு போதும் மறவோம். எம்மக்கள் சார்பாக **"மண்"** கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும், இதழின் வாசகர் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது”**

**நன்றிகள்**

இவண்
க.சிவராஜ்வளவன்
தலைவர்

+94 45 449 4514, +94 766 161 522 | unitedmind.lk@gmail.com
No.72, Reservoir Road, Ratnapura, Sri Lanka.

# ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
# ඔළිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
# Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 FarmNo:-0213204790 Mobile:-0774868085
Fax:-0774868085 Viber:-0774868085

Reg.No:- MU/DS/TNK/RVSS/22/2015


திகதி :- 28/07/2021

வை.சிவராஜா
மண்சஞ்சிகை
ஜேர்மனி

**உதவி கோரல் தொடர்பானது**

ஒளிரும் வாழ்வு அமைப்பானது முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் அமைந்துள்ளது எமது அமைப்பானது 2012ம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும்நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது தற்போது மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற முதியோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள் ஆகிய இலக்குக் குழுவினர் மத்தியில் அவர்களின் கல்வி, மருத்துவம், வாழ்வாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்துவருகிறது. இதனுடன் நிரந்தர வருமான செயற்பாட்டை அதிகரிக்கும் நோக்குடன் உணவு உற்பத்தி நிலையம், ஒருங்கிணைந்த இயற்கை விவசாயப்பண்ணை போன்றவற்றை உருவாக்கி பாதிக்கப்பட்டோருக்கு தொழில்வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளோம். தற்போது இவறிறல் கிடைக்கும் வருமானம் பணியாளர்களின் மாதாந்த ஊதியத்திற்கே போதுமானதாக உள்ளது.

இவ்வாறன நிலையில் எமது பிரதேசத்தில் விசேடதேவைக்குட்பட்ட பிள்ளைகளின் உளஆற்றல் மற்றும் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்குடன் **மகிழ்வு இல்லம்** என்னும் செயற்பாட்டை செயற்படுத்தி வருகிறோம் இவ் மகிழ்வு இல்லத்தில் பங்குபெறும் பிள்ளைகளிற்கு இதுவரை காலமும் வாரத்தில் இரண்டு நாட்கள் அவர்களிற்கான மகிழ்வூட்டும் செயற்பாட்டை செயற்படுத்திவந்தோம். இருப்பினும் அவர்களது குடும்ப வறுமை, அவர்களிற்கான ஆற்றுப்படுத்தல் தேவையின் அவசியத்தின் அடிப்படையிலும் வாரத்தில் ஐந்து நாட்களாக மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் வாரத்தில் இரண்டு நாட்கள் செயற்பாடு இடம்பெற்றபோது வாடகைப்பணம் செலுத்தியே முச்சக்கரவண்டியில் பிள்ளைகளின் போக்குவரத்து செயற்பாட்டை மேற்கொண்டு வந்தோம் அதற்காக 21,600.00 ரூபா பணம் செலவாகியது. ஆனால் தற்போது ஐந்து நாட்களாக மற்றும் போது இத் தொகை பன்மடங்காக அதிகரிக்கும் இதனால் நிரந்தரமாக இத்தொகையினை பெறமுடியாமையினால் பிள்ளைகளை எமது இடத்திற்கு அழைத்து தொடர் செயற்பாட்டை செயற்படுத்த முடியாமலுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய எமக்கு ஒரு நிரந்தரமான வாகனத்தினை பெறவேண்டியுள்ளது. அவ்வாறான வாகனம் ஒன்றைப்பெற்றுக்கொள்வதற்கு ஐம்பது லட்சம் ரூபா பணம் தேவையாகவுள்ளது இதற்கு தங்களாலான நிதிப்பங்களிப்பினை நாம் எதிர்பார்ப்பதோடு இந்த வாகன கொள்வனவிற்கு ஏற்படும் வரவு செலவு கணக்குகளை தங்கள் பார்வைக்கு தெரியப்படுத்துவோம். எமது பிரதேசத்திலுள்ள மாற்றுத்திறனாளி பிள்ளைகளிற்கு நீங்கள் ஆற்றும் இவ் உதவி போற்றுதற்குரியது என்பதுடன் நாம் என்றும் தங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதனையும் தயவுடன் அறியத்தருகின்றோம்.

**நன்றி**

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

# தாயகச் செய்திகள் சில..

-இலங்கையில் 7 - 8 லட்சம் மாணவர்களுக்கு இணையவசதிகள் இல்லை என முன்னாள் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.
-நாட்டில் இடம்பெற்றுவரும் வெவ்வேறு விபத்துக்களால் நாளாந்தம் பாதிக்கப்படுவோர் 10.000 பேர். இறப்பு 25 - 30 பேர் வரை எனசுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
-இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் சமார் 4.000 சிறுவர் துஸ்பிரயோக முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக பொலிஸ் தகவல் தெரிவித்துள்ளது.
-சீனக் கொடியுடன் புதிய 1.000 ரூபா நாணயங்களை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது.
-புதிய நிதி அமைச்சராக பஸில் ராஜபக்ஸ நியமிக்கப்பட்டார். 5 அமைச்சர்கள் பதவிகளை மாற்றி அமைத்தார் ஜனாதிபதி.
-வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாற்றியமைக்கப்பட்டது.
-1.1.2021 -30.6.2021 வரையுள்ள 6 மாதங்களின் வீதிவிபத்துக்களால் 1.266 பேர் இறப்பு. 7.177 பேர் காயம். போக்குவரத்து பொலிஸ் பகுதியினர் தெரிவிப்பு.
-இலங்கையில் வருடாந்தம் 3.50.000 குழந்தைகள் பிறப்பு. கொரோனா தொற்றுக் காரணமாக பிறப்புவீதம் குறைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
-வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராகச் சிங்களவரான பந்துலசேனா நியமனம் இவர் முன்னர் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்துள்ளார். தற்போது 9 மாகாணங்களிலும் சிங்களவர்கள்தான் இப்பதவியில் உள்ளனர்.
-இலங்கையில் வருடத்தில் 800 பேர்வரை நீரில் மூழ்கி மரணம். 21 - 60 வயதினரே அதிகம்பேர் உலகில் வருடாவருடம் சுமார் 2.20.000 பேர்வரை இப்படி இறக்கிறார்கள்.
-இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 82வது ஆண்டுவிழாவை நிறைவுசெய்தது.
-இலங்கையில் வருடாவருடம் 2.700 வாய்ப்புற்று நோயாளிகள் உருவாகுகிறார்கள். அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
-நாட்டில் 18 வயதுக்குக்கீழ் உள்ள சுமார் 45.000 சிறுவர்கள் பல்வேறு வேலைகளுக்கு அமர்த்தப்பட்டிருப்பதாக தொழிற்திணைக்கள சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.
-இலங்கை வங்கி தனது 82வது ஆண்டை நிறைவு செய்துள்ளது.
-வீரகோசரி பத்திரிகை நிறுவனம் 91வது ஆண்டை நிறைவு செய்துள்ளது.(6.1.1930)
-1.1.2021 - 31.7.2021 வரை சுமார் 900 கோடி பெறுமதியான ஹரோயின் போதை மீட்கப்பட்டதாகவும் 15.000 பேர்வரை கைது என பொலிஸ் பகுதியினர் தெரிவிப்பு.
-சர்வதேச அளவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையில் இலங்கை 2வது இடத்தில். சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை அறிவித்துள்ளது.
-தடுப்பூசி போடாதவர்களில் 92 வீதம்பேர் கொரோனாவால் பலியாகியுள்ளனர். கட்டுப்படுத்த 30.6.21 வரை அரசுக்கு 262 பில்லியன் ரூபா செலவு. போக்குவரத்துத் துறைக்கு 80 லட்சம் ரூபா நட்டம். 16 வெளிநாடுகளில் பணிபுரியும் 4.800பேரில் 142 பேர் இறப்பு. இந்த நோய் இலங்கையில் பேரவலமாக உருவெடுத்துள்ளது.

# உலகச்செய்திகள் சில..

-உலகிலுள்ள மொத்தச் சனத்தொகையில் 70 நாடுகளில் சுமார் 30 கோடிபேர் வேடுவர் (ஆதிவாசிகள்) இனத்தவர்கள் வாழ்கிறார்கள்.
-சீனக்கம்யூனிஸ்ட் கட்சி தனது 100வது ஆண்டுநிறைவைக் கொண்டாடியது.
-கோடைகாலத்தில் கனடாவில் 40 - 50 பாகை வெப்பம் 500 பேர்வரை இறப்பு.
-எந்தியோப்பியாவில் வரலாறுகாணாத பசி, பட்டினி, வறுமை 40லட்சம்பேர்பாதிப்பு. 1லட்சம் குழந்தைகள் உயிர் ஆபத்தில் ஐ.நா.சபையின் அறிக்கை கூறியுள்ளது.
-டுபாயில் உலகின் மிக அழமான நீச்சல்குளம் திறந்துவைக்கப்பட்டது. 60 மீட்டர் ஆழம். 1கோடி 40 லட்சம் லீட்டர் தண்ணீர் கொள்வனவு. பாதுகாப்புக்காக 164 மின்விளக்குகள் 56 கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.
-இந்தியப் பிரதமர் மோடியின் ஆட்சியில் தற்போது 11 பெண்கள் அமைச்சர்களாகப் பதவி பெற்றுள்ளனர்.
-பங்களாதேஷ் ஆலை ஒன்றில் தீவிபத்து 52 பேர் பலி 100 பேர்வரை காயம்.
-உலகில் பட்டினியால் நிமிடத்துக்கு 11 பேர் இறப்பு என ”ஒக்ஸ்பாம்” நிறுவனம் தெரிவித்துள்ளது.
-கியூபாவில் 1950 ஆண்டு கம்யூனிஸ்ட் ஆட்சி ஆரம்பித்தபின் முதன்முதலாக உணவு, விலை ஏற்றம் , நிதி நெருக்கடி மிகப்பெரும் மக்கள் போராட்டம் நடைபெற்றது.
-தென்னபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவான போராட்டம் 300 பேர்வரை பலி. இந்தியா வம்சாவழியினரின் கடைகள், நிறுவனங்கள் கொள்ளையிடப்பட்டன.
-2020ம் ஆண்டில் குழந்தைகளுக்கு வழமையாகப் போடவேண்டிய தடுப்பூசிகள் 2.30 கோடி குழந்தைகளுக்குப் போடப்படவில்லை என உலக சுகாதாரநிறுவனம் அறிவிப்பு
-அமெரிக்கா-கலிபோர்ணியாவில் 2.44.000 ஏக்கர் துருக்கியில் 2.50.000 ஏக்கர் கிறீஸ்லாந்து, இத்தாலி நாடுகளிலும் ஆடிமாதம் எற்பட்ட காட்டுத்தீயில் காடுகள் எரிந்து நாசம். இதனால் உலக சுற்றுச் சூழலுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. 20 பேர்வரைபலி. கடந்த 142 வருடங்களின் பின் 2021 யூலைமாதம்தான் பூமியில் அதிகூடிய வெப்பம் பதிவாகியுள்ளது.
-உலகிலேயே மிக உயரமான இடத்தில் 52 கி.மீ தூரத்திற்கு வீதி அமைத்து இந்தியா சாதனை. இந்தியா கிழக்கு லடார் பகுதியில் 19.300 அடி உயரத்தில் இந்த வீதி அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு விடப்பட்டுள்ளது. இதற்கு முந்திய சாதனை பொலிவியா நாட்டில் 18.953 அடி உயரத்தில் அமைக்கப்பட்டதாகும்.
-இந்தியாவின் 75வது சுதந்திரதினம் நாடுமுழுவதும் கொண்டாடப்பட்டது.
-ஹெட்டி நாட்டில் 7.2 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2.500 பேர்வரை பலி.
-யப்பான் கிழக்குப் பகுதியில் வெள்ளப்பெருக்கு 10 லட்சம்பேர் பாதிப்பு.
-கடந்த 20 ஆண்டுகால யுத்தத்தை முடித்துவிட்டு அமெரிக்கா மற்றும் கூட்டுப்படைகளும் 1.23.000 பொதுமக்களும் ஆப்கானிஸ்தானைவிட்டு முற்றாக வெளியேறினர்.

## ஆப்கானிஸ்தானின் நெருக்கடி நிலை..

உலகில் இன்று இந்தநாடு முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது. கடந்த 20 ஆண்டுகள் வெளிநாட்டுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இந்தநாடு. வெளிநாட்டுப்படைகள் 2021 வெளியேறியதன் பின்பு படிப்படியாக நாட்டின் பெரும்பகுதிகளை தலிபான்கள் தமது கட்டுப்பட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். தலைநகர் காபுல் மற்றும் விமான நிலையம் 31.8.21வரை அமெரிக்க கூட்டுப்படைகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன.கூட்டுப்படைகள் தலிபான்கள் மோதலில் யூலைமாதம் மட்டும் 1659 தீவிரவாதிகள் பலியாகியிருக்கிறார்கள். 2021 ஏப்ரல் தொடக்கம் யூலைவரை படைதரப்பில் 4.000 பேரும் பொதுமக்கள் 2.000 பேரும் பலியாகியிருக்கிறார்கள்.

ஆப்பானிஸ்தானில் தொடரும் அவலங்கள்...

மீண்டும் போர் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது...உலகநாடுகளின் அடுத்த நடவடிக்கைகள் என்ன?..வியப்பிலும் கவலையிலும் உலக நாடுகள் நெருக்கடியில்..ஆப்கானிஸ்தான் நாட்டின் தலிபான் போராளிகளின் பிடி நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் நாடு முழுவதும் சீரழிந்து இன்று காணப்படுவதுடன் அந்த நாட்டில் நாளை என்ன?..நடக்கும் என்று உலகநாடுகளே வியப்புடன் நோக்கிக்கொண்டிருக்கின்றன. உலகிற்கே அச்சுறுத்தலாகக் காணப்படும் இந்த நாட்டில் 27.8.2021ல் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 13 அமெரிக்க இராணுவத்தினர் உட்பட பொதுமக்கள் நூறுபேர்வரை பலியாகியதுடன் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர்.

தலைநகர் காபுலையும் தலிபான்கள் கைப்பற்றினர். ஆனால் விமானநிலையம் அமைந்துள்ள பகுதிகளைக் கைப்பற்றமுடியவில்லை. இதை விட இன்னோரு பிராந்தியத்தையும் தலிபான்கள் கைப்பற்றமுடியாமல் போராடுவதாகவும் தெரியவந்துள்ளது. விமான நிலையத்தைச் சூழவுள்ள பிரதேசம் முற்றுமுழுவதுமாக அமெரிக்கப் படைகளும் நேட்டோ நாடுகளின் படைகளும் முகாமிட்டு, விமானநிலையத்தைக் காவல்காக்கின்றனர்.

தலிபான்களின் கெடுபிடிகளுக்கு அஞ்சி நாட்டைவிட்டு வெறியேறிப் பல ஆயிரக்கணக்கான ஆப்கான் மக்கள் முண்டியடித்து அலைமோதிக்கொண்டிருக்க, பல ஆயிரக்கணக்கான பொதுமக்களும் அங்கு கடமைபுரிந்த பல வெளிநாடுகளின் அரச, பாதுகாப்பு, பொது நிறுவனங்களில் கடமைபுரிந்தவர்களும் தமது சொந்தநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். ஆனால் இன்னும் பலர் தமது நாடுகளுக்குத் திரும்பமுடியாமல் தத்தளிக்கின்றனர். அமெரிக்கா மற்றும் கூட்டுப்படையினர் விமானநிலையத்தைப் பாதுகாத்து பிரயாண ஒழுங்குகளைச் செய்து வருகின்றனர். முண்டியடிக்கும் மக்கள் கூட்டத்தில் நெரியுண்டும் துப்பாக்கிச்சூட்டுக்கும் 50 பேர்வரை இறந்துள்ளனர். பல ஆயிரக்கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லமுடியாமலும் திரும்பி தமது நாட்டுக்குள் செல்லமுடியாமலும் தலிபான்களுக்குப் பயந்து விமானநிலையத்திலேயே தஞ்சமடைந்து பல நாட்கள் கிடக்கின்றனர்.

2001 - 2021 வருட 20 ஆண்டு காலப்போரில் வெளிநாடுகளின் கூட்டுப்படைகளின் இழப்புகள். அமெரிக்கா 2.433, அமெரிக்கா 456, கனடா 159, பிரான்ஸ் 89, யேர்மனி 62, இத்தாலி 53, எனைய நாடுகள் 337 என 3.690 படையினர் பலியாகினர். இப்போரில் 67.000 - 72.000 வரையிலான தலிபான் போராளிகளும் பொதுமக்களுமாக7.10.2001 தொடக்கம் 15.08.2021வரை 2.12.200 பேரும் பலியாகியுள்ளனர். 25.000 மேற்பட்டவர்கள் கை, கால் அவையங்களை இழந்தனர். 2001 செப்டெம்பர் 11ம்திகதி தலிபான் அமைப்பினரால் அமெரிக்க இரட்டைக்கோபுர விமானத்தாக்குதல் நாலாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தோடு. அமெரிக்கா, நேட்டோ நாடுகள், மற்றும் நேசநாடுகளின் படைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து படை எடுத்து தலிபான்களை அடக்கி, கொன்று குவித்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து அடுத்தடுத்து தேர்தல்களையும் நடாத்தி பாராளுமன்ற ஆட்சியை மலரப்பண்ணினார்கள். 2001 தொடக்கம் இற்றைவரை 2021 ஆகஸ்ட் மாதம்வரை சுமார் 20 வருடங்கள் நிறைவுகண்டன. பலநாடுகளும், ஐக்கிநாடுகள்சபை, ஐரோப்பிய யூனியன், உலகநாணயசபை போன்றவை பெருவாரியான (2.261 பில்லியன் டொலர்)நிதி, பொருள், ஆளணி உதவிகளை வழங்கி புதிய ஆப்கானைக் கட்டி எழுப்பினர். இதனால் நாடு பலவழிகளிலும் முன்னேறிவரும் நாடாகக் இன்று காணப்பட்டது. அமெரிக்கா, மற்றும் கூட்டுப்படைகள் இந்த ஆண்டு ஆகஸ்டில் முற்றுமுழுதாக விலகிக்கொள்ளும் என்று அறிவித்ததன் பின் தலிபான்களின் அதீத வளர்ச்சியால் முன்னேறிப் படிப்படியாக தலைநகரில் அமைந்துள்ள விமான நிலையத்தைத் தவிர ஆப்கானிஸ்தான் முழுவதையும் தம் கட்டுப்பாட்டுக்குள் 2021 ஆகஸ்ட்மாத முற்பகுதியில் கொண்டு வந்தனர்.

இந்தமாதம் 31ம் திகதிக்குள் வெளிநாட்டுப் படையினர் முற்றுமுழுதாக வெளியேறுவதில் பல இடையூறுகள் இருந்து வருகின்றன. திட்டமிட்டவாறு வெளியேறுவார்களா?.. அல்லது காலம் தாழ்த்துவார்களா?.. என்பது கூறமுடியாதுள்ளது. தலிபான்களின் காலக்கெடு முடிவடைய இன்னும் மூன்று நான்கு நாட்கள்தான் இருக்கின்றன. ஆதலால் படைவிலகள் சாத்தியப்படாவிட்டால் தலிபான்களின் தாக்குதல்கள் தொடங்குமா?..மீண்டும் போர் வெடிக்குமா?.. மக்கள் பேரழிவு, படையினர், தலிபான்களின் உயிர் அழிவு தொடருமா?. என்பது எல்லாம் கேள்விக்குறியாகக் காணப்படுகின்றன. சமாதானத்தையும் சக வாழ்வையும் நேசிக்கும் உலக மக்கள் போரையும் அழிவுகளையும் ஆதரிக்கவில்லை. சமாதான வழிமுறைகளில் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு அமைதி நிலவவேண்டும் என்றே உலக மக்கள் விரும்பிக் காத்திருக்கின்றனர். உலகில் அமைதி, சமாதானம் மலரவேண்டும் என்பதே எல்லோரும் விரும்பும் விடையமாக இன்று காணப்படுகின்றது. உலகம் போர் ஒழிந்து சமாதன பூமியாக மலரட்டும்!....

# தமிழ்ப்பெண் எழுத்தளர்கள் விபரத்திரட்டு!...
# யேர்மனிய தமிழ்ப்பெண்களுக்கு அரிய வாய்ப்பு!..




யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களின் விபரப்பட்டியல்இதுவரை காலமும் எவராலும் தயாரிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்படவில்லைஎன்பது துர்அதிஸ்டவசமே. பெண்களில் திறமைகள், ஆளுமைகள்,கல்விப்பணிகள், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ப் பணிகள்,சமூகப்பணிகள் எனப்பல்வேறு பொதுப்பணிபணிகளைச் செய்துவரும்தமிழ்ப்பெண்களை உலகம்வாழ் நம்மக்களுக்கு அறியப்படுத்த வேண்டியது காலத்தின்கட்டாயாகும்.

யேர்மனியில் வாழ்ந்துவரும் தமிழ்ப்பெண்களில்பல பெண்கள் கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், இலக்கியவாதிகள்,பேச்சாளர்கள், பொதுப்பணியாளர்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலாளர்கள்எனப் பல்வகை ஆளுமைமிக்கவர்களாகக் காணப்படுவது சிறப்பான அம்சமாகும்.எனவே இப்பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ்ப்பெண்களின் விபரத்திரட்டு ஒன்றைவெளிக் கொண்டுவரும் முயற்சியில்,ஆவணப்பதிவு ஒன்றைத்தயாரித்து நூலாக உருவாக்கும் பணியில்ஈடுபட்வருகிறோம்.


நீங்களும் உங்கள் தகவல்கள், தரவுகளைத் தந்து உதவினால்இப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.காலம் தாழ்த்தாது விரைவாகத் தங்கள் தகவல்களை அனுப்பி உதவலாம்... நன்றி!.. **திருமதி சாந்தினி துரையரங்கன்.** Essen - Germany.
மின்னஞ்சல் niruthiyam@hotmail.de "மண்"சஞ்சிகை" v.sivarajah@arcor.de

**குறிப்பு:-** யேர்மனியில் வாழும் ஆண் + பெண் எழுத்தாளர்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் யேர்மனி படைப்பாளர்கள் கழகத்தினரால் "படைப்பாளர்கள்" என்னும் நூலும் உருவாகி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். எனவே யேர்மனிவாழ் படைப்பாளர்கள் தமது விபரங்களை கீழ்க்குறிப்பிடும் மின்னஞ்சலுக்கு அனுப்பினால் இந்த நூலிலும் தங்கள் விபரங்கள் பதிவாகும் என்பதனையும் அறியத்தருகிறோம்!..
மின்னஞ்சல்:- germantamilwriter @outlook.com

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 209



லண்டன் - திரு பத்மநாபஐயர் ”அமுதவிழா” 80வது பிறந்தநாள்
24.08.2021
வாழும்போதே வாழ்த்தப்படும் படைப்பிலக்கியவாதி, இலக்கிய உலகின் அமுதசுரபி, தமிழ் இலக்கியத்துறையின் இயங்குதிசை.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |